ETAKAM - 2024

# PROCEEDINGS

*"Knowledge Empowerment: Libraries as Catalysts for Excellence"*

## Symposium on Library and Information Science-2024

## ETAKAM -2024

**12th and 13th of September, 2024**

**Library**
**University of Jaffna**
**2024**

JUICE - 2024
"Striving for Excellence"

# PROCEEDINGS OF THE

## SYMPOSIUM ON LIBRARY AND INFORMATION SCIENCE - 2024
## (ETAKAM-2024)

***Knowledge Empowerment:***
***Libraries as Catalysts for Excellence***

**September 12-13, 2024**
**Library Auditorium, University of Jaffna**

**Under the sphere of**
**Jaffna University International Research Conference**
**(JUICE - 2024)**

**Library**
**University of Jaffna**
**Sri Lanka**
**2024**

## Disclaimer:

This work is distributed under the terms of the creative commons attribution 4.0 license (unless stated otherwise) which permits unrestricted use, distribution, and reproduction in any medium, provided the original work is properly cited. Copyright is retained by the author(s). All data, views, opinions and information published in this proceedings are the sole responsibilities of the authors. Library, University of Jaffna is not responsible for them.

**Editorial Committee**

Editor Mrs.K.Murugathas

Editorial Committee Members

Dr. (Mrs.) K.Chandrasekar
Dr.S. Ketheeswaren
Mrs.L.Umashankar
Mr.S.Shanmugathasan
Mrs.T.Janen

Layout & Designing

Mr.M.Kohulan
Mr.R.Thananchayan

ISBN : 978-624-6150-37-2
Copyright© : Library, University of Jaffna.
Published by : Libray, University of Jaffna, Jaffna, Sri Lanka.
Website : https://www.lib.jfn.ac.lk/
Email : edi.etakam@univ.jfn.ac.lk
Printed by : Mathicolours, Nallur, Jaffna.

# Message from the Vice-Chancellor



The "Symposium on Library and Information Science - 2024 (ETAKAM-2024)" marks a significant event as part of the Golden Jubilee celebration of the University of Jaffna, commemorating 50 years of academic pursuit and dedicated community service. This symposium provides a unique opportunity to explore the transformative power of libraries in shaping the collective future.

The theme, **"Knowledge Empowerment: Libraries as Catalysts for Excellence,"** encapsulates the vital role libraries play in today's rapidly evolving world. Far beyond being mere repositories of books, modern libraries are dynamic centres of learning, innovation, and community engagement. They empower individuals by providing equitable access to knowledge, fostering innovation, and supporting lifelong learning.

The journey of library services of the University, which began with the establishment of the Jaffna Campus of the University of Ceylon in 1974, is a testament to growth and adaptability. From its humble beginnings with collections focused on the humanities and sciences, primarily built through donations from Tamil Pandits and scholars, the library has evolved into a comprehensive resource centre. Today, it boasts eight branch libraries and a special unit for Tamilology collection and has embraced digital transformation with automated systems, digital repositories, and archiving units that preserve and disseminate unique collections, including valuable ola leaves and hand written manuscripts.

This evolution reflects the library's commitment to meet the diverse needs of its users while upholding the fundamental values of access, fairness, and intellectual freedom. The establishment of digital repositories and archiving units demonstrates a forward-thinking approach to preserving cultural heritage and making it accessible to a wider audience.

The Golden Jubilee celebration of the University, especially for the library brings an opportunity to reflect on past achievements and envisage future innovations. The library's journey from a core collection built by donations to a fully automated system with enormous collections and digital capabilities is inspiring. It showcases the potential for growth and adaptation in service of the university community and beyond.

At the juncture of this golden year symposium, I extend my gratitude to all who have worked tirelessly to make this event possible. The organizing committee, esteemed speakers, and participants bring their unique qualities to create a harmonious and enriching intellectual experience. This symposium serves as a fertile ground where new ideas can take root, collaborations can flourish, and knowledge can grow exponentially.

May this symposium inspire all participants to envision new possibilities for libraries as catalysts for excellence and knowledge empowerment. The insights gained and connections forged during this event will undoubtedly contribute to the continued evolution of library and information sciences, benefiting not only the University of Jaffna but the wider regional community.

Wishing everyone a meaningful, inspiring, and productive symposium.

**Prof. S. Srisatkunarajah**
Vice-Chancellor and Professor in Mathematics
University of Jaffna.



# Message from the Symposium Chair

It is with great pleasure that I extend a warm welcome to all of you for the "Symposium on Library and Information Science - 2024 (ETAKAM -2024)", to be held on September 12-13, 2024, at the University of Jaffna. This symposium is a significant event that brings together professionals, academics, researchers, and students from around the globe to share insights, innovations, and advancements in the field of Library and Information Science (LIS).

As we gather to discuss and explore the latest trends and challenges, I encourage you to engage in meaningful dialogues, exchange ideas, and forge collaborations that will shape the future of our profession. The knowledge and experiences shared during this symposium will undoubtedly contribute to the advancement of LIS and inspire new approaches in our work.

Thank you for your participation, and I look forward to the fruitful discussions and outcomes that will emerge from this gathering.

**Dr.(Mrs.) K. Chandrasekar**
Librarian (Acting)
University of Jaffna.

# Message from the Symposium Convener



It is a great pleasure to welcome the participants, distinguished speakers, and esteemed guests to the "Symposium on Library and Information Science - 2024 (ETAKAM-2024)" organized by the Vithiananthan Library, University of Jaffna. This symposium is part of the Golden Jubilee celebrations and the centenary of the first Vice-Chancellor of the University, Professor S. Vithiananthan.

The theme, **"Knowledge Empowerment: Libraries as Catalysts for Excellence"** underscores the vital role of libraries in community development and lifelong learning. The program features keynote speech, project presentations, library exhibition, and a theme seminar on "Libraries for Community Development".

Gratitude is extended to the speakers, sponsors, and all contributors who have made this symposium possible. Special appreciation goes to the dedicated organizing committee the team at the Vithiananthan Library, whose steadfast support and meticulous efforts have been instrumental in making ETAKAM-2024 a distinguished and impactful event.

It is hoped that this symposium will serve as a catalyst for building new partnerships, generating innovative ideas, and contributing significantly to the field of library science.

Let me wish a fruitful and intellectually rewarding symposium.

**Dr. S. Ketheeswaren**
Convener
Symposium on Library and Information Science - 2024
University of Jaffna.

# Message from the Symposium Secretary



I am deeply honoured to serve as the Secretary for the "Symposium on Library and Information Science - 2024 (ETAKAM - 2024)" which coincides with the Golden Jubilee of the Library and University of Jaffna. On behalf of the symposium committee, I would like to extend a warm welcome to you all.

This year's symposium, themed "Knowledge Empowerment: Libraries as Catalysts for Excellence" stands out as we have invited abstracts focusing on ongoing or recently completed projects in university, public, schools, and special libraries at the local, national, and international levels.

I want to express my heartfelt gratitude to everyone involved – our General Chair, Professor Sivakolundu Srisatkunarajah (Vice Chancellor, University of Jaffna); Symposium Chair, Dr. (Mrs) K.Chandrasekar (Librarian (Acting), University of Jaffna); Keynote Speaker, Mr. Sundar Ganesan (Director, Roja Muthiah Research Library, Chennai, India); Valedictory Speaker, Emeritus Professor Pon. Balasundarampillai (Former Vice Chancellor, University of Jaffna); Chair of Theme Seminar, Dr.R.Maheswaran (Librarian, University of Peradeniya); Invited Speakers of Theme Seminar, Session Chairs, the dedicated Organizing Committee, Pannel of Reviewers, Authors, Presenters, Participants, Sponsors, Book Exhibitors, and all my library staff. Your unwavering support is the foundation of this symposium's success.

As we come together for this event, I am filled with optimism and excitement for the contributions we will make towards the development of our region and our nation. I am confident that our collective efforts will help forge a brighter future for the field of library and information science.

**Mrs. L. Umashankar**
Conference Secretary
Symposium on Library and Information Science - 2024
University of Jaffna.

# Message from the Editor



I am pleased to present the message to the proceedings of the "Symposium on Library and Information Science - 2024 (ETAKAM 2024)" held on the 12th and 13th of September 2024 at the Library, University of Jaffna, Sri Lanka.

Implementing innovative projects in libraries is crucial to contributing to their evolving role in society. It is not just about keeping up with technological trends. It is about enhancing the library's ability to serve its community effectively and ensure equitable access to information. Creative projects allow libraries to meet the evolving needs of their users in a better way.

The ETAKAM - 2024 highlights the significant benefits of implementing innovative library projects. The projects being presented at the Symposium cover a diverse range of specialized topics, reflecting the breadth and depth of projects implemented in libraries. The Proceeding contains twenty-two (22) extended abstracts of innovative projects. I strongly believe that the participants will get inspiration and new experience in implementing innovative projects to improve the services of their libraries. I encourage you to engage fully with the presentations, ask questions, and make the symposium interactive for fruitful discussions.

I would like to express my heartfelt gratitude to the editorial committee members for their untiring support in making this proceedings a success. I would like to take this opportunity to express my deepest gratitude to all the participants, presenters, and organizers. Your dedication to advancing knowledge and your commitment to excellence have made this event possible.

I wish the Symposium on Library and Information Science - 2024 a grand success.

**Mrs. K. Murugathas**
Editor
Symposium on Library and Information Science - 2024
University of Jaffna.

# Contents


Message from the Vice-Chancellor i

*Prof. S. Srisatkunarajah*

Message from the Symposium Chair iii

*Dr.(Mrs.)K.Chandrasekar*

Message from the Symposium Convener v

*Dr. S.Ketheeswaran*

Message from the Symposium Secretary vii

*Mrs.L.Umashankar*

Message from the Editor ix

*Mrs. K. Murugathas*

Address of the Keynote Speaker 01

*Dr.Sundar Ganesan*

Technical Sessions

01. தமிழியல் கருவூலம்: தமிழ்ப் புலமையாளர்களை ஆவணப்படுத்துவதற்கான ஓர் எண்ணிமத் தளம் 05

இ.தனஞ்சயன், ம.கோகுலன்

02. ஓலைச்சுவடிகளை பாதிக்கும் காரணிகளை கண்டறிதலும், மூலப் பிரதிகளை பாதுகாத்தலும் 08

ச.தனுஜா, இ.ஜெயசீலன், இ.குபேசன், க.சந்திரசேகர்

03. நூல்தேட்டம்: ஈழத்தமிழர்களுக்கான தேசிய நூற்பட்டியல் 11

என்.செல்வராஜா

04. இலங்கைத் தமிழியல் சார் வெளியீடுகளைச் சேகரித்தலும் ஆவணப்படுத்தலுக்குமான செயற்றிட்டம் 14

சு.சித்தார்த்தினி

05. பன்முகப்பங்குதாரர்களின் பங்கேற்புடன் கூடிய ஆவணவாக்கல்: வடமாகாண நீர் வளம் தொடர்பான எண்ணிம சேமவைப்பிட உருவாக்கம் 17
ரூ.செந்தாழன், க.சந்திரசேகர்

05. Migration of Bibliographic Data to Koha at the Women's Education and Research Centre 20
S. Ketheeswaren

06. ஓலைச்சுவடிகளை எண்ணிமப்படுத்தலும் பாதுகாத்தலுக்குமான செயற்றிட்டம் 22
மே.கபேசன், இ.குபேசன்

07. யாழ் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள தமிழியல் சார்ந்த தொகுப்புக்களை பாதுகாத்தலும் எண்ணிமப்படுத்தலும் 24
மு.உஷாஜினி, தி.ஜனன், க.சந்திரசேகர்

08. யாழ்ப்பாணப்பொதுசன நூலகத்தின் ஆவணவாக்கற் செயற்றிட்டம் 27
சி.அனுசியா, செ.தர்மிளா

09. Automation of St. Francis Xavier's Seminary Library at Columbuthurai, Jaffna, Sri Lanka. 29
A. G.Saverimuttu

10. எண்ணிமத் தமிழியலுக்கான நூலக நிகழ்ச்சித்திட்டம் 31
L.K.Natkeeran1, S.Kirsta

11. அறிவுக் களஞ்சியம் : மாதாந்த பத்திரிகைப் புதிர்ப்போட்டி 34
ரா.அச்சலா சுகந்தினி

12. The Establishment of ‘Musicology Corner’ at the Sir Ponnampalam Ramanathan Faculty of Performing and Visual Arts Library 37
P.Poologanathan

13. வாசகர்களின் கலை இலக்கியத்திறனை மேம்படுத்தல்: ‘கவிமுளரி’ மின்னிதழ் வெளியீடு 39
ம.பிரகாஷ்

14. வாசிப்பை ஊக்குவிப்பதில் சுன்னாகம் பொது நூலக சிறுவர் பகுதியின் செயற்பாடுகள் 41
சு.ஜெயலக்சுமி

15. யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் இந்திய நூற் சேகரிப்புச் சிறப்புப் பிரிவுச் செயற்றிட்டம் 44
வி.பிரபாகர்

16. Environmental Awareness on Bolgoda Ecosystem through Library Services 47
T.M. Seneviratne, C.L. Jayawardena

17. இலக்கியச் செயற்பாட்டினூடாக சமூகப் பிணைப்பினை ஏற்படுத்திவரும் "நிலாமுற்ற நிகழ்வு" 50
ம.பிரகாஷ்

18. மாணவர்களின் எழுத்தறிவை விருத்தி செய்வதற்கான விசேட முகாம் 53
ரா.அச்சலா சுகந்தினி

20. Enhancing Literacy and Uncovering Hidden Talents in Sri Lankan Prisoners: A Project in Welikada Prison 56
H.W Kusala Sajeewani

21. யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் விழிப்புலனற்றோர் பிரிவு: ஒரு பார்வை 58
சி.அனுசியா, வி.பிரபாகர்

22. South Eastern Regional Library & Information Network (SERLIN) of Sri Lanka 60
M.M. Mashroofa , M.M. Rifaudeen, M.C.M. Azwer, A.M. Nahfees, S.L.M.Sajeer, M.J.A. Saajith

Keynote address

# தெற்காசியாவின் அறிவு வளங்களை ஆவணமாக்கல்

சுந்தர் கணேசன்
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சென்னை, இந்தியா

**சுருக்கம்**

தெற்காசியாவின் அறிவு வளங்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அதற்கேயுரிய தனித்துவமான போக்குகளில் - களிமண் வில்லைகள் (Tablets) - பானைக்கீறல்கள் - கல்வெட்டுகள் - செப்பேடுகள் - ஓலைச்சுவடிகள் முதலியவற்றில் பதியப்பட்டு, வளர்தெடுக்கப்பட்டன. 19ஆம், 20ஆம் நூற்றாண்டில் உருவான புதிய கண்டுபிடிப்புகளும் குறிப்பாகக் காகிதம், அச்சு இயந்திரம் ஆகியவற்றின் பரவலாக்கம் - பண்டைய அறிவு வளங்கள் அனைத்தையும் அச்சில் கொண்டு வந்தன. இதன் தொடர்ச்சியாக பெரும் ஆவணங்கள் உருவாகி ஆவணங்கள்வழி அரசு நிர்வாகம் செயற்படத் தொடங்கியது. நூல்களின்வழி அறிவு பரவலாக்கம் அடைந்து, பெரும் நூலகங்கள் உருவாகின. மற்றொரு புறத்தில் நவீனத்துவத்தின் எழுச்சியும், தெற்காசியா தனித்தனி தேசிய இனங்களாக உருவான போக்கும் உருவாகின. உலகம் முழுவதும் நிலவிய போர், எழுச்சி சார்ந்த அரசியல் சூழல்களில் நூல்களும் நூலகங்களும் அழிக்கப்பட்டன. இதனால் புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளைக்கொண்டு அறிவு வளங்களை வேறுபட்ட வடிவங்களில் சேகரித்து, பாதுகாப்பதற்கான தேவை உருவானது.

அதன்வழி, 21ஆம் நூற்றாண்டில் “மின்நூலகம்” என்பது அறிவு வளங்களை ஆவணமாக்கி, பரவலாக்கம் செய்து, உலகம் முழுவதும் உள்ள அனைவரின் அணுகலுக்கும் ஏற்ற வகையில் அமைந்த ஒன்றாகும். 1990களில் படச்சுருளில் ஆவணமாக்கி, பாதுகாக்கும் போக்குத் தொடங்கியது. பின்னர் வளர்ந்த தொழில்நுட்பத்தால் எண்ணிம முறையில் ஸ்கேனர் (scanner) மூலம் ஆவணமாக்கல் நிகழ்ந்து வருகிறது. ஒவ்வொரு தொழில்நுட்பத்திற்கும் அதற்கேயுரிய சாதக, பாதக கூறுகள் கொண்டிருப்பது தவிர்க்க முடியாதது. அதனைக் கணக்கில் கொண்டும் உலகம் முழுவதும் பின்பற்றும் தரத்தில் ஆவணமாக்கலை உருவாக்கி அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதும் கடமையாகிறது. ஆவணமாக்கல் மேற்கொள்ளும்போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், செயற்பாடுகள், அதனைப் பாதுகாத்து, எளிதாக அணுகும் முறைகளுக்கு மாற்றுதல் முதலியவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

தெற்காசியாவின் அறிவு வளங்களைப் பாதுகாப்பதில் Microfilming of Indian Publications Project (MIPP), இந்திய தேசிய ஆவணக் காப்பகம் (National Archives of India), பிரிட்டிஷ் நூலகம், மதன் புரஸ்கார் புஸ்தகாலயா - நேபாளம், தமிழ்நாட்டில் மாநில வரலாற்று ஆய்வு ஆவணக்காப்பகம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், தமிழிணைய மின்நூலகம், இலங்கையின் நூலகம் அறக்கட்டளை, மேற்கு வங்கம் - Digital Library of the West Bengal Secretariat Government of West Bengal) ஒடிசா - Odia Virtual Academy, பஞ்சாப் மின்நூலகம், LUMS Digital Archive, Iqbal Cyber Library - பாகிஸ்தான், Granth Sanjeevani - The Asiatic Society of Mumbai முதலியவற்றின் பங்கு முக்கியமானது. அவை மேற்கொண்ட செயற்பாடுகளில் ஆவணமாக்கல் எத்தகைய தன்மையில் அமைந்தன என்றும் விவாதிக்கப்பட வேண்டும்.

# Extended Abstracts

# தமிழியல் கருவூலம் : தமிழ்ப் புலமையாளர்களை ஆவணப்படுத்துவதற்கான ஓர் எண்ணிமத் தளம்

இ.தனஞ்சயன் [1*], ம.கோகுலன் [2]

**அறிமுகம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தில் தமிழியல்சார் ஆய்வுகளுக்கான நூலகம் ஒன்றை ஸ்தாபிக்கும் செயற்றிட்டம் 2021ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான முழுமையான நிதிப்பங்களிப்பு கந்தையா கார்த்திகேசன் நம்பிக்கை நிதியத்திலிருந்து வழங்கப்படுகிறது. இச் செயற்றிட்டத்தில் தமிழியல் ஆய்வுகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகளுள் ஒன்றாகத் தமிழுலகில் வாழ்ந்து மறைந்த புலமையாளர்களுக்கான எண்ணிமத்தளம் உருவாக்கப்பட்டு வருகின்றது. "தமிழியல் கருவூலம்" எனும் இவ் எண்ணிமத்தளத்தினூடாக இலங்கை தமிழியல் சார் அறிஞர்கள் மற்றும் பெரியார்களின் தகவல்களைத் தரவுத்தளத்தில் பதிவேற்றி ஓரிடப்படுத்திப் பயன்பாட்டிற்கு வழங்குதல் இச்செயற்றிட்டத்தின் பிரதான செயற்பாடாகும். அறிஞர்களின் அடிப்படைத் தரவுகள், அவர்களின் துறை சார்ந்த செயற்பாடுகள், கையெழுத்துப்பிரதிகள், புகைப்படங்கள் மற்றும் ஒலி ஒளிப் பதிவுகள் போன்றவற்றினைச் சேகரித்துத் தரவுத்தளத்தில் பதிவேற்றம் செய்வதோடு அவர்களால் எழுதப்பட்ட நூல்களின் தலைப்புப் பக்கத்தினையும் பதிவேற்றம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கைத் தமிழியல் சார் அறிஞர்களின் அடிப்படைத் தகவல்கள், செயற்பாடுகள், நூல்கள் போன்றன பதிவுசெய்யப்பட்டு ஒன்றிணைக்கப்படும். இலங்கைத் தமிழியல்சார் அறிஞர்களின் தரவுத்தளமாக இதனை கட்டமைப்பதே இச்செயற்பாட்டின் பிரதான நோக்கமாக உள்ளது.

வாழ்ந்து மறைந்த, மற்றும் வாழ்ந்துவரும் புலமையாளர்களின் முழுமையான வரலாற்றை இத்தளம் எதிர்காலத்தில் கொண்டிருக்கும். தமிழ்ப் புலமையாளர்கள் சார்ந்து பல்வேறு வடிவங்களில் (அச்சு, அச்சு அல்லாத) காணப்படக்கூடிய தகவல்களை ஓரிடப்படுத்தி இணையத்தினூடாக எண்ணிமத் தகவல் தேவைப்படுவோருக்கு வழங்குதல் இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து இற்றைவரை காலங்காலமாகப் பல அறிஞர்கள் வாழ்ந்து மறைந்தனர். இவர்களுள் காலத்தால் மூத்த அறிஞர்களின் வாழ்வியலை ஆவணப்படுத்துதல் இச்செயற்றிட்டத்தின் பிறிதோர் நோக்கமாகும்.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

இச்செயற்றிட்டமானது, பின்வரும் செயற்பாடுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

**புலமையாளர்களின் தெரிவு:** புலமையாளர்களின் தகவல்களைச் சேகரிக்கும்போது முன்னுரிமை அடிப்படையில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த தழிழறிஞர்களின் வாழ்க்கை வாரலாறு, இலக்கிய, சமய, சமூகப்பணிகள், நூலுருவாக்கப் பணிகள் மற்றும் இது போன்ற ஏனைய படைப்புக்கள் பற்றிய பலதரப்பட்ட தகவல்களைச் சேகரித்தல். வித்துவசிரோமணி சி. கணேசையர் 1939ம் ஆண்டு எழுதிய "ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்" எனும் நூலினை உசாத்துணையாகக்கொண்டு இத்தெரிவு இடம்பெறுகின்றது. நூல்களில்

[1*] *Corresponding Author*: இ.தனஞ்சயன், நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
*E mail*: thananchayanr@univ.jfn.ac.lk

[2] நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

இருந்து பெறப்படும் தகவல்கள், புகைப்படங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு இத்தரவுத்தளம் கட்டமைக்கப்பட்டு வருகின்றது.

**மென்பொருள் தெரிவு:** எண்ணிம நூலக மென்பொருள் மதிப்பீட்டு அளவீடுகளின் (Metadata, User Interface, Administration, Storage) மூலம் Mediawiki, Word Press, Omeka-S போன்ற மென்பொருட்கள் மதிப்பிடப்பட்டு, Omeka-S என்ற மென்பொருள் தெரிவு செய்யப்பட்டது. இது எண்ணிம வளங்களைப் பாதுகாக்கவும், முகாமைத்துவம் செய்யவும், தகவல்களை வழங்கவும் பயன்படும் ஒரு கட்டற்ற மென்பொருள் தளமாகும். இதன் அடிப்படைக்கூறுகளாக Item, Item Sets, Collection, Page மற்றும் Resource templates என்பன காணப்படுகின்றன.

**இணையத்தளப் பக்கங்களை உருவாக்குதல் மற்றும் ஒழுங்கமைத்தல் :** இதில் Dublin Core metadata விதிமுறையைப் பின்பற்றி தனிநபர் (Person) வெளியீடு (Publication) ஆகிய மேம்படுத்தப்பட்ட Resource templates உருவாக்கப்பட்டன. புலமையாளர்களின் இணையத் தளப் பக்கத்தினை (Website page) வடிவமைக்கும் போது, அவர்களின் தரவுகளைப் பதிவு செய்வதற்கு 'Person' எனும் Resource template உம் அவர்களின் நூல்கள் முதலான வெளியீடுகளின் தரவுகளைப் பதிவு செய்வதற்கு Publication எனும் Resource template உம் பயன்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்

"தமிழியல் கருவூலம்" என்னும் எண்ணிமத் தளத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வலையமைப்பில் உள்ள http://192.168.222.105/ என்ற இணையத்தள முகவரியூடாகப் பார்வையிடமுடியும். திறவுச்சொற்களின் உதவியுடன் பல்வேறுபட்ட தகவல்களைத் தேடிப் பெற்றுக்கொள்ள முடியும். இதுவரையிலும் 1950ம் ஆண்டிற்கு முற்பட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழியல் புமையாளர்களின் வாழ்க்கைக்குறிப்பு, அவர்களின் துறை சார்ந்த செயற்பாடுகள், அவர்கள் பதிப்பித்த மற்றும் எழுதிய நூல்களின் விபரங்கள், அவர்களின் கலைப் படைப்புக்கள், புகைப்படங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. இவ் எண்ணிமத் தளத்தை மெருகூட்டுவதற்காகவும், இலகுவான தேடல் மற்றும் காட்சிப்படுத்தலுக்காகவும் Item Carousel Block, Image Server, Universal Viewer, IIIF Server, Block Plus போன்ற plugins பயன்படுத்தப்பட்டுள்ளன.

## முடிவுரையும் பரிந்துரைகளும்

நூல்களை ஆவணப்படுத்துவதோடு மட்டுமல்லாது அவற்றை எழுதிய புலமையாளர்களின் வாழ்க்கை வரலாற்றை பதிவுசெய்து ஆவணப்படுத்தலும் காலத்தின் தேவையானதொன்றாகும். எமது பிரதேசம் சார்ந்து பல்துறைசார்ந்த புலமையாளர்களின் படைப்புக்களை ஆவணப்படுத்தப்படுத்துவதுடன், அவற்றினை எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்க வேண்டியது இன்றியமையாத பணியும் காலத்தின் தேவையுமாகும். மரபார்ந்த முறைமையுடன் மட்டுப்படுத்தாமல், இப் பணிசார்ந்து எண்ணிமத்தளக் கட்டமைப்புக்களை தொடர்புடைய மேம்படுத்துவதினூடாகப் புலமையாளர்களின் விபரங்கள் மற்றும் படைப்புக்களை பொதுவெளியில் பகிரவும் தகவல் பரவலாக்கம் இடம்பெறவும். புலமையாளர்களின் படைப்புக்களைப் பொதுமக்கள் எம்மிடம் தந்துதவும் சந்தர்ப்பத்தில் அவற்றினைப் பகுப்பாய்வுக்குட்படுத்தி எண்ணிமத்தளத்தில் பதிவேற்றம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே பதிவேற்றம் செய்யப்பட்ட புலமையாளர்களின் தரவுகளைவிட மேலதிக தகவல்கள் அல்லது ஆவணங்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றினையும் இவ் எண்ணிமத்தளத்தில் தொடர்ந்து இணைத்துக்கொள்ள முடியும். நூலாசிரியர்களின் தரவுகளினை மட்டுமன்றிப் பல்துறை சார்ந்த

புலமையாளர்களின் தகவல்கள் மற்றும் படைப்புக்களினை இணைத்துக்கொள்ளல், காலவோட்டத்தில் இலங்கைப் புலமையாளர்களின் விபரங்களை மட்டுமின்றி அனைத்துப் புலமையாளர்கள் விபரங்களை யும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்தல். ஒலி, ஒளி வடிவங்களினூடாகவும் தகவலைப் பயனாளர்கள் எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள வசதிகளை மேம்படுத்தல், வாழ்ந்து வரும் மூத்த புலமையாளர்களின் படைப்புக்கள் மற்றும் அவர்கள் சார்ந்த வாழ்க்கை குறிப்புக்களை எழுத்து வடிவில் மட்டுமல்லாது ஒலி ஒளி வடிவங்களிலும் ஆவணப்படுத்தும் செயற்பாடுகள் எதிர்காலத் திட்டங்களுக்கான பரிந்துரைகளாகும்.

**திறவுச்சொற்கள்:** எண்ணிமத்தளம், புலமையாளர்கள், ஆவணப்படுத்தல், தமிழியல் , வாழ்க்கை வரலாறு

**உசாத்துணை**

Rueff, B. (2024). Dealing with post-excavation data: the Omeka S TiMMA web- database. *Peer Community Journal*, *4*. 1-14. doi:10.24072/pcjournal.366.

Tomasevic, A.,Lazic, B.,Vorkapic, D.,Skoric, M.,& Kolonja, L. (2017). The use of the Omeka platform for digital libraries in the Field of mining. *Infotheca,* 17(2), 26-49. https://doi.org/10.18485/infotheca.2017.17.2.2

கணேசையர், சி. (1939). ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம். திருமகள் அழுத்தகம்.

# ஓலைச்சுவடிகளைப் பாதிக்கும் காரணிகளைக் கண்டறிதலும், மூலப்பிரதிகளைப் பாதுகாத்தலும்

ச.தனுஜா[1*], இ.ஜெயசீலன் [2], இ.குபேசன் [3], க.சந்திரசேகர்[4]

**அறிமுகம்**

மனிதன் அறிவை பகிர்ந்து கொள்வதற்கு காகிதங்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு, பதப்படுத்தப்பட்ட களிமண், கல், உலோகங்கள், மரங்களின் இலை, பட்டை மற்றும் பதப்படுத்தப்பட்ட விலங்குகளின் தோல் என்பன எழுதுகருவிகளாக பயன்படுத்தப்பட்டன. இலங்கை வரலாற்றில், பண்டைக் காலங்களில் அறிவை பகிர்ந்து கொள்வதற்கு களிமண் தகடுகள், கற்தூண்கள், உலோகத் தகடுகள், ஓலைச்சுவடிகள் என்பன எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் காகிதப்பாவனையின் வருகையோடு, ஏடெழுதும் பழக்கம் அருகிவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் அச்சு தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஓலைச்சுவடிகளில் இருந்த தகவல் நூல்களாக அச்சில் பதிப்பிக்கப்பட்டன. எனினும், ஓலைச்சுவடிகளில் காணப்பட்ட அனைத்து தகவல்களும் அச்சில் வரவில்லை. அத்துடன், ஓலைச்சுவடிகளின் பாதுகாப்பு, பராமரிப்பு தொடர்பிலும் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. இதனால், இலங்கையில் பல்லாயிரக்கணக்கில் இருந்த ஓலைச்சுவடிகளின் எண்ணிக்கை சில ஆயிரங்களாக குறைந்து விட்டன. மேலும், இயற்கை அனர்த்தங்களினாலும், காலநிலை மாற்றத்தினாலும், உயிரியல் காரணிகளினாலும், இனக்கலவரங்களினாலும், மற்றும் இராசயன பாவனையினாலும் ஓலைச்சுவடிகள் அழிவடைந்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே, பல்வேறு இடங்களிலும் சிதறிக்கிடக்கும் எஞ்சியுள்ள ஓலைச்சுவடிகளை யேனும் சேகரித்துப் பாதுகாத்தலும், அவற்றின் உள்ளடக்கத்தை உரியமுறையில் ஆவணப்படுத்தி எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்குவதும் அவசியமாகும். அந்த வகையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகமானது "கந்தையா" கார்த்திகேசன் நம்பிக்கை நிதியத்தின்" நிதி உதவியின் கீழ் நூலகத்தில் காணப்படுகின்ற ஓலைச்சுவடிகளைப் பாதிக்கும் காரணிகளைக் கண்டறிந்து, அவற்றின் பாதுகாப்புத் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய செயற்றிட்டம் ஒன்றை 2020இல் ஆரம்பித்திருந்தது. இச்செயற்றிட்டத்தின் மூலம் ஓலைச்சுவடிகளில் சிதைவை ஏற்படுத்து கின்ற காரணிகளை கண்டறிதலும், ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான பாரம்பரிய, உயிரியல், மற்றும் இரசாயன வழிமுறைகளை இனங்காண்பதும் முக்கிய நோக்கங்களாக அமைந் திருந்தன.

**செயற்றிட்ட அமுலாக்க படிமுறைகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலக ஆவணக்காப்பகத்தில் 24,607 ஓலைச் சுவடிகளை உள்ளடக்கிய 207 கட்டுகள் மரப்பெட்டிகளில் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. இவ் ஓலைச் சுவடிகள் இந்நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டவை என அறியப்படுகிறது. இவ் வோலைச்சுவடிகளுக்கான பட்டியற் பதிவுகளை 1982-1994 காலப்பகுதியில் நூலகராக கடமையாற்றிய

[1*]*Corresponding Author:* ச.தனுஜா, நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
*Email*: thanuja1807@gmail.com

[2] தாவரவியல்துறை, விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
[3, 4]நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

சி. முருகவேள் அவர்கள் தயாரித்து இருந்ததுடன், 1992இல் இப்பட்டியற் பதிவுகளை உள்ளடக்கிய நூல் விபரப்பட்டியல் ஒன்றையும் வெளியிட்டு இருந்தார். இந்நூல்விபரப்பட்டியலே இன்றுவரை இவ்வோலைச் சுவடிகளுக்கான அணுகுகையை வழங்கி வருகின்றது. எனினும், ஓலைச்சுவடிகளின் பராமரிப்புத் தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2020இல், இவ்வோலைச் சுவடிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பில் செயற்றிட்ட முன்மொழிவொன்று யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு நூலகத்தினால் வழங்கப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பயனாக 2020ஆம் ஆண்டு மாசி மாதமளவில் இந்தியாவை சேர்ந்த கலாநிதி மணிமாறன் அவர்கள் (தமிழ் பண்டிதர், நூலகர், தஞ்சாவூர் சரபோஜி மகாராஜாவின் சரஸ்வதி மஹால் நூலகம்) பல்கலைக்கழக நூலகத்துக்கு வருகைதந்து நூலக ஊழியர்களுக்கு ஓலைச்சுவடிகளை சுத்தம் செய்தல், பதப்படுத்தல், மற்றும் பராமரிப்பு தொடர்பில் இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை ஒன்றினை நடாத்தியிருந்தார். இவரால் பரிந்துரைக்கப்பட்ட சுத்திகரிப்பு முறையே இந்நூலகத்தில் தற்போது நடைமுறையில் உள்ளது. இதனைத் தொடர்ந்து, ஆவணக்காப்பகத்தில் பேணப்பட்டு வரும் ஓலைச்சுவடிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளைக் கண்டறிவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது, ஓலைச்சுவடிகளில் வெடிப்பு, பூச்சிகள் மற்றும் பூஞ்சைகளின் தாக்கம் என்பன அவதானிக்கப்பட்டு இருந்தன.

மரப்பெட்டிகளில் பேணப்பட்டு வரும் ஓலைச்சுவடிகளில் பூஞ்சைகளின் தாக்கம் அவதானிக்கப்பட்டதை தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாவரவியல் துறையினருடன் இணைந்து பூஞ்சைகளை இனங்காணுதல், அவற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்துதல் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. மேலும், ஓலைச்சுவடிகளில் பூஞ்சை தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு முன்னைய ஆய்வு களில் பரிந்துரைக்கப்பட்ட இயற்கை மூலிகைகளை பயன்படுத்தி மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வுள்ளன. பூச்சிகளினால் ஓலைச்சுவடிகளில் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தின் ஆவணக்காப்பகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஓலைச்சுவடிகளை பாதிக்கின்ற காரணிகளில் முக்கியமாக காலநிலை (வெப்பம், ஈரப்பதன்), பூச்சிகள் மற்றும் பூஞ்சைகள் என்பன அடையாளம் காணப்பட்டன. காலநிலை தொடர்பில், நூலகத்தின் குறித்ததொரு பகுதியை குளிரூட்டி, வெப்பம், ஈரப்பதன் போன்ற காரணிகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் ஓலைச்சுவடிகளில் ஏற்படுகின்ற பாதிப்புக்களை குறைப்பதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ஓலைச்சுவடிகளில் வளரும் பூஞ்சைகளின் மாதிரிகள் பெறப்பட்டு, அவற்றை அடையாளம் காணும் பொருட்டு ஆய்வுகூட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த கட்டமாக, ஓலைச்சுவடிகளில் கரப்பான், இராமபாணம் போன்ற பூச்சிகளினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

இச்செயற்றிட்டத்தின் ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளைக் கண்டறிந்து, அவற்றிலிருந்து ஓலைச்சுவடிகளின் மூலப் பிரதிகளைப் பாதுகாத்து பராமரிப்பதற்குப் பொருத்தமான வழிமுறைகள் கையாளப்படவுள்ளன.

தனிநபர் மற்றும் நிறுவனங்களிடத்தில் பராமரிப்பற்று காணப்படுகின்ற ஓலைச்சுவடிகளை சேகரித்து, பாதுகாத்து, அவற்றை எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிப்பதற்கான நடவடிக்கையினை யாழ் பல்கலைக்கழக நூலகம் மேற்கொள்ள வேண்டும். மேலும், ஓலைச்சுவடிகளின் பாதுகாப்பு, பராமரிப்பு, அணுகுகை மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்கான ஆவணக்காப்பக அலகொன்று யாழ் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

**திறவுச்சொற்கள்:** ஓலைச்சுவடிகள், ஆவணப்பாதுகாப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**உசாத்துணை**

Buddikasiri, P.A., & Madhumali, A.R. (2018). Idea and status about conservation for organic cultural relics in Sri Lanka. *Journal of the Centre for Heritage Studies,* 113.

Kim, Y.H., Choi, K.H., Hong, J.Y., Lee, J.M., Kim, S.J., Jo, C.W., & Jeong, S.Y. (2020). Investigation of microorganisms deteriorating ancient ola leaf manuscripts. *International Journal for the Preservation of Library and Archival Material,* 41(3), 119- 129.

# நூல்தேட்டம்: ஈழத்தமிழர்களுக்கான தேசிய நூற்பட்டியல்

என்.செல்வராஜா*

**அறிமுகம்**

நூல்விபரப்பட்டியல் என்பது எழுதப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட ஆவணங்களுடைய விபரங்கள் அடங்கிய பட்டியல்களை முறையான ஒழுங்கமைப்பில் தயாரிக்கும் செயற்பாடாகவே வரையறுக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், இலங்கையின் தேசிய நூற்பட்டியல் சிங்கள, தமிழ், ஆங்கில ஆவணங்களுக்கான நூல்விபரப்பட்டியலாக இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினால் வெளியிடப்பட்டு வருகின்றது. இத்தேசிய நூற்பட்டியலில் இலங்கையில் வெளியிடப்படும் அனைத்து தமிழ் நூல்களும் உள்வாங்கப்படுவதில்லை எனும் விமர்சனமும் பலராலும் முன்வைக்கப்பட்டு வருகிறது. மேலும், அமரர்களான சைமன் காசிச்செட்டி, குரும்பசிட்டி கனக செந்திநாதன், எப்.எக்ஸ்.சீ.நடராஜா, சில்லையூர் செல்வராசன், வரதர் என்ற தி.ச.வரதராஜன் ஆகியோரின் ஆக்க இலக்கியத் துறைசார் நூற்பட்டியல்களே இன்றுவரை ஈழத்து இலக்கிய ஆய்வாளர்களால் தமது ஆய்வுகளில் குறிப்பிடப் படுகின்றன. இத்தகைய சூழலில், ஈழத்தமிழ் நூல்களுக்கான தனியானதொரு தேசிய நூற்பட்டியலின் தேவை நீண்டகாலமாகவே தமிழ் ஆய்வாளர்கள் மத்தியில் உணரப்பட்டு வந்துள்ளமையை காணக் கூடியதாக உள்ளது.

“நூல்தேட்டம்” எனும் வெளியீடானது, இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் வெளியிடப்பட்ட ஈழத்து தமிழ் ஆவணங்களின் விபரங்களை உள்ளடக்கிய ஒரு நூல்விபரப்பட்டியலாக கடந்த 22 ஆண்டுகளாக வெளியிடப்பட்டு வருகின்றது. வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ் நூல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

ஆரம்பத்தில், இலங்கையிலுள்ள நூலகங்களில் நூல்தேர்வுக்கான சாதனமாக காலாண்டிதழாக 1990இல் சித்திரை, மற்றும் ஆடி மாதங்களில் இரு இதழ்களாக “நூல்தேட்டம்” வெளிவந்தது. இதழொன்றில் 50 ஆவணங்களுக்கான நூல்விபரத் தகவல்களுடன் வெளிவரத் தொடங்கிய இச்சஞ்சிகையின் வெளியீடு, தொகுப்பாசிரியரின் புலம்பெயர்வுடன் தடைப்பட்டது. பின்னர் 2002ஆம் ஆண்டிலிருந்து தொகுதிக்கு 1000 ஈழத்து தமிழ் நூல்கள் என்ற வகையில், 2024ஆம் ஆண்டு வரை 17 தொகுதிகளில் 17,000 நூல்களுக்கான நூல்விபரத் தகவல்கள் குறிப்புரையுடன் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. 18ஆவது தொகுதிக்கான தொகுப்புப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியல்படுத்தப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்தப்படவில்லை. வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. உதாரணமாக, துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

*Corresponding Author: என்.செல்வராஜா, ஐரோப்பிய தமிழ் ஆவணங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஐக்கிய இராச்சியம். Email: noolthettam.ns@gmail.com

பெரும்பாலான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள் என்பனவும் இத்தொகுப்பில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும் வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுப்புக்களில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூல் எனும் வகைக்குள் அடங்கக் கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவை யாவும் இத்தொகுப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. நூல்தேட்டத்தின் 15ஆவது தொகுதியிலிருந்து அச்சுவாகனமேறாத சில மின்நூல்களின் நூல்விபரத் தகவல்களும் இத்தொகுப்புக்களில் இணைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இந்நூல்தேட்டத் தொகுதிகளில் உள்வாங்கப்பட்டுள்ள ஈழத்தவர் நூல்களுக்கு எவ்வித பிரதேச, கால எல்லைகளும் வரையறுக்கப்படவில்லை. மேலும், குறித்தொரு நூலின் பிந்திய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறுபட்ட நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

இச்செயற்றிட்டத்தின் அடைவாக இதுவரை 17,550 குறிப்புரையுடனான நூலியல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 1880-1899 காலப்பகுதியில் வெளிவந்த 15 நூல்களும், 1900-1948 காலப்பகுதியில் வெளிவந்த 320 நூல்களும், 1949-1960 காலப்பகுதியில் வெளிவந்த 379 நூல்களும், 1961-1970 காலப்பகுதியில் வெளிவந்த 1,424 நூல்களும், 1971-1980 காலப்பகுதியில் வெளிவந்த 785 நூல்களும், 1981-1990 காலப்பகுதியில் வெளிவந்த 1,492 நூல்களும், 1991-2000 காலப்பகுதியில் வெளிவந்த 3,354 நூல்களும், 2001-2010 காலப்பகுதியில் வெளிவந்த 5,631 நூல்களும், 2011-2020 காலப்பகுதியில் வெளிவந்த 4,235 நூல்களும், 2021-2024 காலப்பகுதியில் வெளிவந்த 936 நூல்களும் அடங்குகின்றன. இவற்றில் 477 நூல்கள் ஆண்டு விபரம் குறிப்பிடப்படாது வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதிவு செய்யப்பட்ட 17,000 ஆவணங்களில், இலக்கியப் பிரிவில் மட்டும் 6,812 ஆவணங்கள் இடம்பெற்றுள்ளன. இது பதிவு செய்யப்பட்ட மொத்த ஆவணங்களின் 40 சதவீதமாகும். இதில் கவிதைகள் (1,850), சிறுகதைத் தொகுதிகள் (1,300), நாவல்கள் (973), நாடகங்கள் (329) என்பன உள்ளடங்குகின்றன. சிறுவர் இலக்கியத்தைப் பொறுத்த வரையில், 732 நூல்களே 17 தொகுதிகளிலும் பதிவு செய்யக் கூடியதாயிருந்தது. இது மொத்த பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் 4.3 சதவீதமாகும். ஈழத்துப் பதிப்புலகச் சூழலில், முழுமையான நூல் வெளியீடுகளின் பதிவுகள் அற்ற நிலையில் நூல்தேட்டப் பதிவுகள், சில முக்கிய அவதானிப்புகளை மேற்கொள்ள நமக்கு உதவுகின்றன. இச்செயற்றிட்டத்தினை 1990இல் சஞ்சிகை வடிவில் தொடங்கிய வேளையில் நிலவிய போர்க்காலச் சூழல் காரணமாக நிதி, சந்தைப்படுத்தல், தகவல் சேகரிப்பு, மக்களின் சமூகச் சிந்தனைக் கோலங்கள் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் எதிர்கொள்ளப்பட்டன. தற்போது 33 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அதே பிரச்சினைகளை வெவ்வேறு மட்டங்களிலும் வடிவங்களிலும் எதிர்கொள்ள வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது.

இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்ட வேளையில் இதனை “வர்த்தக நூற்பட்டியல்“ என்ற வகைக்குள்ளாகவே அறிவுசார் சமூகத்தினரால் அடக்க முயற்சிக்கப்பட்டது. எனினும், முனைவர் அரசு, சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையின் பேராசிரியராக இருந்தபோது, துறைசார் ஆய்வுகளை மேற்கொள்ளும் தமது மாணவர்களுக்கு, ஈழத்து இலக்கியம் பற்றி ஆய்வுக் கட்டுரைகளை

எழுதும் போது நூல்தேட்டத்தை மூல உசாத்துணை சாதனமாகக் கொண்டு தத்தம் ஆய்வுத் தேடல்களை விரிவாக மேற்கொள்ளவேண்டும் என பரிந்துரை செய்திருந்தார். இலங்கையில், கலாநிதி. துரை மனோகரன் அவர்களும் பின்னாளில் இது பற்றிக் குறிப்பிட்டு இலங்கைப் பல்கலைக்கழகங்களும் இதனை பின்பற்ற வேண்டும் என்ற கருத்தை முன்வைத்திருந்தார்.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

தனிமனித முயற்சியால் உருவாகி, இற்றைவரை தொடரும் இந்நூல்விபரப்பட்டியல் தொகுப்பு செயற்றிட்டமானது, ஈழத்தமிழருக்கான ஒரு தேசிய நூல்விபரப்பட்டியலின் தேவையை உணர்த்தி நிற்கின்றது. இதன் தேசிய ரீதியான அவசியமும், தனித்துவமும் 33 ஆண்டுகள் கடந்துள்ள இன்றைய நிலையிலும் முழுமையாக உணரப்படவில்லை என்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. நூல்தேட்டமானது ஈழத்தமிழ் சமூகத்தின் பொதுச்சொத்தாகக் கருதப்பட்டு, அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு ஈழத்து தமிழ்ச் சமூகம் முன்வரவேண்டும்.

எதிர்காலத்தில், இம்முயற்சியானது நிறுவனமயப்படுத்தப்பட்டதாக மாற்றம் பெற்று, நூலுருவிலான, மற்றும் நூலுருவற்ற தகவல் சாதனங்களின் விபரங்களையும் உள்ளடக்கி, தமிழ் மொழி மட்டுமல்லாது ஈழத்தமிழரின் ஏனைய மொழி சார்ந்த வெளியீடுகளையும் ஆவணப்படுத்தக்கூடியதாக இப்பணி விரிவடைய வேண்டும். குறித்த நிறுவனமயமாக்கல் தொடர்பில், நூலகங்கள், வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள், கல்வியியலாளர்கள், ஆய்வாளர்கள், மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்புப் பெறப்பட வேண்டும். மேலும், ஈழத்தமிழர்களின் வெளியீடுகள் தொடர்பான இந்நூல்விபரப்பட்டியலை நவீன நூலக தன்னியக்கமாக்கல் மென்பொருள்களைப் பயன்படுத்தி கணினிமயப்படுத்தி, cloud-based முறைமையில் சேமிப்பதன் மூலம் நிகழ்நிலை தேடலை இலகுவாக்குவதுடன், நீண்டகால செயற்பாட்டையும் உறுதி செய்துகொள்ள முடியும். அத்துடன், ஈழத்து தமிழ் நூல்கள் தொடர்பான நூற்சேகரிப்புக்களை கட்டியெழுப்புவதற்கு இலங்கையிலுள்ள நூலகங்கள் நூல்தேட்டத்தினை நூல் தெரிவுக்குரிய உசாத்துணை சாதனமாக பயன்படுத்த முன்வர வேண்டும். அத்துடன், இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமது ஆய்வுப் பரப்பிற்கேற்ற நூல்களைத் தேடுவதற்கு இலகுவான வழிகாட்டிகளாக அமைந்துள்ள நூல்தேட்டத் தொகுதிகளை பார்வையிட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

**திறவுச்சொற்கள்:** நூல்தேட்டம், நூல்விபரப்பட்டியல், ஈழத்தமிழர் வெளியீடுகள்

**உசாத்துணை**

ஜெயபாலன், த. (தொ.ஆ.). (2005). நூல்தேட்டம்: தகவல் கையேடு. அயோத்தி நூலக சேவைகள்.

புன்னியாமீன், பீ.எம். (2007). நூல்தேட்டம்: இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி. சிந்தனை வட்டம்.

மகாதேவா, கே.ஜீ. (2011). சென்னை பல்கலைக்கழகத்தில் நூல்தேட்டம் ஆய்வாளர் நூலாகப் பரிந்துரை. ஞானம், 138(12, 6), 46-47.

கிருஸ்ணசாமி, அ., & சந்திரசேகர், க. (2013). நூல்தேட்டம்: ஓர் மதிப்பீட்டு ஆய்வு (Abs.). In: தமிழ் ஆவண மாநாடு - 2013: மாநாட்டு முன்மொழிவுக் கோவை (ப. 90-91). நூலக நிறுவனம்.

# இலங்கைத் தமிழியல்சார் வெளியீடுகளைச் சேகரித்தலும் ஆவணப்படுத்தலுக்குமான செயற்றிட்டம்

சு.சித்தார்த்தினி*

**அறிமுகம்**

ஒரு சமூகம் நிலைபேறுடைய சமூகமாக இயங்குவதற்கும் அச்சமூகத்தின் மதிப்புக்களையும் பாரம்பரியங்களையும் கட்டியெழுப்புவதற்கும் முன்னைய தலைமுறையின் வாழ்க்கை முறைகளை பரிசோதித்து பார்ப்பதற்கும் இலக்கிய மூலாதாரங்கள் வரலாற்று சான்றாதாரங்களாக அமைகின்றன. இவை ஒர் நாட்டினதும், மொழியினதும், இனத்தினதும் அடையாளமாகும். இதனை கடந்த காலத்திலிருந்து சேகரித்து எதிர்காலத்திற்கு கையளிக்கும் ஊடகமாகவும் ஆவணக்காப்பக மாகவும் நூலகங்கள் திகழவேண்டும். அந்தவகையில் ஈழத்தில் தமிழிலக்கிய வளர்ச்சியிலும், தமிழ் நூலக வளர்ச்சியிலும் ஆவணவாக்கல் என்பது பின்தங்கிய நிலையிலும், பின்பற்றப்படாத நிலையிலுமே காணப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கமானது ஆவணவாக்கல் செயற்றிட்டமொன்றை பரிந்துரைத்தது.

இலங்கையில் வெளிவருகின்ற, ஈழத்தமிழர்களால் வெளியிடப்படுகின்ற, ஈழத்தமிழர் தொடர்பாக வெளிவருகின்ற நூல்களையும், சிறுவெளியீடுகளையும் சேகரித்து ஆவணப்படுத்தி பாதுகாப்பதனை கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தின் செயற்றிட்டங்களில் ஒன்றாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்கான சிந்தனை 1960களில் தோற்றம் பெற்றாலும் 2001ஆம் ஆண்டிலேயே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அக்காலகட்டத்திலிருந்த கொழும்புத் தமிழ்ச் சங்க நிர்வாகக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக துறைசார் வல்லுநர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கைத் தமிழியல் நூற்சேகரிப்புப் பகுதியில் தமிழ்மொழி மூலமாக வெளிவந்த நூல்கள், சிறப்பு மலர்கள், சிறுபிரசுரத்தொகுப்புகள், சஞ்சிகைத் தொகுப்புகள் என்பன சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. சிறுவெளியீடுகள் அனைத்தும் விடய அடிப்படையில் ஒன்று சேர்க்கப்பட்டுத் தொகுத்துக் கட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

**செயற்றிட்ட அமுலாக்க படிமுறைகள்**

இலங்கைத் தமிழியல்சார் வெளியீடுகளை சேகரித்தலும் ஆவணப்படுத்தலுக்குமான இச் செயற்றிட்டத்தின் முதற்கட்ட நூற்சேகரிப்பானது தமிழ்ச் சங்க நூல்நிலையத்திலிருந்து ஈழத் தமிழர்களால் வெளியிடப்பட்ட, ஈழத் தமிழர் தொடர்பாக வெளிவந்த 1,200 நூல்கள் தெரிவுசெய்யப்பட்டு 2001ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்டது. மேலும், 2002ஆம் ஆண்டு புலம்பெயர் எழுத்தாளர்களின் நன்கொடையாக 400 நூல்கள் பெறப்பட்டன.

இச்செயற்றிட்டத்திற்கான நூற்சேகரிப்பானது கொள்வனவு மற்றும் அன்பளிப்பு முறைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. கொள்வனவானது, செயற்றிட்ட நோக்கத்திற்கு அமைவாக ஈழத்துத் தமிழ் நூல்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மாதாந்தம் 60,000 ரூபாய் நூற்கொள்வனவிற்காக ஒதுக்கப் படுகின்றது. மேலும், நூற்சேகரிப்பாளர்களுக்கு ஒரு தொகைப்பணம் வழங்கப்பட்டு நூல்கள்

**Corresponding Author:* சு.சித்தார்த்தினி, கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகம், கொழும்பு 6, இலங்கை.
Email: *shiththathiny123@gmail.com*

கொள்வனவு செய்யப்படுவதுடன் வெளியீட்டு நிறுவனங்களிடமிருந்தும், ஆசிரிய வெளியீட்டாளர்களிட மிருந்தும் நேரடியாக நூல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அத்துடன், அன்பளிப்பாக நூற்சேகரிப்பாளர்களிடமிருந்தும், ஆசிரிய வெளியீட்டாளர்களிடமிருந்தும் நூல்கள் பெறப்படுகின்றன.

இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட, வெளியிடப்படுகின்ற தமிழ்மொழி மூலமான பாடநூல்கள் அனைத்தும் சேகரிக்கப்படுவது இச்செயற்றிட்டத்தின் சிறப்பம்சமாகும். மேலும், நூல்கள் அனைத்தும் ஆங்கிலோ அமெரிக்க பட்டியலாக்க விதிமுறை II ற்கு அமைவாக பட்டியல் படுத்தப்பட்டுள்ளதுடன், பகுப்பாக்கம் தூயி தசாம்ச பகுப்பாக்கத் திட்டத்தில் மொழி, சமயம், வரலாறு, இலக்கியம் ஆகிய விடயங்களில் மாற்றத்தினை உள்வாங்கி தமிழாய்வு நூலகத்திற்கென விசேட பகுப்பாக்கமாக யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நூலகரான சிற்றம்பலம் முருகவேள் அவர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இது இலகுவான மீட்டெடுகைக்கு உதவியளிக்கின்றது.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

2001ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்றிட்டத்தின் மூலம் இதுவரை 17,740 நூல்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் சமயம், அரசியல், சமூகவியல், மொழியியல், கல்வியியல், தமிழ் இலக்கியம், வரலாறு போன்ற விடயங்கள் சார்பான நூல்கள் அதிகம் காணப்படுகின்றன. வார நாட்களில் சராசரியாக 20 முதல் 30 வரையான வாசகர்களும், வார இறுதி நாட்களில் 30 முதல் 40 வரையான வாசகர்களும் பயன்பெறுகின்றார்கள். குறிப்பாக பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்கள் இலங்கைத் தமிழியல் நூற்சேகரிப்புப் பகுதியினைப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் ஈழத்து நூல்களின் ஆவணத்தொகுப்பான நூல்தேட்டத்திற்கு 2005ஆம் ஆண்டு முதல் நூலியல் தரவுகளையும் வழங்கி வருகின்றது. தேசிய கல்வி நிறுவனத்தினரால் தமிழ்மொழி, சைவநெறி ஆகிய பாடநூல்களில் புதிய விடயங்ளைச் சேர்ப்பதற்கான களஆய்வை மேற்கொள்ளும் இடமாகவும் தமிழியல் நூற்சேகரிப்புப் பகுதியினையே பயன்படுத்துகின்றனர். அத்துடன் ஈழத்து நூல்களை எண்ணிமப் படுத்தும் நூலக நிறுவனம் இச்செயற்றிட்ட சேகரிப்பில்லுள்ள கணிசமான நூல்களை எண்ணிமப்படுத்தி யுள்ளது. மேலும், சிறந்த பல சேவைகளை தமிழ்பேசும் சமூகத்திற்கு வழங்க வேண்டும் என்பது இச் செயற்றிட்டத்தின் எண்ணமாகும். நிலவும் நாட்டுச் சூழ்நிலை மற்றும் மனோநிலை காரணமாக ஈழத்துத் தமிழ் நூல்களை ஆவணக் காப்பகம் ஒன்றில் திட்டமிட்ட வகையில் சேகரிக்கப்படாத பின்புலத்தில் தமிழ்ச் சங்க நூலகத்தின் இம்முயற்சி காலத்தின் தேவையையும் நிறைவு செய்கின்றது. இலங்கைத் தமிழருக்கான முழுமையான ஆவணக்காப்பகமாகத் திகழவேண்டும் என்பது இதன் நோக்கமாகும். மேலும், செயற்றிட்டத்தின் கனதியை அறிந்து உத்தியோகத்தர்கள் சேவை புரிவதனால் வாசகருக்கும் நூல்களுக்குமான தொடர்பு வலுவுள்ளதாகக் காணப்படுகின்றது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

பண்பாடு, கலை, கலாசார விழுமியங்கள், அறிவியல் மற்றும் வரலாறு போன்றவற்றை அடுத்த சந்ததியினருக்கு கையளிக்க வேண்டியது நூலகங்களின் கடமையாகும். இவற்றினை ஊடுகடத்தும் கருவியாக நூல்களே அமைகின்றன. ஆதலால் ஈழத்துத் தமிழ் நூல்களை சேகரித்து பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு வழங்குவதற்கு இச்செயற்றிட்டம் வழிசமைக்கும் என்பது திண்ணம். செயற்றிட்டத்தினை தடைப்படாமல் தொடர்ந்து செயற்படுத்தினால் ஆரோக்கியமான ஒரு தமிழ்ச் சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். மேலும் இச்செயற்றிட்டத்தினை உருவாக்கி நடைமுறைப்படுத்து வதற்கு ஆதரவு வழங்கிய, வழங்குகின்ற தமிழ்ச் சங்க நிர்வாகத்தினர், நூலகப் பணியாளர்கள் ஆலோசகர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

ஆவணவாக்கல் செயற்றிட்டமானது பிரதேச மற்றும் கிளை நூலகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். ஆவணப்படுத்தல் தனிநபரிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் தேவை தொடர்பில் பொது மக்களை விழிப்படையச் செய்யவேண்டும். படைப்பாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் அவர்களது படைப்புக்களையேனும் ஆவணப்படுத்தல் வேண்டும். குறைந்தபட்சமாக அவர்தம் படைப்புக்கள் ஒரு நூலகத்திலாவது ஆவணப்படுத்தியுள்ளமையை உறுதிசெய்ய வேண்டும். நூலகர்கள் நூற்சேகரிப்பில் பிற நூலகர்களுடனும் அதேவேளை படைப்பாளர்களுடனும் ஆரோக்கியமான நட்பினைப் பேணவேண்டும். இதன் மூலம் பயனுள்ள சேகரிப்பினை கட்டியெழுப்ப முடியும்.

**திறவுச்சொற்கள்:** ஆவணவாக்கம், இலங்கைத் தமிழ் வெளியீடுகள், தமிழியல் வெளியீடுகள்

# பன்முகப்பங்குதாரர்களின் பங்கேற்புடன் கூடிய ஆவணவாக்கல்: வடமாகாண நீர் வளம் தொடர்பான எண்ணிம சேமவைப்பிட உருவாக்கம்

ரூ.செந்தாழன்[1*], க.சந்திரசேகர்[2]

**அறிமுகம்**

"பன்முகப்பங்குதாரரின் பங்கேற்புடன்கூடிய அணுகுமுறையூடாக வடமாகாணத்தின் நீர் பாதுகாப்பு - பங்காற்றல் செயல் ஆய்வு" எனும் தலைப்பிலான இச்செயற்றிட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆறு பீடங்களின் கல்வியியளாலர்களையும் மற்றும் சர்வதேச அளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் துறைசார் ஆலோசகர்களையும் உள்ளடக்கியது. இலங்கையின் வடபகுதிக்கான நீர் வளப் பாதுகாப்பை கட்டியெழுப்புவதற்கான இத்திட்டம் 2020ஆம் ஆண்டிலிருந்து கடந்த நான்கு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த திட்டமானது மூன்று பிரதான நோக்கங்களின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அவையாவன: அறிவியல் இடைவெளிகளை நிரப்புவதன் மூலம் நீர் வளம் சார்ந்த அறிவுசார் சமூகத்தை உருவாக்குதல்; நீர்ப்பாதுகாப்புத் தொடர்பில் பொருத்தமான தீர்வுகளை முன்வைப்பதற்கென ஒருங்கிணைக்கப்பட்ட சமூகமட்ட பங்கேற்பு மற்றும் கலந்துரை யாடலுக்கான தளத்தினை உருவாக்குதல்; சமூகம் சார்ந்த அளவீடுகள், அடைவுகள், மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் அனைத்து மட்டத்திலும் நீர் வளம் தொடர்பான சமூக விழிப்புணர்வை ஊக்குவித்தல்.

இவற்றுள், முதலாவது நோக்கத்தினை அடைவதற்கான செயல் வடிவமாக வடமாகாணத்தின் நீர் வளம் தொடர்பிலான புலமைசார் ஆவணங்களை உள்ளடக்கிய ஒரு எண்ணிம சேமவைப்பிடத்தை (digital repository) உருவாக்கும் முயற்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த ஆவணங்களுக்கான தேடலை மேற்கொள்கையில், அச்சுருவிலான பல ஆவணங்கள் பல்வேறு நூலகங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடத்தில் காணப்பட்ட போதிலும் அவற்றிற்கான அணுகுகை மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தமை அவதானிக் கப்பட்டது. வடமாகாணத்தில் நீர் வளப் பாதுகாப்புத் தொடர்பிலான சுகாதார, சமூக, பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினைகள் பற்றியும், இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றியும் வெளிப்படுத்தி நிற்கின்ற அறிவார்ந்த இப்படைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் பங்குதாரர்களிடையே அறிவுப் பகிர்வு, நீர் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு, மற்றும் ஆய்வுச் செயற்பாடுகளுக்கு உதவுவதை இந்த எண்ணிமச் சேமவைப்பிடம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**செயற்றிட்ட அமுலாக்க படிமுறைகள்**

இச்செயற்றிட்டத்தின் முதலாவது நோக்கத்தினை அடைவதற்கான செயற்பாடாக ஏற்கனவே வெளியிடப்பட்ட வடமாகாணத்தின் நீர் வளம் சார்ந்த அறிவார்ந்த ஆவணங்களை ஒரு தளத்தில் கொண்டுவருவதற்காக 'Northern Water Repository' எனும் எண்ணிம சேமவைப்பிடமொன்று Dspace மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு, 2022ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பொருட்டு, வடமாகாணத்தின் நீர் வளம் தொடர்பான அறிவார்ந்த வெளியீடுகள் பல்வேறு

---

[1*]*Corresponding Author:* ரூ.செந்தாழன், WASPAR செயற்றிட்டம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. Email: srubini@univ.ifn.ac.lk.

[2]நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் நூலகங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு, அவை யாவும் எண்ணிமப்படுத்தப்பட்டு, இச்சேமவைப்பிடத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. நீர் தொடர்பான வெளியீடுகளைப் பொறுத்தவரையில், ஆய்விதழ் கட்டுரைகள், மாநாட்டு ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்கள் அல்லது கட்டுரைகள், நூல்கள், நூல் அத்தியாயங்கள், ஆய்வறிக்கைகள் போன்ற புலமைசார் வெளியீடுகளுடன், செயற்றிட்ட அறிக்கைகள், செய்தித்தாள் கட்டுரைகள், செய்தி உருப்படிகள், ஆராய்ச்சி மூல தரவுகள், மற்றும் காணொளிகள் என்பனவும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டன. மேலும், இவ் வெளியீடுகள் அனைத்தும் 12 விடயப்பரப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு, தேடலை இலகு படுத்துவதற் காக குறித்த ஆவணங்களுக்கான மீதரவுகளுடன் (தலைப்பு, ஆசிரியர், வெளியீட் டாளர், வெளியிடப்பட்ட ஆண்டு, ஆவண வகை, மொழி, தராதர எண், சுருக்கம், திறவுச்சொற்கள், DOI, URL, etc.) இச்சேமவைப்பிடத்தில் தரவேற்றப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டத்தின் கீழ் 2021-2023 காலப்பகுதியில், இச்சேமவைப்பிடத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட நீரின் தரம் தொடர்பான ஆவணங்கள் நூல்விபரண பகுப்பாய்விற்கு (bibiliometric study) உட்படுத்தப்பட்டு ஆய்வு இடைவெளிகள் கண்டறியப்பட்டது (Rubini *et al*., 2023). இந்த எண்ணிம சேமவைப்பிடத்தின் பராமரிப்பு மற்றும் இற்றைப்படுத்தல் பணிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தினூடாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

தற்போது வரை, வடமாகாண நீர் வளம் தொடர்பில் ஆய்விதழ் கட்டுரைகள் (139), மாநாட்டு ஆவணங்கள் (94), நூல்கள், (02), நூல் அத்தியாயங்கள் (03), செயற்றிட்ட அறிக்கைகள் (08), மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் என்பன சேகரிக்கப்பட்டு இச்சேமவைப்பிடத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாவணங்களுள் பெரும்பாலானவை பல்கலைக்கழகங்களால் வடமாகாண நீர் வளம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட ஆய்விதழ் கட்டுரைகளும் மாநாட்டுக் கட்டுரைச் சுருக்கங்களும் ஆகும். இவற்றிற்கு அடுத்த நிலையில், நீர் முகாமைத்துவம் சார்ந்த நிறுவனங்களால் (நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, நீர் வளச்சபை) வெளியிடப்பட்ட அறிக்கைகள் காணப்படுகின்றன. இவ்வாறு சேகரித்துப் பதிவேற்றப்பட்ட அனைத்து ஆவணங்களும் நீர் வளங்கள், நீரின் தரம், நீர்வாழ் சூழலியல், நீர்வாழ் உயிரியல் மற்றும் வேதியல், நீர்நிலவியல், நீர்சமூகவியல், நீர் ஆளுகை மற்றும் நீர் முகாமைத்துவம் போன்ற பல்வேறு விடயப்பரப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒப்பீட்டு ரீதியில், சேகரிக்கப்பட்ட மொத்த ஆவண எண்ணிக்கையில் ($n$=248) நீரின் தரம் சார்ந்த ஆவணங்களே அதிகளவில் (ஏறத்தாழ 50%) காணப்படுகின்றன.

இச்சேமவைப்பிடமானது வடமாகாணத்தின் நீர் வளம் சார்ந்த அனைத்து வகையான வெளியீடுகளையும் ஓரிடப்படுத்திச் சேமிப்பதனையும், இவ்வெளியீடுகளுக்கான அணுகலை இலகுவாக்குவதையும், கற்றல் மற்றும் ஆய்வு செயற்பாடுகளுக்கு உதவுவதையும் இலக்காகக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

வடமாகாண நீர் வளம் சார்ந்த வெளியீடுகள் அனைத்தையும் ஓரிடப்படுத்தி பாதுகாப்பதிலும், குறித்த அறிவார்ந்த ஆவணங்களுக்கான அணுகலை அதிகரிப்பதிலும், அதன் மூலம் அறிவுசார் தொடர்பாடலை மேம்படுத்துவதிலும், இப்பிரதேச நீர் வளப் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வைப் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதிலும் இச்சேமவைப்பிடம் சிறந்த பங்களிப்பை நல்கத் தொடங்கியுள்ளது.

வடமாகாண நீா் வளம் தொடா்பான பல்வேறு வகையான ஆவணங்களையும், தகவல்களையும் உள்ளடக்கியுள்ள இச்சேமவைப்பிடம் தொடா்பான விழிப்புணா்வு கல்வியியலாளா்கள், ஆய்வாளா்கள், பல்கலைக்கழக மாணவா்கள் மத்தியில் மட்டுமல்லாது பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும், புலமைசாா் ஆவணங்களை மட்டுமல்லாது, வடமாகாண நீா் வளம் தொடா்பான ஏனைய வெளியீடுகளையும் இச்சேமவைப்பிடத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் அவற்றிற்கான அணுகலை விரிவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். தெரிவுநிலையை அதிகரிப்பதற்காக யாழ் பல்கலைக்கழக நூலகத்தினுடைய வலைத்தளத்தில் இச்சேமவைப்பிடத்தின் URLக்கு இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சேமவைப்பிடத்தை தொடா்ச்சியாக இற்றைப்படுத்தி, பராமரிப்பதற்கு தேவையான திறன்களை வளா்த்துக்கொள்வதற்கு நூலக ஆளணியினருக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், துறைசாா் கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுப்பது நன்மை பயக்கும்.

**திறவுச்சொற்கள்:** எண்ணிம சேமவைப்பிடம், நீா் வளம், Northern Water Repository, இலங்கை.

**உசாத்துணை**

Jones, R.E., Andrew, T. & MacColl, J. (2006). The institutional repository. Elsevier.

Rubini, S.,Chandrasekar, K.,Janen, T.& Sriskandarajah, N. (2023). Water quality in Northern Province of Sri Lanka: A bibliometric analysis of publications 1960–2021. *World Water Policy*, 9(3), 414–436. https://doi.org/10.1002/wwp2.12117

# Migration of Bibliographic Data to Koha at the Women's Education and Research Centre

S. Ketheeswaren*

## Introduction

The Women's Education & Research Centre (WERC) in Colombo, Sri Lanka, undertook a project to migrate its library management system from WINISIS to Koha on March 31, 2024. This transition aimed to modernise the library's operations and provide a more user-friendly experience for patrons. However, the transition revealed limitations in the existing WINISIS data, which required additional processing for optimal functionality in Koha.

## Project plan and Methods

Following the methodology proposed by Cong and Xiaoyi (2009), the data migration process necessitated three key steps, such as:

**Data Extraction:** The project began with extracting 5,238 bibliographic records from the WINISIS system. These records represent the core information about the library's collection.

**Data Transformation:** The extracted data was not directly compatible with Koha's data structure. Therefore, the bibliographic records were transformed into a format compliant with Koha's MARC standard, which is a widely used library cataloguing format. This transformation ensured the smooth transfer of bibliographic data into the new system.

**Data Loading:** Once transformed, the data was loaded into Koha. This process successfully populated the new system with 4,626 bibliographic items, representing the library's holdings.

## Findings and Discussion

The initial data migration successfully transferred bibliographic records to Koha, providing a solid foundation for the library. However, missing fields mentioned below from the original WINISIS data hindered Koha's full potential.

**Publication Information:** Incomplete details on the place of publication, publisher, and publication date hinder resource identification.

**Physical Description:** Missing information on the physical extent of items, such as pages or volumes, limits catalogue browsing.

**Item Details:** The absence of crucial details like item type, status, collection code, acquisition source, cost, volume number, and URI restricts functionalities like

**Corresponding Author*: S. Ketheeswaren, Library, University of Jaffna, Sri Lanka.
Email: vskethees@univ.jfn.ac.lk

searching, inventory management, and item tracking. The migration date was used as the acquisition date for all records due to missing historical data.

These gaps limit Koha's effectiveness for searching, browsing, and managing collections (Mole & Ofodu, 2017). Further, identifying and merging duplicate records could not be performed during data cleaning due to these missing data. Duplicate entries can lead to inaccurate data and inconsistencies within the library catalogue (Singer, 2009). Hence, effective utilization of Koha's functionalities requires populating these missing data fields.

**Conclusion and Suggestions**

While the initial data migration successfully transferred bibliographic data to Koha, additional work is necessary to optimize the system for WERC's needs. Manually editing records within Koha will be necessary to populate the missing data fields and unlock the system's full potential.

To ensure Koha's successful implementation and enhance its usability at WERC, three recommendations are proposed.

**Staff Training:** Train staff on manual data entry in Koha to populate missing fields, enrich the catalogue, improve search capabilities, and identify duplicate records.

**Duplicate Record Management:** Conduct a comprehensive check for duplicate records and merge identified duplicates to ensure data accuracy.

**Data Enrichment Projects:** Undertake projects to add details like author data, subject headings, and digital resource information to enhance the discoverability and usability of the library's resources.

Addressing these data limitations and implementing these actions will help WERC leverage Koha's full functionalities, creating a robust and user-friendly library management system.

**Keywords:** Library data migration, Koha, WINISIS, Women's Education & Research Centre

***References***

Cong, P. & Xiaoyi, Z. (2009). Research and Design of Interactive Data Transformation and Migration System for Heterogeneous Data Sources. In: WASE International Conference on Information Engineering.

Mole, A. J. C. & Ofodu, P. N. (2017). Global Best Practices in Cataloguing and Classification in Open and Distance Learning Libraries. *ATBU Journal of Science, Technology and Education,* 5(2), 16-22.

Singer, R. (2009). Linked Library Data Now! *Journal of Electronic Resources Librarianship,* 21(2), 114-126. doi:10.1080/19411260903035809

# ஓலைச்சுவடிகளை எண்ணிமப்படுத்தலும் பாதுகாத்தலுக்குமான செயற்றிட்டம்

மே.கபேசன்[1*], இ.குபேசன்[2]

**அறிமுகம்**

மனித இனம் தோன்றி அவற்றின் பரிணாமவளர்ச்சி காரணமாக அறிவு விருத்தியடையத் தொடங்கியது. இவ்அறிவு விருத்தியானது ஆரம்பகாலங்களில் ஒலிகளாகவும், குறியீடுகளாகவும் பரிமாறப்பட்ட போதும் பிற்காலத்தில் அவை எழுத்து வழக்கிற்கு மாற்றமடைந்தன. இவ் எழுத்து வழக்கின் வளர்ச்சியும் மனிதவிருத்தியுடன் தொடர்புபட்டதாகவே இருந்து வந்துள்ளது. ஆரம்பகாலங்களில் மனிதன் தனது அறிவைப் பரப்புவதற்கு எழுத்து ஊடகமாகக் கற்பாறைகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட களிமண் தகடுகள் போன்றவற்றைப் பயன்படுத்தினாலும் காகிதங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் பதப்படுத்தப்பட்ட புற்களையும், ஓலைச்சுவடிகளையும் அறிவை பரப்புவதற்கான ஊடகமாக மனிதன் பயன்படுத்தினான். பெறுமதிமிக்க தகவல் வளங்களாகவும், வரலாறு மற்றும் கலாசாரம் என்பவற்றை உள்ளடக்கிய வகையிலும் மனித அறிவின் ஆழத்தை வெளிப்படுத்தும் ஒன்றாக ஓலைச்சுவடிகளின் தொகுப்பு காணப்படுகின்றது. (Nishanthi & Wijayasundara, 2022). இவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஓலைச்சுவடிகள் இலங்கையில் தற்போதுவரை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் சமூகக் குழுக்களிடையே முறையான வகையிலும் முறைசார்பற்ற வகையிலும் பாதுகாத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சி.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாதையர், ஆறுமுகநாவலர் போன்றவர்களால் சுவடிகள் பலவும் நூல்களாக பதிப்பிக்கப்பட்டபோதும் எண்ணற்ற சுவடிகள் இன்றுவரை முறையாகப் பதிப்பிக்கப்படாமல் சுவடிகளாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றன.

மேற்படி சுவடிகளைப் பாதுகாத்து, பராமரித்து, அவற்றில் உள்ள விடயதானங்களை அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அந்தவகையில், யாழ்ப்பாணப் பல்கலைக்ககழக வித்தியானந்தன் நூலகத்தில் சுமார் 207 ஏட்டுச்சுவடிகள் (24,607 தனித்தனி ஓலைகளைக் கொண்டது) சேகரிக்கப்பட்டு, பாதுகாத்து, பராமரிக்கப்படுகின்றன. இச்சேகரிப்பில் சித்தவைத்தியம், சோதிடம், இலக்கியம், விலங்கு வைத்தியம், வரலாறு, மொழி போன்ற பல விடயப்பரப்புக்கள் சார்ந்த சுவடிகள் காணப்படுகின்றன. இச்சுவடிகளை எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து அனைவரும் பயன்படுத்தக்கூடியதாக மாற்றுவதை பிரதான நோக்கமாகக் கொண்டதாக சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் நம்பிக்கை நிதியத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து எண்ணிமப்படுத்தும் செயற்றிட்டம் காணப்படுகின்றது.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

இச்செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் அனுமதி பெறப்பட்டது. நூலகத்தில் பாதுகாத்து பராமரிக்கப்படுகின்ற சுவடிகளை தொற்றுநீக்கி, எழுத்துக்கள் தெளிவாக்கப்பட்டு, சுவடிகளை எண்ணிமப்படுத்தலுக்கு தயார்படுத்துவது இச்செயற்றிட்டத்தின் முதற்படியாகும். இவ்வாறு தயார்படுத்தப்பட்ட சுவடிகளை மின்வருடியைப் பயன்படுத்தி PDF கோப்புகளாக இலத்திரனியல்

[1*] *Corresponding author:* மே.கபேசன், நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
Email: menusham01@gmail.com

[2] நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

வடிவத்திற்கு மாற்றுதல், பிரதியாக்கம் செய்யப்பட்ட சுவடிகளை ஓலைச்சுவடி வாசிப்பாளனின் உதவியுடன் வாசித்து அறிதல், எழுத்து வடிவத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட சுவடியின் பிரதிகளை மூலச்சுவடியை வைத்து செவ்வைபார்த்தல், செவ்வை பார்க்கப்பட்ட பிரதிகளை அச்சிடுதல், பிரதியாக்கம் செய்யப்படுகின்ற ஓலைச்சுவடிப் பிரதிகளை முகாமைத்துவம் செய்து வாசகர்கள் அணுகுவதற்காக (DSpace Library Content Management System) எனும் உள்ளடக்க முகாமைத்துவ முறைமை மூலம் தகவல் பரவலாக்கம் செய்தல் என்பன தொடர்ச்சியான செயற்பாடுகள் ஆகும்.

**செயற்திட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடிகளில் மேற்கூறப்பட்ட செயன்முறை களுக்கு உட்படுத்தப்பட்டுத் தற்போது நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சுவடிகள் எண்ணிமப்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளன. மேலும், 'முதலியார் கல்வெட்டு' எனும் ஓலைச்சுவடியானது (21 ஓலைகளைக் கொண்டது) தற்போது வழக்கில் உள்ள எழுத்துக்களாக மாற்றியமைக்கப்பட்டுச் செவ்வை பார்க்கப்பட்டுள்ளது. இதன் அடுத்த நடவடிக்கையான அச்சு வடிவில் வெளியீடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

ஓலைச்சுவடிகளை எண்ணிமப்படுத்தும் இச்செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் வாசகர்களால் பயன்படுத்தப்படாமல் உள்ள சுவடிகளைப் பராமரித்தல், எண்ணிமப்படுத்தி வாசகர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில் மாற்றியமைத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. கூடியதாக உள்ளது. இதன் மூலம் முன்னோர்களின் கலாசாரம், வைத்திய முறைகள், மிருகவைத்திய முறைகள், சோதிட மரபுகள் போன்ற விடயங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினரிடம் கையளிப்பதற்கான சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்துடன் தொடர்புடைய வெளிப்பிரதேசங்களில் உள்ள ஓலைச்சுவடிகளையும் தேடிப்பெற்று தேர்ந்தெடுத்து இச்செயற்றிட்டத்தின் மூலம் பாதுகாக்க எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற வேறு நிதி உதவிகள் கிடைக்கப்பெற்றால் ஓலைச்சுவடிகளுக்கெனத் தனியானதொரு பிரிவினை அமைக்க நடவடிக்கையினை மேற்கொள்ளமுடியும். தற்காலத்தில் இவற்றினை வாசித்து அவற்றின் விடயதானங்களை வெளிக் கொண்டுவருவதற்கு வாசிப்பாளர்கள் அரிதாக காணப்படுகின்றனர். எனவே ஓலைச்சுவடிகளை வாசிப்பதற்கும் அது தொடர்பான கையாளுகை திறன்களை வளர்த்துக்கொள்ளுதல் அடுத்த தலைமுறையினரை ஊக்குவிக்க வேண்டும். ஓலைச்சுவடிகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் ஊக்கப்படுத்த வேண்டும். ஓலைச்சுவடிகளின் நீண்டகால பாவனைக்காக சுவடிகளை பாதுகாப்பதற்காக ஆய்வு கூடங்களை நிறுவி, நமது முன்னோர்களின் அறிவுச் செல்வத்தினை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு சேர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**திறவுச்சொற்கள்:** ஆவணப்பாதுகாப்பு, ஆவணப்பராமரிப்பு, ஓலைச்சுவடி, எண்ணிமப்படுத்தல்

**உசாத்துணை**

Nishanthi, M., Kumara, H.U.C.S., & Konpola, K.W.A.M. (2023). Research conception of Palm Leaf manuscript conservation: Bibliometric analysis of Scopus database. *International Journal of Multidisciplinary Studies,* 10(2), 13-28.

Nishanthi, M. & Wijayasundara, N.D. (2022). Preservation and Conservation of Palm Leaf Manuscripts at the Library of University of Sri Jayewardenepura. *Vidyodaya Journal of Humanities and Social Sciences*, 7(02).

# யாழ் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள தமிழியல் சார்ந்த தொகுப்புக்களை பாதுகாத்தலும் எண்ணிமப்படுத்தலும்

மு.உஷாஜினி [1*], தி.ஜனன்[2], க.சந்திரசேகர்[3]

**அறிமுகம்**

தற்காலத்தில் வாசகர்களின் தகவற்தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பலவகையான ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் காலத்திற்கு முற்பட்ட ஆவணங்களில் உள்ள தகவல்களின் முக்கியத்துவம் காரணமாக அவற்றினை ஆவணப்படுத்தி பாதுகாக்க வேண்டிய தேவை நூலகங்களிற்கு அதிகரித்துள்ளது. யாழ் பல்கலைக்கழக நூலகமானது "கந்தையா கார்த்திகேசன் நம்பிக்கை நிதி"யத்தின் கீழ் திட்டமொன்றை ஆரம்பித்து அதனூடாக நூலகத்தில் காணப்படுகின்ற அரியவகை நூல்கள், தமிழ் மற்றும் பிறமொழிகளில் வெளியிடப்பட்ட இலங்கைத் தமிழியலுடன் தொடர்புடைய நூல்கள் என்பனவற்றை முறையான பராமரிப்பினூடாக பாதுகாத்து அவற்றின் உள்ளடக்கத்தை எண்ணிமவடிவில் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை எடுத்து. இத்திட்டத்தின் கீழ் யாழ் பல்கலைக்கழக நூலகத்தின் ஆவணக் காப்பகப் பகுதியால் பாதுகாக்கப்பட்டு வரும் அரிய வகையான தமிழியலுடன் தொடர்புடைய நூல்கள் தெரிவு செய்யப்பட்டு, அவை எண்ணிம வடிவத்திற்கு மாற்றப்படுவதோடு, அவற்றினை பொருத்தமான பராமரிப்பு முறைகளினூடாக பாதுகாப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

யாழ் பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்தில் அண்ணளவாக 300,000 நூல்கள் காணப் படுகின்றன. அவற்றுள், 1970க்கு முற்பட்ட கால இலங்கைத் தமிழிற்கு முன்னுரிமை கொடுத்துள்ள நூல்களினுடைய நூலியல் விபரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டியலாக்கப்பட்டன. எண்ணிமப்படுத்தல் செயன்முறையின் முதற்கட்டமாக 2,146 நூல்கள் தெரிவு செய்யப்பட்டு, செயற்றிட்ட குழுவின் உறுப்பினர் களிடம் சமர்பிக்கப்பட்டு, கலந்துரையாடலிற்கு உட்படுத்தப்பட்டு, பின் நூல்களின் உள்ளடக்கம் மற்றும் பௌதீக தன்மை ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டு, எண்ணிம வடிவத்திற்கு மாற்றுவது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டது.

இத்தகைய நடவடிக்கையின் கீழ், இலங்கையின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கும் பல்வேறுபட்ட நூல்களை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எண்ணிமப்படுத்துவதற்கும், அவற்றை பாதுகாப்பதற்கும், அச்சேகரிப்பினை DSpace (Library CMS) எனும் மென்பொருளின் துணையுடன் தரவுத்தளத்தினுடாக மக்கள் பார்வைக்கு வெளிக்கொண்டுவருதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**செயற்றிட்ட அமுலாக்க படிமுறைகள்**

இத்திட்டத்தின் இலக்குடன் தொடர்புடைய மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அரிய நூல்களின் நூல்விபரப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. இவ்விபரங்கள் "மைக்ரோசாப்ட்-எக்செல் (Ms-Excel)" கோப்பில் பதிவேற்றப்பட்டது. அதனையடுத்து, நூல்களின் முக்கியத்துவத்தின் வரிசையில் மின்வருடுதலிற்கான குறிப்பிட்ட நிபந்தனையின்கீழ் மின்வருடுதலிற்கு (SCAN) உட்படுத்தப்பட்டது. அதன் வடிவமைப்பானது

[1*] *Corresponding author:* மு.உஷாஜினி, நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
Email: dctc@univ.jfn.ac.lk

[2,3] நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

JPEG, TIFF & PDF வடிவக்கோப்புக்களாக சேமிக்கப்படுகிறது. அத்துடன் மின்வருடுதல் செய்யப்பட்ட நூல்களின் நூல்விபரங்கள் கோப்பினுள் பதிவேற்றப்படுகின்றது. அந்நூல்களின் "மீ-தரவு" விபரங்கள், "DSpace பயனாளர் சமூகத்தின் (Community guidelines)" வழிகாட்டுதல்களுக்கமைய மின் வருட லிற்குட்பட்ட நூலியல் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள தொகுப்பானது PDF வடிவில் பதிவேற்றப்படுகிறது.

இந்த சேகரிப்பானது வன்தட்டு-நிலை நினைவகங்களில் பதிவேற்றப்படுவது மட்டுமின்றி, அவை வெவ்வேறு இடங்களில் மென்பிரதிகளாகவும் சேமித்து வைக்கப்படுகின்றன. இறுதி நடவடிக்கையாக நூல்களினது நூலியல் விபரம் மற்றும் உள்ளடக்கத்தின் தொகுப்பானது DSpace இல் பதிவேற்றம் செய்யப்பட்டு, அவை வாசகர்களின் பாவனைக்கு அனுமதியளிக்கப்படுகிறது. வாசகரிற்கு குறிப்பிட்ட நூலின் முழுத்தொகுதியானது தேவைப்படும்போது நூலகரை தொடர்புகொள்ளுமிடத்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அக்குறிப்பிட்ட நூலானது நிபந்தனையின் கீழ் அவ்வாசகருக்கு மட்டும் பாவனைக்கு அனுமதியளிக்கப்படும்.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

யாழ் பல்லைக்கழக நூலகத்தில் உள்ள அரிதான இலங்கை தமிழியலுடன் தொடர்புடைய நூல்கள் தெரிவு செய்யப்பட்டு, தற்போது வரை 205க்கு மேற்பட்ட நூல்கள் மின்வருடுதல் (Scanning) செய்யப்பட்டு, அவை எண்ணிம நூல்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தின் கீழ் இலங்கைத் தமிழியல் சேகரிப்புக்களை பாதுகாத்தல், எண்ணிமப்படுத்தல் தொடர்பான நன்கு வரையறுக்கப்பட்ட கொள்கைகளினை உருவாக்கல், பயனாளர்களின் அணுகலை மேம்படுத்துதல், மற்றும் சேகரிப்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தல். அவற்றிற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல் ஆகிய பயன்கள் எதிர்பார்க்கப்படுகிறது. இச்செயற்பாடானது அடுத்த கட்டமாக தமிழ் சஞ்சிகைகள், ஓலைச்சுவடிகள் என விரிவுபடுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

பதிவேற்றத்தின் போது ஏற்படும் பதிப்புரிமைச் சிக்கலைத் தவிர்க்கும் நோக்கத்துடன் தற்போது அந்நூல்களின் விபரம் மற்றும் உள்ளடக்கமானது பதிவேற்றம் செய்யப்படுகிறது. நூல்களின் உள்ளடக்கமானது 'PDF' கோப்பு வடிவில் பதிவேற்றம் செய்யப்படுவதனால், அவை தேடற் செயன்முறைக்கு உட்படுத்தபடவில்லை. தற்போது நூலியல் விபரங்கள் சார்ந்த தரவுத் தேடலமைப்பு மாத்திரமே செயற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் Dspaceஇல் தேடல் பொறிமுறையானது மீதரவு விபரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்நூல்கள் தமிழ்மொழியில் காணப்படுவதனால் அவற்றினை OCR தொழில்நுட்பத்தினூடாக மாற்றுதல் சவாலாக இனங்காணப்பட்டது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

இத்திட்டத்தின் கீழ் காலத்திற்கு முற்பட்ட இலங்கைத் தமிழியல் சார்ந்த நூல்களிலுள்ள பயனுள்ள தகவல்களை மீட்டெடுப்பதன் முதற்கட்டமாக யாழ் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள தமிழியல் சார்ந்த நூல்களை பொருத்தமான பராமரிப்பு முறைகளினூடாக பாதுகாப்பிற்கு உட்படுத்தி, எண்ணிமப்படுத்தல் கொள்கைக்கு அமைய மூல வடிவத்திலிருந்து எண்ணிம வடிவத்திற்கு மாற்றியமைக்கப்படுவதுடன், நூல்களின் எண்ணிமப்படுத்தப்பட்ட பிரதிகளை நீண்டகாலம் பாதுகாக்கவும், அவற்றின் பாவனையை மேம்படுத்துவதையும், கருத்திற்கொண்டு செயற்படுகின்றது.

நூலக தன்னியக்கமாக்கல், நிகழ்நிலை பொது அணுகல் பட்டியல் (OPAC) போன்ற கணினி மயமாக்கப்பட்ட பட்டியல்கள் மூலம் சேகரிப்புகளுக்கான அணுகலை எளிதாக்கலாம் .

ஆவணங்களை பிரதியெடுத்தலும், இணையம் மற்றும் இலத்திரனியல் நினைவகங்களின் உதவியுடன் பாதுகாத்தல்; OCR மின்வருடல் மூலம் ஆவணமாக்கப்பட்டு Dspace தேடல் சொற்களினை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது செயற்கை நுண்ணறிவு மென்பொருளினுள் நூல்களை உள்ளடக்கி கண்டறிவதற்கான குறிப்புச்சொற்கள் மற்றும் நூலியல்விபரம் எண்ணிக்கை மேம்படுத்தப்படவேண்டும்.

**திறவுச்சொற்கள்:** மீதரவுப் பயன்பாடு, மின்வருடுதல், நூலக மென்பொருள் பாவனை, ஆவணங்கள்

**உசாத்துணை**

Gangabadadarachchi, V. (n.d.). Digital collection building initiatives of National Library and Documentation Centre. *Sri Lanka Journal of Librarianship and Information Management* 2(1), 38–43.

Hindagolla, M. (2012). A Study on digitization initiatives of Sri Lanka with special reference to library materials. 55, 83–106.

Omame, I. & Alex-nmecha, J.C. (2020). Artificial Intelligence in Libraries. https://doi.org/10.4018/978-1-7998-1116-9.ch008

Shimray, S.R. & Ramaiah, C.K. (2018). Digital preservation strategies: An overview. In :11th Nationl Confwerence on Recent Advances on Information Technology.(46-54).

# யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் ஆவணவாக்கற் செயற்றிட்டம்

சி.அனுசியா[1*], செ.தர்மிளா[2]

**அறிமுகம்**

மிகப்பழமை வாய்ந்ததும் தென்னாசியாவின் சிறந்த நூற்சேர்க்கையைக் கொண்டிருந்ததுமான யாழ்ப்பாணப் பொதுசன நூலகமானது 1934ஆம் ஆண்டிலிருந்து பெரு வளர்ச்சி பெற்றுவந்தது. 1981இல் இந் நூலகத்தின் விலைமதிப்பற்ற நூற்சேர்க்கை தீயுடன் சங்கமமாகியது. அவ்வாறானதொரு நிகழ்வு இனி எப்போதும் நிகழாதிருக்க ஆவணங்களைப் பேணி பாதுகாக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்ட நிலையில் பொதுசன நூலகத்தின் ஆவணக் காப்பாகப் பகுதியில் காணப்படும் அரிய தகவல் சாதனங்களைப் பாதுகாப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு ஆவணவாக்கல் செயற்றிட்டம் நூலகத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒரு பிரதேசத்தின் சமூக, கலை, கலாசார அம்சங்களைப் பேணும் இடமாகப் பொது நூலகங்கள் இருக்க வேண்டுமென்பதுடன், அப்பிரதேசத்திற்கென்றே உரிய தனித்துவமான அம்சங்களைப் பேணிப்பாதுகாக்கும் இடமாகவும், தொழிற்படுவது பொருத்தமானது ஆகும். அந்த வகையில் யாழ் பொதுசன நூலகத்தின் ஆவணக்காப்பகப் பகுதியானது வடபிரதேசத்திற்கான ஆவணச்சேகரிப்பு மையமாகச் செய்றபட்டு வருகின்றது.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

யாழ் பொதுசன நூலகத்தில் உள்ள ஆவணப்பகுதி, பத்திரிகைப்பகுதி, புத்தகம் கட்டும் பகுதி என்பவற்றின் ஒத்துழைப்போடு ஆவணக்காப்பகத்தில் ஆவணங்கள் பேணப்படும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தொடர் வெளியீடுகளான பத்திரிகைகள், பருவ வெளியீடுகள், அரச வெளியீடுகள், ஆண்டுமலர்கள் முதலான சிறப்பு வெளியீடுகள் இப்பகுதியில் சேகரிக்கப்பட்டு கால ரீதியாக ஒழுங்கு படுத்தப்பட்டு வரு கின்றது. பத்திரிகைகள் அனைத்தும் கால ஒழுங்கில் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டு ஒழுங்கு படுத்தப்படுத்தப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன. கிளை நூலகங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் பத்திரிகைகளும் கட்டப்பட்டு பேணப்படுகின்றன.

1981ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட பத்திரிகைகள் அனைத்தும் பெரும்பாலும் சேகரிக்கப்பட்டுக் கட்டப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்டு காணப்படும். 50ற்கு மேற்பட்ட ஆண்டு மலர்கள் 25ற்கு மேற்பட்ட தலைப்பில் பத்திரிகைகள் பேணப் படுகின்றன. நூலக நிறுவனத்தின் செயற்றிட்டத்தின் கீழ் ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்படுகின்றன. யாழ் பொதுசனநூலகத்தின் வலைத்தளத்தினூடாகவும், நூலக நிறுவனத்தின் வலைத்தளத்தினூடாகவும் ஆவணங்களை பார்வையிடக்கூடிய வகையில் எண்ணிமச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. விழிப்புலனற்ற மற்றும் விசேட தேவையுடையோருக்கான சேவையும் ஆவணக்காப்பகப் பகுதியிலேயே நடைபெறுவதுடன் அத்தகையவர்களின் ஆவணங்களும் பேணப்பட்டு வருகின்றன.

---

[1*] *Corresponding author:* சி.அனுசியா, யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், யாழ்ப்பாணம், இலங்கை. Akskavi12@gmail.com

[2] யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், யாழ்ப்பாணம், இலங்கை.

பல்கலைக்கழக மாணவர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும், மற்றும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், தொழில் தேடுவோர், விவசாயிகள், சுயதொழில் மேற்கொள்வோர் போன்றோருக்கும் இப்பகுதி ஆவணங்கள் பெரிதும் பயன்படுகின்றன. பத்திரிகையில் வரும் தகவல்களை பிரதியாக்கம் செய்வதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புலம்பெயர் நாடுகளில் நிரந்தர வதிவிட உரிமை கோருவோர் தகவல் சேகரிப்பதற்கும் இப்பகுதியை நாடுகின்றனர்.

சஞ்சிகைச் சுட்டி, பத்திரிகைச் சுட்டிகள் தயாரிப்பது தொடர்பான செயற்பாடுகளுக்கும் இப்பகுதி துணை புரிகின்றது. தொடர் வெளியீடுகள் தொடர்பான அனைத்து தகவல்களும் இவ் ஆவணக்காப்பாகப் பகுதியூடாக வழங்கப்படுகின்றது. எண்ணிமப்படுத்தப்படுவதனூடாக அனைவரும் இலகுவில் தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் மூல ஆவணங்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுகிறது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

யாழ் பொதுசன நூலகத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. போதிய நிதி மற்றும் பயிற்றப்பட்ட ஆளணி மூலம் அவசியமான ஆவணங்கள் சேகரிக்கப்பட்டுப் பேணப்படுவதுடன், தகவல் தேடலை மேற்கொள்பவர்கள் இலகுவில் தகவல்களைப் பெறக்கூடிய வகையிலும் அனைத்து ஆவணங்களும் எண்ணிமப்படுத்தப் பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் கருத்திற்கொண்டு இச் செயற்றிட்டம் செயற்படுத்தப் படுகின்றது.

எதிர்காலத்தில், ஓலைச்சுவடிகள், நுண்படச்சுருள் முன்னோர்கள் பயன்படுத்திய கலைப்பொருட்கள், எழுதுகருவிகள், செப்பேடுகள், அரிய புகைப்படங்கள், நாணயக்குற்றிகள் என்பனவற்றையும் ஆவணக் காப்பகப் பகுதியில் சேகரித்து ஒழுங்கமைப்பதன் மூலம் ஆவணக் காப்பகப்பகுதியானது முழுமையான, திருப்திகரமான சேவையை வழங்கக்கூடியதாக இருக்கும். ஆரம்பகாலந்தொட்டு இற்றைவரை நூலகத்தில் பணியாற்றிய நூலகர்கள், பணியாளர்கள் தொடர்பான புகைப்படத்துடன் கூடிய ஓர் தொகுப்பும் காட்சிப்படுத்தப் படுவது மிகவும் அவசியமான வரலாற்றுப் பேணல் ஆகும். இலங்கை தொடர்பான விடயங்கள், தேசியச்சின்னங்கள், வரலாற்று முக்கியத்துவமுடைய ஆவணங்கள், அரசியல் கட்சிகள் போன்றவற்றின் தகவல்களையும் ஆவணப்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். நூல்கள், பத்திரிகைகள், பருவ வெளியீடுகள் என அனைத்து தகவல் சாதனங்களையும் மென் பொருளினூடாகப் பார்வையிடக்கூடியவாறு இச் செயற்றிட்டம் விரிவாக்கம் செய்யப்படல் வேண்டும். ஆவண காப்பகப்பகுதிக்குரிய அனைத்து ஆவணங்களும் எண்ணிமப்படுத்தப்பட்டு யாழ் பொதுசன நூலகத்தின் இணையத்தளத் தினூடாகவே பார்வையிடக்கூடியதாக ஒழுங்கமைக்கப்படுவது ஆவணவாக்கல் செயற்றிட்டத்தில் பூரணத்துவத்தை ஏற்படுத்தும் எனலாம்.

**திறவுச்சொற்கள்:** யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், நூலக சேவைகள், ஆவணக்காப்பகம்

# Automation of St. Francis Xavier's Seminary Library at Columbuthurai, Jaffna, Sri Lanka

A.G.Saverimuttu*

## Introduction

The St. Francis Xavier's Seminary Library, a vital resource established forty years ago, specializes in Theology and Philosophy. Housing approximately 28,000 books, including encyclopaedias, subject dictionaries, multi-volume Bible commentaries, atlases, and various theological journals. It plays a crucial role in theological education. Before automation, readers could only rely on the author card catalogue to find specific books. Since other card catalogues were incomplete, browsing the shelves was often the only effective method for locating books. Additionally, when a book was borrowed, the Library Assistant had to manually record the details on the Reader's Card and mark the return date on the book's slip. Recognizing the need to modernize and improve the library's efficiency, the Seminary Council initiated the automation project in June 2021 with a budget of Rs.1.5 million. The primary objectives were to streamline library processes, enhance service delivery, and make resources more accessible to students and staff.

## Project plan and Methods

The project commenced with an introductory session by Dr. S. Ketheeswaren, Deputy Librarian of the University of Jaffna, who continued to guide the automation process. Partnering with Tech2Lib, a Sri Lankan company specializing in library automation, the library secured a cost estimate and subsequently obtained a subsidy from donors in Rome. Due to economic challenges, the project required a revised budget of Rs.1.8 million in 2023. The Tech2Lib company has provided the library with a tailor-made software programme and server connectivity to initiate and maintain an automated library system. This software is based on the Koha open-source integrated library management system (ILS). The library makes use of a cloud server, for which annual fees are paid. Three additional Library Assistants were hired; they were given initial training about library cataloguing using automation. Further, they had weekly refresher training sessions where they presented problems encountered while trying to catalogue various types of books and other resources. They focused initially on the Lending Section, followed by the Reference Section and journal issues. Identity cards with barcodes have been issued to the students and the staff members of the Seminary to automate the borrowing process.

**Corresponding author:* A.G.Saverimuttu, Francis Xavier's Seminary, Columbuthurai, Jaffna, Sri Lanka.
Email: ags_saverimuttu@hotmail.com

**Findings and Discussion**

The automation project has led to significant improvements in library operations. The Lending Section, consisting of around 16,000 books, has been fully processed, and work on the Reference Section and journals is ongoing. The present cataloguing work began in May 2023, and has been going on for one year and three months as of 08 August 2024. Already the library catalogue is available for readers as an OPAC, and students and staff have expressed satisfaction about the ease of searching for specific information about books. Implementing barcode scanning for loans has simplified the borrowing process, reducing manual errors and saving time. The training of Library Assistants and the integration of technology has facilitated a smooth transition to the automated system. The project highlighted the importance of adequate funding and resources in successfully implementing library automation.

**Conclusion and Suggestions**

The automation of St. Francis Xavier's Seminary Library represents a significant advancement, enhancing functionality and service delivery. This modernization effort underscores the critical role of technology in maintaining the relevance and efficiency of library services, demonstrating the potential for other libraries to undertake similar automation initiatives. The Seminary Library has enhanced the knowledge empowerment of its members through the automation process, and improved in its role as a catalyst for excellence in theological and related studies.

Suggestions are given as : Expand the automated system to include digital resources and online access; Implement continuous training programs for library staff; Ensure regular maintenance and updates of the automation system; Seek additional funding sources for further enhancements; Incorporate user feedback mechanisms to continually improve the library experience.

**Keywords:** Library automation, Theology library, Library management, Digital transformation, Library services

# எண்ணிமத் தமிழியலுக்கான நூலக நிகழ்ச்சித்திட்டம்

L.K.Natkeeran[1*], S.Kirsta[2]

**அறிமுகம்**

தமிழியல் என்பது மொழி, இலக்கியம், கலைகள், பண்பாடு, சமூகம், வரலாறு உட்பட்ட விடயங்களைப் பல்துறை முறையில் ஆராயும் கல்வித்துறை ஆகும். மரபார்ந்த துறைகளோடு எண்ணிம வளங்களை, கருவிகளை, முறைகளைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்ளுதல், பகிர்தல், பாதுகாத்தலை 'எண்ணிமத் தமிழியல்' எனலாம். தமிழியல் நீண்ட வரலாறு கொண்டது எனினும், எண்ணிம மனிதவியல் (digital humanities), எண்ணிமப் புலமை (digital scholarship), எண்ணிம நூலகவியல் (digital library) துறைகள் தமிழில் தற்போதுதான் வளர்ச்சியடைந்து வருகிறது. மேற்குலகப் பல்கலைக்கழகங்களில் உள்ள தமிழ் தொடர்பான வளங்கள் பரந்துபட்ட தமிழ் பேசும் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் தமிழில் விபரிக்கப்பட்டு அணுக்கப்படுத்தப்படுவதில்லை. தமிழ் எண்ணிமப்படுத்தலுக்குத் தேவையான தரவுகள் திறந்த முறையில் விரிவாக இல்லை என்றே கூறலாம்.

இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் நோக்கிலும், இந்தத் துறைகளைத் தமிழில் வளப்படுத்தும் நோக்குடனும் ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாக நூலகத்தினால் எண்ணிமத் தமிழியல் (Digital Tamil Studies) என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் பல நாடுகளில் இயங்கும் கூட்டுச் செயற் பாட்டாளர்களுடன் இணைந்து கடந்த ஐந்து ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

**செயற்திட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

எண்ணிமத் தமிழியலுக்கான நூலக நிகழ்ச்சித்திட்டம் அதன் நோக்கங்களைப் பின்வரும் வழிகளில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

**தமிழ் வளங்களைத் தொகுத்தல்**

தமிழ் வளங்களை எண்ணிம வடிவில் தொகுத்து, பாதுகாத்து, திறந்த அணுகுமுறையில் (Open Access) எண்ணிமத் தமிழியல் தளத்தின் (tamil.digital.utsc.utoronto.ca) ஊடாக வெளியிடுவது இத்திட்டத்தின் முதலாவது செயற்பாடாகும். பெரும்பாலான வளங்கள் வெவ்வேறு வடிவங்களிலும் (alternate formats) வெளியிடப்படுகின்றன. ஒரு தொகுதிப் படைப்புக்கள் இயந்திரக் கற்றுலுக்குப் பயன்படக்கூடிய வகையில் திறந்த எழுத்துத் தரவாக (open textual data) வெளியிடப்பட்டுள்ளன.

**ஆய்வுச் செயற்பாடுகளுக்கான சேவைகளை வழங்குதல்**

ஆய்வு அடிப்படையிலான சேகரங்களை உருவாக்குவது, ஆய்வுச் செயற்பாடுகளுக்கு உதவுவது எண்ணிம நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு முக்கிய செயல்முறையாக இருந்து வருகிறது. தமிழியல் ஆய்வாளர்களுக்கான உசாத்துணைச் சேவைகளும் (reference services) வழங்கப்படுகின்றன.

[1*] *Corresponding Author:* L.K.Natkeeran, Library, University of Toronto, Scarborough, Canada.
Email : nat.ledchumykanthan@utoronto.ca

[2] Library, University of Toronto, Scarborough, Canada.

**மென்பொருட்கள் உருவாக்கம்**

தமிழ் உள்ளடக்கங்களைத் தமிழில் காட்சிப்படுத்த, தேட, இனங்காண, பன்மொழி ஆதரவு கொண்ட நூலக மென்பொருட்கள் அவசியம் ஆகும். இதன் பொருட்டு ஐலண்டோரா (islandora.ca) எனப்படும் எண்ணிமக் களஞ்சிய மென்பொருளும், அக்ஸஸ்டூமெமறி (accesstomemory.org) எனப்படும் ஆவணக்காப்பக மென்பொருளும் பயன்படுத்தப்பட்டன.

**நூலக வழிகாட்டிகள், அதிகார வரையறைகள் (authority records) உருவாக்கம்**

தமிழ் வளங்களை இரு மொழிகளில் விபரிக்க உதவும் வகையில், அனைத்துலக சீர்தரங்கள் அடிப்படையிலான வழிகாட்டிகள் மற்றும் அதிகார வரையறைகள் உருவாக்கிப் பகிரப்படு கின்றன. அதிகார வரையறைகளின் ஒரு தொகுப்பு விக்கித்தரவுக்கு பதிவேற்றப்பட்டுள்ளது.

**துறைசார் சமூக (Community of Practice) உருவாக்கத்துக்கான பங்களிப்புக்கள்**

தமிழ் எண்ணிமப் புலமை, எண்ணிம மனிதவியல், எண்ணிம நூலகவியல் தொடர்பான துறைசார் சமூக உருவாக்கத்துக்குப் பங்களிப்பது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு செயல் முறையாக அமைகிறது. மெய்நிகர் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், மற்றும் இணைய மன்றங்கள் ஊடாக சக துறைசார் வல்லுநர்களுடன் அறிவுப் பகிர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்துறைகளுக்குப் புதியவர்களுக்குப் பயன்படக்கூடிய அறிமுக கல்வி வளங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

மேற்குநாட்டுப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் தமிழ்ச் சேகரங்கள் இருப்பினும், எண்ணிமத் தமிழியல் கற்கைக்கான நிகழ்ச்சித் திட்டச் செயல்முறைகள் சிறந்த அடைவுகளை வழங்கியுள்ளது.

ஓலைச்சுவடிகள், காணொளிகள், வலை ஆவணகங்கள் (web archives) என பல்வேறு வகையான உள்ளடக்கங்களையும், பல பொருட்துறை சார்ந்த உள்ளடக்கங்களையும், சுமார் 750,000 மேற்பட்ட பக்கங்களையும் கொண்டதாக தமிழின் பெரிய எண்ணிம நூலகங்களில் ஒன்றாக இது உரு வாக்கப்பட்டுள்ளது. சா.ஜே.வே.செல்வநாயகம் சேகரம், தமிழ்க் கலைக்களஞ்சியங்கள் சேகரம், தமிழ் சோவியத் சேகரம், கொங்குநாடு சேகரம், குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் மற்றும் பவளராணி சேகரம் ஆகியவை இந்த எண்ணிம நூலகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க சேகரங்கள் ஆகும்.

திறந்த அணுக்க உள்ளடக்கங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியதன் ஊடாக, அந்த வளங்களின் பெரும் பகுதி எண்ணிமத் தமிழியல் தளத்தில் மட்டும் அல்லாமல், விக்கியூடகம், இணைய ஆவணகம், கிட்கப் என்று பல்வேறு தளங்கள் ஊடாகப் பகிரப்படுகின்றன. பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வாளர்கள் மட்டும் அல்லாமல், உள்ளூர் மற்றும் உலகளாவிய தமிழ் பேசும் சமூகங்களும் இவற்றைப் பயன்படுத்துகிறார்கள். இந்தச் செயற்றிட்டம் தமிழியல் ஆய்வுகளுக்கும் ஆய்வு அடிப்படையிலான சேகர உருவாக்கத்துக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளது. தமிழ் அடிமைகளின் வரலாறு ஆய்வுக்குழு (Legacies of Tamil Slavery Working Group) முன்னெடுக்கும் ஆய்வின் ஒரு பகுதியாகத் 'தமிழ் அடிமைகள்' தொடர்பான தரவுகள் பிரித்தானியா ஆவணகத்திலிருந்து எண்ணிமப் படுத்தி பெறப்பட்டு, எழுத்துப்படியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழ் கனேடியர் கட்டமைக்கப்பட்ட சூழல் (Tamil Canadian Built Environments) என்ற செயற்றிட்டம், முதுநிலை கட்டிடக்கலை ஆய்வாளரால் வடிவமைக்கப்பட்டு, தொகுக்கப்பட்ட ஒரு தரவுத் தொகுப்பு ஆகும். தமிழ்க் கணிமைக்குத் தேவையான தரவுத் தொகுப்புப் பணிகளுக்கும் பங்களித்துள்ளது. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மீதரவினையும் இடைமுகத்தினையும் வழங்க வேண்டும் என்ற இலக்கு, மென்பொருள் விருத்திக்குப்

பங்களித்தது மட்டும் அல்லாமல் நூலகப் பணியோட்டங்கள், வழிகாட்டல்கள், அதிகார வரையறை உருவாக்கத்துக்கும் உந்துகோலாக அமைந்தது. தமிழ் நினைவு நிறுவனங்களோடும் சமூக அமைப்புக்களுடனுமான கூட்டுச் செயற்பாடுகளே மேற்குறிபட்ட எல்லாச் செயற்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைந்தன.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

திறந்த அணுகுமுறை (Open Access), தனியுரிமை கோராத சேகரிப்பு அபிவிருத்தி முறை (non exclusive licensing), பன்மொழி மீதரவு (multilingual metadata), கூட்டுச் செயற்பாடுகள் என்பன எண்ணிமத் தமிழியலுக்கான நூலக நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவியுள்ளன. தமிழியல் கற்கைக்கான வளங்களை உருவாக்குவது மட்டும் அல்லாமல், இந்தச் செயற்றிட்டத் தினூடாகப் பயிற்றப்பட்ட மாணவர்கள் மற்றும் ஏற்படுத்தப்பட்ட தொடர்புகளும் முக்கியமான அடைவுகள் ஆகும். மேற்குலகச் சூழலில், பன்மொழி மீதரவு உருவாக்கமே பெரும் சவாலாகக் காணப்படுகிறது. தொகுக்கப்பட்டிருக்கும் எண்ணிம வளங்களைப் பரந்த பயன்பாட்டுக்குக் கொண்டு செல்லுதல், மேலதிக சேகரங்களைத் திறந்த அணுக்கத்தில் வெளியிடல், மேலதிக தேடல் வசதிகளை ஏற்படுத்தல், அதிகார வரையறைகளைச் சீரமைத்து வெளியிடல் உட்பட்ட செயற்பாடுகள் அடுத்தகட்டப் பணிகளாக அமைகின்றன.

தமிழில் மீதரவு வெளியிடுவது, தேடுவது போன்ற அடிப்படை விடயங்கள் நீண்டகாலமாகச் சவாலாகவே அமைந்திருந்தது. ஆனால் இன்று தமிழில் பல்லூடக எண்ணிம வளங்களை அணுக்கப்படுத்துவதற் கான கட்டற்ற நூலக மென்பொருட்கள், எழுத்துணரி போன்ற தொழில்நுட்பங்கள் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளன. எனினும் இவற்றின் பயன்பாடு அரிதாகவே உள்ளது. தமிழ் மீதரவு உருவாக்கம் தொடர்பான வழிகாட்டல்களும், அவற்றுக்குத் தேவையான அதிகார வரையறைகள், நிலைத்த அடையாளங்காட்டிகள் போன்ற சேவைகளும் இன்னும் செழுமை பெற வேண்டும். எண்ணிம வளங்களை, பல்வேறு வடிவங்களில், இலகுவாக, பரவலாகக் கிடைக்கச் செய்வது, தரவுக் காட்சிப்படுத்தல், பகுப்பாய்வு, இயற்கைமொழிச் செயலாக்கம் போன்ற அடுத்தகட்ட எண்ணிமத் தமிழியல் பணிகளுக்கு அடித்தளமாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** எண்ணிமத் தமிழியல், எண்ணிமப் புலமை, எண்ணிம நூலகவியல், பன்மொழி மீதரவு

**உசாத்துணை**

Zaagsma, G., Stokl Ben Ezra, D., Rurup, M., Margolis, M. & Levi, A. (2022). Jewish Studies in the Digital Age. De Gruyter Oldenbourg. https://doi.org/10.1515/9783110744828

# அறிவுக் களஞ்சியம் : மாதாந்த பத்திரிகைப் புதிர்ப்போட்டி

ரா.அச்சலா சுகந்தினி*

**அறிமுகம்**

நூலகம் என்பது பண்டைய காலங்களைப்போல் அறிவேடுகளைத் தேக்கி வைக்கும் களஞ்சிய சாலைகளாக மட்டும் ஒடுக்கப்பட்டு விடாது காலத்தின் தேவைகருதியும், பயனாளிகளுக்கேற்ற வகையிலும் சமூகம் சார்ந்த பல பணிகளைச் செய்யவேண்டிய கடப்பாட்டிலுள்ளது. இதனடிப்படையில் பொது நூல கங்களாவன தமது பயனாளிகளின் நன்மை கருதி அவர்களுக்குப் பொருத்தமான செயற்றிட்டங்களை அமுலப்படுத்தி தம்மோடு இதுவரை காலமும் தொடர்புறாத வாசகர்களை ஈர்க்கும் வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது தற்காலத் தேவையாகவுள்ளது. பொது நூலகங்களைப் பொறுத்தவரையில் சிறுவர்கள், பெரியவர்கள், சிரேஷ்ட பிரஜைகள், விசேட தேவைக்குட்பட்டோர் போன்ற வகையினர் பயனாளிகளாகக் காணப்படினும் சிறுவர்கள் அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பத்திரிகை வாசிப்பில் ஈடுபடாமலிருப்பது பெரும் குறைபாடாகவேயுள்ளது. பாடசாலைக் கல்வி முடிவடைந்ததும் தமது உயர்கல்வி குறித்துத் தீர்மானம் எடுப்பதற்கும், அரச சேவையொன்றிற்குள் நுழைவதற்கும் பொதுஅறிவு எனும் விடயப்பரப்பு முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது. இவ்விடயப்பரப்பு சார்ந்த அறிவை மாணவர்கள் பாடசாலைக்கல்வி மூலம் கற்றுக்கொள்ள முடியாதென்பதால் இதனை இளம்பருவத்திலிருந்தே வளர்க்க வேண்டியது நூலக உத்தியோகத்தர்களின் பணியாகின்றது.

இது குறித்து சிந்தித்த ஏறாவூர் நகர சபை பொது நூலகங்கள் ஒன்றிணைந்து அதன் ஆள்புல எல்லைக்குட்பட்ட இடைப்பிரிவு மாணவர்களை பத்திரிகை வாசிப்பில் ஈடுபடச்செய்து அவர்களின் பொது அறிவினை விருத்தி செய்வதை பிரதான நோக்கமாகக் கொண்டு மாதந்தோறும் பத்திரிகைப் புதிர்ப்போட்டியொன்றை நடாத்தும் இச்செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் பாடசாலைப் பருவத்திலிருந்தே மாணவர்களின் பொது அறிவு விருத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

மாதாந்த பத்திரிகைப் புதிர்ப்போட்டியானது "அறிவுக் களஞ்சியம்" எனும் பெயரில் மேற்கொள்வதற்கு நூலக ஆலோசனைக் குழுவில் தீர்மானிக்கப்பட்டு, வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட குழுவினருடனான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக போட்டி விதிமுறைகள் திட்டமிடப்பட்டு, அவை சுற்று நிருபங் கள் மூலமாகப் பாடசாலைகளுக்குத் தெளிவூட்டப்பட்டன. ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஒன்பதாம் தரத்திற்கும் உயர்தரத்திற்கும் இடைப்பட்ட ஐந்து மாணவர்கள் கொண்ட ஒரு குழு போட்டியில் பங்கு பற்றுவதெனவும், போட்டியானது "League" சுற்று முறையில் நடாத்தப்படுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

*Corresponding author*: ரா.அச்சலா சுகந்தினி, ஏறாவூர் நகர சபை நூலகம், ஏறாவூர், மட்டக்களப்பு, இலங்கை. Email: asugandini@gmail.com

முதலாம் சுற்றுப் போட்டியில் பாடசாலைகள் ஒன்றுக்கொன்று மோதி அவற்றில் வெற்றி பெற்ற நான்கு பாடசாலைகள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. அரையிறுதிப் போட்டியில் தெரிவாகிய இரண்டு அணிகள் இறுதிப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற பாடசாலைக்கு "Genius School of the Month" விருதையும், ஒரு மாதத்திற்கான இலவச அரச பத்திரிகையொன்றையும், வெற்றி பெற்ற அணியினருக்கு நினைவுச் சின்னங்களையும், சான்றிதழ்களையும் வழங்குவதோடு, பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டனர். இந்நிகழ்விற்கான நிதி அனுசரணையானது நன்கொடையாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

இப்பத்திரிகைப் புதிர்ப்போட்டிக்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தும்போது அவர்களின் பொதுஅறிவுத் திறன் பரிசோதிக்கப்பட்டது. அவ்வேளையில், மிகக் குறைந்தளவு திறனைக் கொண்டிருந்த மாணவர்கள் முதலாவது போட்டியின்போது தம்மால் இயன்றளவு பதில்களை அளித்து போட்டிகளில் வெற்றிபெற முனைந்தனர். அவர்களுள் சிலர் எல்லாச் சுற்றுக்களிலும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு சிரமப்பட்டமை அவதானிக்கப்பட்டது. குறிப்பாக முதலாவது போட்டியில் அணியொன்றுக்குத் தலா 10 வினாக்கள் என்ற அடிப்படையில் மொத்தமாக வினாவப்பட்ட 140 வினாக்களில் 30% அதாவது 42 வினாக்களுக்கு மட்டுமே மாணவர்கள் சரியான விடையளித்திருந்தமை எம்மால் அவதானிக்கப்பட்டது.

இருப்பினும், அடுத்தடுத்த மாதங்களில் நடாத்தப்பட்ட போட்டிகளில் எம்மால் தயாரிக்கப்பட்ட வினாக்களில் 90%இற்கும் அதிகமானவற்றிற்கு மிகத் திறமையாக விடையளித்து அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர். இதன்மூலம் மாணவர்கள் பத்திரிகை வாசிப்பில் வேரூன்றியிருப்பதையும், சமகால நிகழ்வுகள் குறித்த விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதையும் புலப்படுத்துகின்றது. ஏறாவூர் நகர சபை நூலகங்களின் உசாத்துணைப் பிரிவு, இரவல் வழங்கல் பிரிவுகளை மட்டுமே பயன்படுத்தி வந்த மாணவர்கள் இப்பத்திரிகைப் புதிர்ப்போட்டியானது ஆரம்பிக் கப்பட்டதன் பின்னர் பத்திரிகைப் பிரிவையும் பயன்படுத்தத் தொடங்கினர். இம்மாற்றமானது குறித்த நூலகங்களில் மாணவ அங்கத்தவர்களை அதிகரிக்கச் செயவதோடு அவர்களுக்கென பிரத்தியேகமாக சிறுவர் வாசகர் வட்டமொன்றை உருவாக்கி தமது பிரச்சனைகளையும், தேவைகளை யும் அவர்களே வெளிக்கொணர்வதற்கும் வழிகோலியது.

இதே பாணியில் தமது வாசிப்பினை மேற்கொள்ளும்போது அவர்கள் தமது பொதுஅறிவை விருத்தி செய்துகொள்வதோடு, இலங்கையில் நடாத்தப்படும் சகல போட்டிப் பரீட்சைகளையும் எவ்வித தயக்கமுமின்றி எதிர்கொள்வதற்கான தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், மாதந்தோறும் இப்போட்டிகளில் வினாவப்படும் வினாக்கள் மற்றும் அவற்றுக்கான சரியான பதில்கள் என்பன உசாத்துணைக் குறிப்புக்களோடு நூலுருவாக்கம் செய்யப்பட்டு, ஏறாவூர் நகர சபையின் அனைத்துப் பொது நூலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்போட்டிகளில் பங்குபற்றாத மாணவர்களும் இதனை வாசித்துப் பயனடைந்து கொள்வார்கள். மாணவர்கள் உலக அறிவினைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் சமகால நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து செயற்படுவதற்கு இதுபோன்ற போட்டிகள் அவசியமானதென உணரப்படுகிறது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

இப்போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களிடமிருந்து Google Forms மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பீடுகளின் அடிப்படையில் பொது நூலகங்களால் முன்னெடுக்கப்படும் இத்தகைய போட்டிகளானவை வகுப்பறைக்கு அப்பால் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கும்,

அவர்களின் கற்றலை மதிப்பிடுவதற்கும், புதிய கருத்துக்களை வழங்குவதற்கும், அறிவாற்றல் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கும், எதிர்கால கல்விச் சவால்களுக்கு அவர்களைத் தயார் செய்வதற்கும் இன்றியமையாத கருவிகளாக உள்ளன என்பது புலப்படுகின்றது.

அத்துடன், இவை மாணவர்களின் அறிவு மற்றும் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்தல், பகுப்பாய்வு மற்றும் விமர்சன சிந்தனையை உருவாக்குதல், ஆராய்ச்சி மற்றும் ஆர்வத்தை ஊக்குவித்தல், சமூக மற்றும் கலாசாரப் புரிதலை ஏற்படுத்தல், குழுப்பணி மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்தல், மாணவர்களின் கல்விப்போக்கை வேடிக்கையாகவும் ஈடுபாடுடையதாகவும் ஆக்குதல் போன்ற பணிகளைச் செய்வதில் பங்களிப்புச் செலுத்துவதாகவும் இக்கருத்துக் கணிப்பீடுகள் பறைசாற்றுகின்றன.

இத்தகைய போட்டிகள் பாடசாலை மாணவர்களோடு மட்டுப்படுத்தப்படாது, சமூகத்திற்கும் கொண்டு செல்லப்பட்டு வேலையற்ற இளைஞர்களைப் போட்டிப்பரீட்சைகளுக்கு ஊக்குவிக்கும் வகையில் நடாத்தப்படவேண்டுமெனப் பரிந்துரை செய்யப்படுகின்றது. அத்துடன், இணையவழி பத்திரிகை வாசிப்பை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், நூலுருவாக்கம் பெற்ற கடந்தகால பத்திரிகைப் புதிர்ப்போட்டிகளில் கேட்கப்பட்ட வினா – விடைகள் மின்னூல் வடிவில் வெளியீடு செய்யப்படுவதற்கும் பரிந்துரை செய்யப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** பத்திரிகை வாசிப்பு, பாடசாலை மாணவர்கள், புதிர்ப்போட்டிகள், பொதுஅறிவு, அறிவுக்களஞ்சியம்

# The Establishment of 'Musicology Corner' at the Sir Ponnampalam Ramanathan Faculty of Performing and Visual Arts Library

P.Poologanathan*

## Introduction

The Sir Ponnampalam Ramanathan Faculty of Performing and Visual Arts (SPRFPVA) Library is one of the seven branch libraries under the Library system of the University of Jaffna, serving over 700 students and 70 staff members. Despite having a collection of 1,500 non-book materials (such as CDs and DVDs) related to musicology, the library's existing infrastructure and technological facilities were insufficient, rendering these valuable resources largely inaccessible. Furthermore, the library lacked an appropriate space where students and faculty could effectively engage with resources, particularly for learning from live performance recordings and accessing online storage. These gaps in accessibility necessitated the establishment of 'Musicology Corner' at the SPRFPVA Library project, which aimed to enhance the infrastructure, thereby enabling the effective use of these resources. The project was funded with LKR 16.53 million from the Kandiah Karthigasen Tamil Music Trust Fund, with the primary objective of transforming the library into a more conducive environment for accessing and utilizing non-book materials.

## Project plan and Methods

The project was meticulously planned and executed during the period from September 2021 to March 2023under three major activities, each targeting different aspects of the library's infrastructure and resource accessibility.

**Developing a Conducive Reading Environment :** This activity focused on refurbishing the library to create a more welcoming and conducive space for students and staff. The refurbishment involved aluminium partitioning, electrical installations, painting of bookshelves, installing curtains on windows, fitting iron grills, setting up a CCTV system, and air conditioning. These improvements were essential for enhancing the overall ambiance and security of the library, making it a more attractive space for users.

**Procurement of Equipment and Furniture:** To enhance the functionality of the library, a range of equipment and furniture ware procured. This included desktop computers, UPS systems, headphones, printers, laptops, computer tables, chairs, reading tables, glass-fronted almirahs, armchairs, CD racks, counter table, and executive tables and chairs. These additions were crucial in modernizing the library, enabling users to access digital resources and comfortably engage in their studies.

---

* *Corresponding author:* P.Poologanathan, Library, University of Jaffna, Sri Lanka.
Email: poologan@univ.jfn.ac.lk

**Procurement of Reading Materials related to Performing Arts:** As part of the effort to expand the library's collection, 300 printed materials related to music, dance, and art & design were acquired. Additionally, the existing collection of 1,500 non-book materials were organized and accessioned for usage. This activity significantly enriched the library's resources, ensuring that users had access to a comprehensive range of materials related to performing and visual arts. Each activity was carefully aligned with the overall goal of improving the library's accessibility and resourcefulness.

**Findings and Discussion**

The project successfully achieved its objectives, transforming the SPRFPVA Library into a modernized library, which facility equipped with the necessary infrastructure and resources to support musicology studies. Approximately LKR 5.8 million was invested in the refurbishment, creating a conducive reading environment that attracted more users. The improved atmosphere and security have made the library a more desirable place for students and staff. The procurement of equipment and furniture, costing nearly LKR 5 million, was a major step in enhancing the library's functionality. The new technological resources, especially the desktop computers and UPS systems, have been pivotal in providing users with access to digital materials, broadening the scope of study and research opportunities. The acquisition of 300 printed materials and the organization of non-book materials, supported by a budget of LKR 3.3 million, significantly expanded the library's collection and usage. Since the project completion in March 2023, the Library has witnessed a significant increase in user visits, from 6000 in 2022 to nearly 9000 in 2023, approximately. Additionally, there has been a notable increase in borrowing activities.

**Conclusion and Suggestions**

The establishment of the 'Musicology Corner' at the SPRFPVA Library marks a significant milestone in enhancing and accessing the academic resources available to students and staff. The project has successfully addressed the infrastructural deficiencies that previously hindered access to valuable non-book materials, making the library a hub for musicology studies. Since its completion in March 2023, the 'Musicology Corner' has become an integral part of the library, with extensive usage by the academic community, thereby reinforcing its importance in the educational landscape of the University of Jaffna.

To further enhance the utility of the 'Musicology Corner', several improvements could be considered: Regarding the increased usage of the facility, expanding the space and acquiring additional equipment would better accommodate more users. Additionally, upgrading the current internet facilities is essential, including connecting the 'Musicology Corner' with the Lanka Education and Research Network (LEARN). A separate network installation dedicated to the library is recommended to ensure a successful and stable connection with LEARN. These enhancements would ensure that the library continues to meet the evolving needs of its users.

**Keywords:** Musicology, Visual arts, SPRFPVA Library, Infrastructure

# வாசகர்களின் கலை இலக்கியத் திறனை மேம்படுத்தல் : "கவிமுளரி" மின்னிதழ் வெளியீடு

ம.பிரகாஷ்*

## அறிமுகம்

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்குகின்ற பேத்தாழை பொது நூலகமானது 2011 மார்கழி 10ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நூலகத்தினது விபுலானந்தர் வாசகர்வட்டத்தின் பெரும் ஒத்துழைப்புடன் பல வாசிப்பு சார்ந்த செயற்றிட்டங்களைத் திறம்பட நடாத்தி வருகின்றது. அவற்றுள் குறிப்பிடத்தக்கதாக "பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்" எனும் அமைப்பினை உருவாக்கி, கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினூடாக மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்து அதனூடாக இலக்கியம் மற்றும் கலைகள் சார்ந்த பணிகளை செய்து வருகின்றது. குறிப்பாக மாணவர்களுக்கான விவாத அரங்குகள், கவியரங்குகள், நூல் வெளியீடுகள் போன்றவற்றை நடாத்தி வாசகர்களின் கலை இலக்கிய ஆர்வத்தினை மேம்படுத்தி வருவதோடு, ஒவ்வொரு ஆண்டும் கலை, இலக்கியத் துறையில் சிறப்பாக செயற்பட்டுவரும் ஒருவரை தெரிவுசெய்து, பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் சிறப்பு விருதான "விபுலம்" விருதினை வழங்கி வருகின்றது. இலக்கியப் படைப்பாளிகளை ஊக்குவிப்பதே இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டத்துடன் இணைந்ததாக முகநூல் வாயிலாக தமது கவிதைபுனையும் திறனை வெளிக்காட்டிவரும் கவிஞர்களுக்கு ஒரு களத்தினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கோடு பேத்தாழை பொது நூலகத்தின் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தினால் உருவாக்கப்பட்டதே "கவிமுளரி" எனும் மின்னிதழாகும். பேத்தாழை பொது நூலகத்தின் வாசகர்கள் மாத்திரமல்லாது முகப்புத்தகங்களில் கவிதை புனையும் ஏனைய கவிஞர்களின் ஆக்கங்களையும் சேகரித்து ஒவ்வொரு மாதமும் ஒரு மின்னிதழாக வடிவமைத்து கலை இலக்கிய மன்றத்தின் முகப்புத்தக பக்கத்திலும், அதனது உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பகிரப்படுகிறது.

## செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்

பேத்தாழை பொது நூலகத்துடனும், அதனது விபுலானந்தர் வாசகர்வட்டத்துடனும் இணைந்ததாக உருவாக்கப்பட்ட விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் நிருவாக உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களை இணைத்து ஒரு கலந்துரையாடல் ஒழுங்கமைக்கப்பட்டது. அதனடிப்படையில் பெறப்பட்ட தீர்மானத்திற்கமைய, குறித்த திட்டத்திற்கான அழைப்பினை முகநூல் வழியாகவும், மன்றத்தின் இணையத்தளம் மற்றும் வட்ஸப் குழுமம் என்பவற்றினூடாகவும் பகிரப்பட்டதோடு, இக் 'கவிமுளரி' மின்னிதழுக்கான கவிதைகளை இதற்கெனவே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட editor2023kavimulari@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக, அல்லது 0770196205 என்ற வாட்ஸப் இலக்கத்தினூடாக அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டது.

தமது ஆக்கங்களை அனுப்பி வைப்பதற்காக குறிப்பிட்ட ஒரு காலஇடைவெளியினை வழங்கியதோடு, கவிஞர்களினால் அனுப்பிவைக்கப்படும் கவிதைகளை பரிசீலித்து அழகிய வர்ணப் படங்களையும் உள்ளடக்கியதான 'கவிமுளரி' மின் இதழினை வடிவமைத்து, 25.10.2023 அன்று முதலாவது

**Corresponding Author:* ம.பிரகாஷ், பேத்தாழை பொது நூலகம், கோறளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை, மட்டக்களப்பு, இலங்கை. Email: mpragash5@yahoo.com

மின்னிதழ் வெளியிடப்பட்டது. அன்றிலிருந்து மாதத்தின் ஒவ்வொரு 25ஆம் திகதியும் 'கவிமுளரி' மின்னிதழ் தவறாது வெளிவருகின்றது. இச்செயற்றிட்டமானது பலரின் வரவேற்பினைப் பெற்றிருக்கின்றது. இம்மின்னிதழில் உள்நாட்டுக் கவிஞர்களின் கவிதைகள் மாத்திரமல்லாமல் புலம் பெயர் நாட்டின் கவிஞர்களின் கவிதைகளும் இடம்பெற்று வருகின்றமையை இந்நூலகத்தினுடைய விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் வெற்றியாக கருதுகின்றது.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

பேத்தாழை பொது நூலக விபுலானந்தர் வாசகர்வட்டத்தின் மேலதிக கலை இலக்கிய செயற்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் செயற்பாடுகள் அனைத்துமே பிரதேச மக்களிடையே மருவி வரும் கலை, இலக்கிய அம்சங்களை பேணிப்பாதுகாத்து அடுத்த சந்ததி யினருக்குக் கையளிப்பதை நோக்காகக் கொண்டது. அந்த வகையில் இந்நூலகத்தின் கலை இலக்கிய மன்றம் ஆரம்பித்து தடையறாது வெளியிட்டு வருகின்ற 'கவிமுளரி' மின்னிதழும், தத்தமது ஆக்கங்களை புத்தக வடிவில் வெளியிட முடியாமல் உள்ள கவிதை படைப்பதில் ஆர்வங்கொண்டவர்களின் ஆக்கங்களை ஒன்று திரட்டி வெளிவருகின்றது. 25.06.2024 வரை ஒன்பது கவிமுளரி மின்னிதழ்கள் மன்றத்தின் முகப்புத்தக பக்கத்தின் ஊடாகவும், https://kavimulari.blogspot.com என்கின்ற இணை யத்தளத்தினூடாகவும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள், பிரசித்திபெற்ற புலம்பெயர் கவிஞர்களின் கவிதைகள் மாத்திரமல்லாது, நாட்டின் பல பாகங்களிலுமுள்ள கவிஞர்களின் கவிதை களும் இடம்பெற்று வருகின்றன. அது மாத்திரமின்றி, பல வாசகர்கள் இக்கவிமுளரியின் செயற்பாட்டி னால் ஈர்க்கப்பட்டு புதிய கவிஞர்களாகவும் உருவாகி வருகின்றனர். மாதம் ஒருமுறை வெளிவரும் கவிமுளரி மின்னிதழினை 12 மாதங்களுக்கு ஒருமுறை தொகுத்து ஒரு கவிதைத் தொகுப்பாக அச்சிட்டு வெளியிடும் தீர்மானத்தினையும் இந்நூலகத்தின் கலை இலக்கிய மன்றம் மேற்கொண்டிருக்கிறது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தினூடாக வெளியிடப்பட்டுவரும் இக் 'கவிமுளரி' மின்னிதழின் மூலமாக உலகளாவிய ரீதியில் உள்ள பல கவிஞர்களின் கவிதைகள் மாதம் ஒருமுறை வெளியிடப்படுவதன் காரணமாக கவிதைப் பிரியர்களுக்கு ஒரு புதுமையான வாசிப்பு அனுபவத்தினை இது ஏற்படுத்தியுள்ளது. அது மாத்திரமன்றி, பேத்தாழை நூலகத்தின் வாசகர்களும் கவிதைகளைப் படைப்பதில் ஆர்வம் கொண்டிருப்பதனையும் காணமுடிகிறது. ஒவ்வொரு மாதமும் வெளிவரும் கவிமுளரியானது அம்மாதத்தின் விசேட அம்சங்களை தொனிப்பொருளாகக்கொண்ட கவிதைகளை உள்ளடக்கியதாக வெளிவருகின்றமை ஒரு சிறப்பம்சமாகும்.

பேத்தாழை பொது நூலகமானது தமக்கென பணிக்கப்பட்டுள்ள நூலகக் கடமைகளையும் தாண்டி சமூக நல ஈடுபாட்டுடன் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டுவருகின்றது. அதற்கும் மேலாக நூலகத்தினால் உருவாக்கப்பட்டுள்ள பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் செயற்பாடுகளும் உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் சீராக இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் கவிதையில் ஈடுபாடு கொண்டோருக்கு 'கவிமுளரி' மின்னிதழின் மூலமாக வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதனைப் போன்று, வாசகர் மத்தியில் காணப்படும் பற்பல திறன்களை இனங்கண்டு பொது நூலகத்தினாலான ஒத்துழைப்பினை வழங்குவதன் மூலமாக சிறந்த ஆற்றல்கொண்ட பிரஜைகளை உருவாக்கலாம் எனும் நம்பிக்கையை இந்நூலகம் கொண்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** வாசகர் வட்டம், கலை இலக்கிய மன்றம், மின்னிதழ், கவிதைத் தொகுப்பு

# வாசிப்பை ஊக்குவிப்பதில் சுன்னாகம் பொது நூலக சிறுவர் பகுதியின் செயற்பாடுகள்

சு.ஜெயலக்சுமி*

**அறிமுகம்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கீழ் சுன்னாகம் பொது நூலகமானது இயங்கி வருகின்றது. இந்நூலகமானது தரம் II நிலையிலுள்ளது. இன்றைய உலகம் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியினால் நவீனமயமாக்கலுக்கு உட்பட்ட சமூகங்களைக் கொண்டுள்ளது. இச் சமூகங்களில் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து, வேறு பல புதிய விடயங்களில் மக்கள் தமது நேரத்தை செலவிடுகின்றனர். குறிப்பாக சிறுவர்கள் இணையத்தளங்களில் மூழ்கி இணைய விளையாட்டுக்களில் தமது நேரத்தினை செலவிடுகின்றனர். எனவே, சமூகத்தினைச் சீர்ப்படுத்த சிறுவயதிலிருந்தே வாசிப்புப்பழக்கத்தினை ஊக்குவிக்க வேண்டும். அத்துடன், தற்போதைய கல்வி முறைமைகளினாலும் வாசிப்பு செயற்பாடுகள் குறைவடைந்து செல்கின்றன. அதனை நிவர்த்தி செய்து வாசிப்பு பழக்கத்தினை அதிகரித்தல் அவசியமாகின்றது. ஆரம்பத்தில் இந்நூலகத்தின் சிறுவர் பகுதியில் 463 அங்கத்தவர்கள் இருந்துள்ளனர். அடிப்படை வளங்களுடன் செயற்பட்ட சிறுவர் பகுதியினை கவர்ச்சிகரமாக மாற்றி சிறார்களை வாசிப்பின் மீது நாட்டம்கொள்ள செய்வதற்கும் புதிய திட்டம் உருவாக்கப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமானது நவீன கற்றல் முறைகளுக்கேற்ப தரமான சிறுவர் நூலகத்தினை அமைத்து இப்பிரதேச சிறார்களின் வாசிப்பு பழக்கத்தினை மேம்படுத்துதல் ஆகும்.

**செயற்றிட்ட அமுலாக்க படிமுறைகள்**

சுன்னாகம் பொதுநூலகச் சிறுவர் பகுதி ஆரம்பத்தில் அடிப்படை வளங்களுடன் மாத்திரமே காணப்பட்டது. அதாவது சிறுவர்களை கவரக்கூடிய நூல்கள் குறைவாகவும், தளபாடங்கள் சாதாரணமாகவும் காணப்பட்டன. 2018ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் இன்று பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. சிறார்களைக் கவரும்வண்ணம் சுவர்கள், தளபாடங்கள் வர்ணம் பூசப்பட்டு புதுப்பொலிவுடன் உருவாக்கப்பட்டது. அத்துடன் சுவரோவியங்களும் இப்பிரதேச ஓவியராலேயே வரையப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மூலம் சிறுவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளபபட்டு வருகின்றன.

**பொம்மை நூலகத் திட்டம்**

நூல்கள், சஞ்சிகைகளுடன் மட்டுமன்றி, பொம்மைகள், விளையாட்டு உபகரணங்கள் (Puzzle, Word Building Board, Alphabet Blocks) என்பனவும் லண்டனில் உள்ள நூலகவியலாளர் என்.செல்வராஜா மற்றும் கனடாவில் வசிக்கும் இ.சித்திரஞ்சனி போன்றோரிடமிருந்து அன் பளிப்பாகப் பெறப்பட்டு, 'பொம்மை நூலகம்' அமைக்கப்பட்டது. அதன் மூலம் சிறுகுழந்தைகளும் நூலகத்தினை பயன்படுத்துவதற்கு ஆர்வம் கொண்டனர்.

******Corresponding Author:* சு.ஜெயலக்சுமி, சுன்னாகம் பொது நூலகம், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், இலங்கை. Email: sjeya403@gmail.com

**சிறுவர் நூல்களின் நவீன வடிவங்கள் அறிமுகம்**

சிறுவர்களைக் கவரக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட, பல்வேறு வடிவங்களையுடைய நூல் களின் சேகரிப்பு, Books Abroad நிறுவனம் (லண்டன்), மற்றும் திரு.பத்மநாபஐயர் (லண்டன்) அவர்களின் உதவியுடன் உருவாக்கப்பட்டது.

**சித்திர வகுப்பு**

2020ஆம் ஆண்டிலிருந்து சிறுவர்களுக்கான சித்திரவகுப்பு இந்நூலகத்தில் நடைபெற்று வருகின்றது. அதன் மூலம் சிறுவர்கள் ஆசிரியர் வரும்வரை தமது பொழுதினை சிறுவர் பகுதியில் நூல்களுடன் செலவிடுகின்றனர். அதன் மூலம் நூல்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று வாசிக்கத் தூண்டப்பட்டு அங்கத்தவர்களாகவும் இணைந்துள்ளனர். இவ்வாறு இணைப்பாட விதான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் நூலகத்திற்கான சிறுவர்களின் வருகை அதிகரித்துள்ளது.

**சிறுவர் வாசிப்பு வட்டம்**

சிறு வயதிலேயே சிறுவர்களிடம் வாசிப்பை அறிமுகப்படுத்தி மேம்படுத்தும் நோக்கில் 2021ஆம் ஆண்டு 'சிறுவர் வாசிப்பு வட்டம்' உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் 22 சிறார்கள் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் ஏனைய சிறார்களை வழிநடாத்துவர். அதன் மூலம் சிறுவர்களின் ஆளுமைகளை வெளிக்கொணரவும் வாசிப்புச் செயற்பாட்டை விரிவாக்கவும், தலைமைத்துவப்பண்பை உருவாக்கவும் முடியும் இச் சிறுவர் வாசிப்பு வட்டத்திற்கு நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களே நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தவும் நடாத்தவும் சிறுவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 'முத்திரை சேகரித்தல்' எனும் அருகிவரும் பொழுதுபோக்கினை அவர்களிடையே அறிமுகப்படுத்தி, அவர்களையும் சேகரிக்கப் பழக்கி, மற்றும் தம்மிடம் உள்ளவற்றை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் மனப்பாங்கும் ஏற்படுத்தப்பட்டது. அதனூடாகப் பகுப்பாக்கச் செயற்பாடு தொடர்பில் முத்திரைகளை மலர்கள், பிராணிகள், தலைவர்கள் எனத் தரப்படுத்தி ஒழுங்குபடுத்தும் திறன்கள் வளர்ச்சியடைய வாய்ப்பு வழங்கப்பட்டது. சிறுவர் வாசிப்புவட்ட உறுப்பினர்களின் சொந்த ஆக்கங்களை தாங்கி "முகிழ்" எனும் சஞ்சிகை 2022ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு சிறுவர் புத்தக தினத்திலும் (ஏப்ரல் 02) வெளிவருகின்றது. இதன்மூலம் எதிர்கால எழுத்தாளர்கள் உருவாக்கப்படுகின்றார் கள். இச்சஞ்சிகையானது நூலக வளங்களைப் பயன்படுத்தியே அச்சிடப்பட்டு வருகின்றது.

**முன்பள்ளி இணைப்பு**

நூலகத்திற்கு அண்மையிலுள்ள முன்பள்ளி மாணவர்களை மாதத்திற்கு ஒரு தடவை நூலகத்திற்கு அழைத்து அவர்களின் ஒருநாள் கற்றல் நடவடிக்கையினை நூலக சிறுவர் பகுதியில் மேற்கொள்ள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**ஆரம்பப் பாடசாலைகள், முன்பள்ளிகள் தோறும் வகுப்பறை நூலகம்**

வலிகாமம் தெற்கு பிரதேச ஆரம்பப் பாடசாலைகள், முன்பள்ளிகள் தோறும் வகுப்பறை நூலகத்தினை அமைக்க, நூலகத்திற்கு அன்பளிப்பாக கிடைத்த மேலதிக சிறுவர் நூல்களை வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

**சிறுவருக்கான கதைநேரம், போட்டிகள் நடாத்துதல்**

வாசிப்புப் போட்டிகள், நடமாடும் சேவைகள், கதைநேரம் என்பனவும் நடாத்தப்படுகின்றன. சிறார்களுக்கான கதைகள், பாடல்கள், என்பன இறுவட்டுக்கள் மூலம் காட்சிப்படுத்தப் படுகின்றன. இதன் மூலம் சிறார்களின் வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர் நூலகம் திறம்பட நடாத்தப்படுகின்றது. அத்தோடு சிறார்களுக்கான ஆரம்பமட்ட கணினிப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றது.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

இச்செயற்றிட்டத்திற்கமைவாக சிறுவா் வாசிப்புவட்ட செயற்பாடானது தொடர்ந்து நான்கு வருடங்களாக இடம்பெற்று வருகின்றது. ஒவ்வொரு வருடமும் நிர்வாகம் மாற்றப்பட்டு புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. 'முகிழ்' சஞ்சிகையின் மூன்றாவது இதழ் 2024இல் வெளிவந்துள்ளது. சித்திர வகுப்பு தொடர்ந்து ஐந்து வருடங்களாக நடைபெறுகின்றது. இவ்வருடமும் நாற்பத்தொரு சிறார்கள் இணைந்து கொண்டுள்ளனர். முன்பள்ளி மாணவர்களும் தொடர்ந்து நூலகத்தினை பயன்படுத்து கின்றனர். பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் போன்றவற்றிற்கு சென்று நூலகம் பற்றிய விழிப்புணா்வு செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதனால் ஆரம்பத்தில் காணப்பட்ட சிறுவர் வாசகா் தொகை தற்போது 685ஆக அதிகரித்துள்ளது

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

இன்றைய காலகட்டத்தின் தேவை கருதி அருகிவருகின்ற சிறார்களின் வாசிப்பு பழக்கத்தினை இவ்வாறான பல்வேறு செயற்திட்டங்களினூடாக இந்நூலகம் மேம்படுத்தியுள்ளது. கவர்ச்சிகரமான தரமான சிறுவர் நூலகங்கள் சிறுவர்களிடையே வாசிப்பை மேம்படுத்துவதற்கு சிறந்த ஒரு வழியாக அமையும்.

மேற்குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் மூலம் சிறுவர்களிடையே வாசிப்பு ஆர்வம் அதிகரித்துள்ளது. அத்துடன், நூலகப் பாவனையும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நடமாடும் நூலக சேவைக்கான வாகனத்தைப் பெற்றுக்கொள்ளுமிடத்து அயல் பிரதேசங்களுக்கும் இந்நூலக சேவைகளை விஸ்தரித்துக்கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** சிறுவர் நூலகம், பொம்மை நூலகம், வாசிப்புப்பழக்கம்

# யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் இந்திய நூற்சேகரிப்புச் சிறப்புப் பிரிவுச் செயற்றிட்டம்

வி.பிரபாகர்*

**அறிமுகம்**

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் இந்திய நூல்களைச் சேகரித்து வைப்பதற்கு தனியான பிரிவொன்று (Indian corner) 11.12.2015அன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரிவின் முக்கிய நோக்கம், பல்கலைக்கழக மாணவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதாகும். குறிப்பாகக் கலை, இலக்கியம், சமயம், வரலாறு சார்ந்த துறைகளில் மாணவர்கள் எதிர்நோக்கிய நூல் பற்றாக்குறைக்கு தீர்வுகாண இப்பிரிவு உருவாக்கப்பட்டது. மாணவர்கள் தங்கள் ஆய்வுக்கட்டுரைகளுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள பல நூலகங்களுக்கு செல்ல வேண்டியிருந்தது. இத் தேவையை பூர்த்திசெய்யும் முகமாக ஒரே இடத்தில் இந்தியா தொடர்பான அனைத்து வெளியீடுகளையும் பார்வையிடும் வசதியை வழங்குவது இப்பிரிவின் முக்கிய நோக்கமாக இருந்தது. இந்நூற்சேகரிப்புப்பிரிவு தென்னாசியாவின் பெருமை மிகு அடையாளமாகவும், இந்தியத் தமிழரின் புலமைச் சொத்துக்களின் சேமிப்பு இடமாகவும் விளங்குகிறது. மேலும், இது மாணவர்களின் அறிவுத்தாகத்தைத் தணிக்கும் வரப்பிரசாதமாகவும், ஆய்வாளர்களின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தும் களமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

**செயற்றிட்ட அமுலாக்க படிமுறைகள்**

யாழ்ப்பாணப் பொதுசன நூலகமும் இலங்கைக்கான இந்தியத் தூதரகமும் இணைந்து இந்திய நூற்சேகரிப்புச் சிறப்புப் பிரிவை (Indian corner) உருவாக்கத் திட்டமிட்டன. இதன் முதற்கட்டமாக, இந்தியத் தூதரகத்தால் 15,000 நூல்கள், நூலகத் தளபாடங்கள் என்பன வழங்கியிருந்தமை இத் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தது. இப்பிரிவிற்கான தனி இடம் ஒதுக்கப்பட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வாசிப்பு மற்றும் ஆய்வுக்கான சூழல் உருவாக்கப்பட்டது. இந்தியத் தூதரகத்திடமிருந்து பெறப்பட்ட நூல்கள் வகைப்படுத்தப்பட்டு, பொருள் அடிப்படையில் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, முறையாக இறாக்கைகளில் ஒழுங்கமைத்து வைக்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பின் கீழ், நூல்களின் விபரங்கள் கணினியில் பதிவேற்றப்பட்டு, தேடல் வசதி உருவாக்கப்பட்டது. சேவைகள் விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக, இரவல் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மற்றும் பிரதியெடுக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டது. நூலக ஊழியர்களுக்கு புதிய முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு பிரிவின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. மேலும், வாசகர்களின் கருத்துக்களைப் பெற்று சேவைகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டன, மேலும், புதிய நூல்கள் இப்பிரிவில் சேர்க்கப்பட்டன. இத்தகைய விரிவான செயற்பாடுகள் மூலம், இந்திய நூற்சேகரிப்புப் பிரிவு திறம்பட செயற்படுத்தப்பட்டு, மாணவர்கள் மற்றும் பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் உருவாக்கப்பட்டது.

**Corresponding Author:* வி.பிரபாகர், நூலகம், சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி, இலங்கை. Email: vilvaprabha@gmail.com

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

இந்திய நூற்சேகரிப்புப் பிரிவின் உருவாக்கம் யாழ்ப்பாணத்தின் கல்வி மற்றும் கலாசார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை அளித்துள்ளது. பல்வேறு துறைகளுக்கான இந்திய நூல்கள் ஒரே கூரையின் கீழ் கிடைப்பது, மாணவர்களின் நேரம் மற்றும் செலவு என்பவற்றை குறிப்பிடத்தக்க அளவில் சேமிக்க உதவுகிறது. இந்த புதிய வசதியின் காரணமாக, நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாகப் பல்கலைக்கழக மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. இது உயர்கல்வி மாணவர்களுக்கு இந்தியன் கோணர் பிரிவு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதைக் காட்டுகிறது. இப் பிரிவு கல்வி சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், கலாசார பரிமாற்றத்திற்கும் உதவுகிறது. இந்திய கலாசாரம் மற்றும் அறிவியல் பற்றிய புரிதல் எம்மவர் மத்தியில் மேம்பட்டுள்ளது. அதே நேரத்தில், இந்திய நாவல்கள் மூலம் பொழுதுபோக்கு வாசிப்பும் ஊக்குவிக்கப்படுகிறது, இது வாசிப்பு பழக்கத்தை மேலும் வளர்க்க உதவுகிறது.

இத்தகைய அனைத்து அடைவுகளையும் ஒன்றிணைத்துப் பார்க்கும்போது, இந்தியன் கோணர் பிரிவு வானது யாழ்ப்பாணத்தின் கல்வி, ஆராய்ச்சி, கலாசார பரிமாற்றம் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைத்து, சமூகத்திற்கு பெரும் பயனை அளிக்கிறது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் இந்திய நூற்சேகரிப்புச் சிறப்புப்பிரிவு, பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமல்லாது பாடசாலை மாணவர்களது கல்வித் தேவைகளையும் நிறைவேற்றும் முக்கிய மையமாக உருவெடுத்துள்ளது. 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பிரிவு, மாணவர்களின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தி, அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியத் தூதரகத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இப்பிரிவு, தகவல் அணுகல், நேர மேலாண்மை, வாசகர் எண்ணிக்கை அதிகரிப்பு, கலாசார பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சித் தர உயர்வு ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. எதிர்காலத்தில், சேவை விரிவாக்கம், பன்முகத்தன்மை, தொழில்நுட்ப மேம்பாடு, ஆரோக்கிய மேம்பாடு மற்றும் சமூகத் தாக்கம் ஆகிய துறைகளில் மேலும் முன்னேற்றம் காண எதிர்பார்க்கப்படுகிறது.

நூல்களை எண்ணிம வடிவத்திற்கு மாற்றி ஒரு எண்ணிம நூலகத்தை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். இது வாசகர்களுக்கு எங்கிருந்தும் எப்போதும் நூல்களை பயன்படுத்த வாய்ப்பளிக்கும். இந்திய மொழிகளை கற்பிக்கும் வகுப்புகளை தொடங்குவதும், பல்வேறு இந்திய மொழிகளில் உள்ள நூல்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், மொழி மற்றும் கலாச்சார பரிமாற்றத்தை ஊக்குவிக்கும். இது இலங்கை மற்றும் இந்திய கலாசார இணைப்பை மேலும் வலுப்படுத்தும். கலை, இசை, நடனம் போன்ற துறைகளில் பயிற்சி வகுப்புகளை நடத்துவதும், இந்திய கலாசாரம் தொடர்பான நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதும், கலாசாரப் பரிமாற்றத்தை மேலும் ஆழப்படுத்தும். இது மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இந்திய கலைகளை நேரடியாக அனுபவிக்கவும் கற்றுக்கொள்ளவும் வாய்ப்பளிக்கும். பொது விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துவது அறிவுப் பரிமாற்றத்திற்கான ஒரு தளத்தை உருவாக்கும். இது பல்வேறு துறைகளில் இந்தியாவின் முன்னேற்றம் மற்றும் சாதனைகளைப் பற்றி அறிந்துகொள்ள உதவும். ஒளி-ஒலி வளங்களை சேகரித்து, அவற்றை பயன்படுத்தும் வசதிகளை ஏற்படுத்துவது கற்றல் அனுபவத்தை மேலும் மேம்படுத்தும். இது குறிப்பாக மொழி கற்றல் மற்றும் கலாசார புரிதலுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

வாசகர்களின் கருத்துக்களை தொடர்ந்து பெற்று, சேவைகளை மேம்படுத்துவது அவசியமானது. இது இப்பிரிவை வாசகர்களின் மாற்றும் தேவைகளுக்கு ஏற்ப தொடர்ந்து புதுப்பிக்க உதவும். இந்த அனைத்துப் பரிந்துரைகளையும் செயற்படுத்துவதன் மூலம், இப்பிரிவு தனது சேவைகளை மேலும் விரிவுபடுத்தி, மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் அறிவு மேம்பாட்டிற்கு பெரிதும் உதவக்கூடியதாக அமையும். எதிர்காலத்தில், யாழ்ப்பாணத்தின் கல்வி மற்றும் கலாசார வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கை இப்பிரிவு வகிக்கும் எனலாம்.

**திறவுச்சொற்கள்:** யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், இந்திய நூற்சேகரிப்புச் சிறப்புப் பிரிவு, Indian corner

# Environmental Awareness on Bolgoda Ecosystem through Library Services

T.M.Seneviratne[1*], C.L.Jayawardena[2]

## Introduction

Environmentally literate individuals who deeply understand the complex human interactions with their surroundings could immensely facilitate environmental conservation and sustainable development. Libraries can serve as documented information providers for the above purpose by presenting them user-friendly and readily available approach. Similarly, traditional library interactions with its users could be expanded focusing on the environment and valuable ecosystems. This project presents an attempt to elevate the environmental awareness on Bolgoda ecosystem for engineering undergraduates at the University of Moratuwa utilizing the library induction sessions during three consecutive years.

Bolgoda wetlands consisting of two large freshwater lakes and an interconnected river system considered to be the largest of its kind in Sri Lanka, with its footprint on Colombo and Kalutara districts. It is a sensitive ecosystem mainly due to the spatial arrangement neighbouring industrial zones, garbage dumps and variety of human activities with respect to its biodiversity. Bolgoda has been listed as one of the "Threatened Lakes of the Year 2018" by the Global Nature Fund in addition to being "One of the natural wonders that one must see before you die". Despite protective, preventive, and rectification measures that are in place reinforced by policies, rules and regulations, the damage to this valuable ecosystem seems ongoing. Hence, developing neighbouring community awareness including the students at the University of Moratuwa seems a timely requirement. An attempt was made with this regard since February 2022 by initiating a pilot study focusing fresh engineering undergraduates with the objectives of to develop interactive library induction sessions enabling the undergraduates to develop environmental awareness and the Bolgoda Ecosystem; To evaluate the impact on library induction sessions focused on environmental awareness; To identify creative avenues that a library could facilitate environmental awareness with reference to the Bolgoda ecosystem; To encourage and provide opportunities for undergraduate to engage with environmental awareness and protection focusing the neighbouring Bolgoda lake; Enlighten undergraduates on United Nation's Sustainable Development Goals (UNSDG's) and community responsibilities towards sustainable consumption of natural resources.

[1*]*Corresponding author:* T.M.Seneviratne, Library, University of Moratuwa, Katubedda, Moratuwa, Sri Lanka. Email: thusharims@uom.lk

[2] Department of Earth Resources Engineering, University of Moratuwa, Katubedda, Moratuwa, Sri Lanka.

**Project plan and Methods**

The information retrieval regarding the Bolgoda ecosystem was conducted for undergraduates since 2022 (three consecutive years to date for the student intakes of 2021, 2022, and 2023) to the Faculty of Engineering, University of Moratuwa, during their library induction sessions. A two-fold approach was followed in this study to achieve the above objectives aligned to increase environmental awareness through effective sharing of information and library resources. A selective bibliography was published initially on the Bolgoda ecosystem compiling and categorizing available literature on the Bolgoda ecosystem. Both published and unpublished sources via web-based information retrieval systems in the library were utilized for this purpose. Secondly, undergraduates were advised to conduct a literature search on Bolgoda ecosystem during their library induction sessions adhering to a provided guidelines which included specific topics. This information retrieval was followed by an interactive discussion and feedback sessions in addition to students undergoing pre and post questionnaire surveys.

**Findings and Discussion**

The activity reveals positive student engagement and increased awareness based on student feedback. In response to a Likert Scale survey, 792 undergraduates from the 2021 intake indicated that the activity significantly improved their awareness and attitude towards the Bolgoda ecosystem. Awareness categories of "Poor" reduced from 36.05% to 0%, "Fair" decreased from 14.01% to 5.44%, "Satisfactory" increased from 13.61% to 24.49%, while "Very Good" and "Excellent" awareness levels rose from 4.08% to 45.58% and from 12.24% to 24.49%, respectively.

When Dervin's sense-making framework, which involves seeking, encountering, and using information to address an information need with respect to ambiguous and complex real-world situations, was applied to 496 undergraduates from the 2022 intake, it was revealed that 98.3% of undergraduates selected a topic relevant to the complex situations in the Bolgoda ecosystem and were able to retrieve 98.3% relevant documents and 89.5% of appropriate document categories.

Additionally, the results of a Wilcoxon signed-rank test carried out for pre-test and post-test assessments on facts about the geography, ecology, biodiversity, and socio-economics of the Bolgoda ecosystem for 906 undergraduates from the 2023 intake showed a significant improvement in knowledge after the library induction session. Undergraduates have commented that the library resources (selected bibliography and feature articles) facilitated the information retrieval process on all three occasions.

**Conclusion and Suggestions**

This project transformed a traditional library induction session to an interactive and informative episode for students. The attempt has positively influenced in developing of environmental stewardship among patrons. This confirms that the libraries could advocate

sustainable practices by appropriately utilizing their resources and programs to empower communities in sensitive ecosystems such as Bolgoda. Furthermore, fresh undergraduates mostly new to the environment that consists of Bolgoda and with a higher probability to spend much of the time within or near by the university premises for at least four years of their academic activities could positively influence the environmental protection in the region by effectively sharing their knowledge with the community through their daily engagements.

Further suggestions can be made to enhance the environmental awareness on Bolgoda ecosystem: Establishment of a disciplinary digital repository as a specialized online platform for storing, preserving, linking and disseminating scholarly works while functioning as a centralized hub where researchers can access and share a wide range of digital content; Promote undergraduate research on Bolgoda utilizing the current body of knowledge and ensure the project outcomes to be accessible to the community for decision making and eliminate repetition of the work; Promote an inclusive strategic management approach based on scientific principles and rational decision-making with respect to SDG's, no.6 (clean water and sanitation), no.11 (sustainable cities and communities), no.13 (climate action), no.14 (life below water), and no.15 (life on land).

**Keywords:** Library induction, Bolgoda ecosystem, Environmental awareness, Bibliographies

## References

Global Nature Fund (2022). Threatened lakes. Asia: Bolgoda lake (Sri Lanka). https://www.globalnature.org/en/living-lakes/asia/bolgoda-lak

Jayawardena, C.& Seneviratne, T. (2022). The Bolgoda ecosystem: a laboratory in the neighbourhood. *Bolgoda Plains*, 2(2), 29–32. https://doi.org/10.31705/bprm.v2(2).2022.7

Jayawardena, C.& Seneviratne, T. (2023). Environmental awareness of the Bolgoda ecosystem: Approaches and actions. in proceedings of the Annual Session of Department of Wildlife Conservation (WILDLANKA International Symposium), (p. 19). Department of Wildlife Conservation, Sri Lanka.

Seneviratne, T.& Jayawardena, C. (2022). Simultaneous development of research skills and environmental awareness through library orientation: a case study. In U.P.Cabral (Ed.), Proceedings of Annual National Conference on Library & Information Science 2022, (p. 10). Sri Lanka Library Association. https://www.slla.lk/index.php/publications/proceedings.

Seneviratne, T.M. & Jayawardena, C.L. (2023). A sense-making approach for engineering undergraduates to retrieve environmental management information on Bolgoda ecosystem. In Proceedings of 2nd International Conference of National Library of Sri Lanka 2023, (pp. 23-29). National Library and Documentation Services Board.

# இலக்கியச் செயற்பாட்டினூடாக சமூகப் பிணைப்பினை ஏற்படுத்திவரும் "நிலா முற்ற நிகழ்வு"

ம.பிரகாஷ்*

## அறிமுகம்

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்குகின்ற பேத்தாழை பொது நூலகமானது 2011 மார்கழி 10ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நூலக சேவையினைத் திறம்பட ஆற்றி வருவதுடன், சமூகம் சார் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்தவகையில், பல்லின சமூகங்கள் வாழ்கின்ற இப்பிரதேசத்தில் கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட யுத்த சூழ்நிலை, அதன் காரணமாக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் போன்றவற்றின் தாக்கங்களால் சமூகங்களிடையேயான உறவில் பாரிய விரிசல்கள் ஏற்பட்டிருப்பதுடன், நம்பிக்கையீனங்களும் புரையோடிக் காணப்படுகின்றன. இத்தகைய காலச் சூழலில், குறித்த சமூகச் சூழலிடையே அறிவுப் பொக்கிசமாக மிளிர்ந்து கொண்டிருக்கின்ற பேத்தாழை பொது நூலகத்திற்கும் அதன் விபுலானந்தர் வாசகர் வட்டத்திற்கும், சமூகங்களிடையேயான விரிசலினை தகர்த்தகற்ற வேண்டிய பாரிய பொறுப்பு இருந்தது.

அதனடிப்படையில் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த வாசகர்களையும், பிரதேசவாசிகளையும் ஒன்றுதிரட்டி ஒரு பொதுவெளியில் ஏற்றத் தாழ்வுகள், பாகுபாடுகள் அனைத்தையும் புறந்தள்ளி, ஒரு பொது விடயத்தினை பேசச் செய்வதனால் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என்பதனை பிரதான நோக்கமாகக் கொண்டு 'நிலா முற்றம்' என்கின்ற இலக்கிய சங்கம நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. அனைவருக்கும் பொதுவான இலக்கியங்களை நூலக முற்றத்தில் பௌர்ணமி இரவிலே பேசுவதென தீர்மானிக்கப்பட்டது. கால ஓட்டத்தில் இலக்கியங்களை மாத்திரமன்றி, கலை நிகழ்வுகளையும் உள்ளீர்த் துக்கொண்டு சூழவுள்ள சமூகங்களையும் கடந்து 40 மாதங்களாக அகிலமெங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது இந்த 'நிலா முற்றம்'.

## செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்

பேத்தாழை பொது நூலகத்தின் விபுலானந்தர் வாசகர்வட்டமானது தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த வாசகர்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்ற காரணத்தினால் குறித்த செயற்றிட்டத்தினை ஆரம்பிப்பதில் சிரமங்கள் காணப்படவில்லை. விசேடமாக இவ்வாசகர்வட்ட உறுப்பினர்கள் அனைவரதும் பெரு முயற்சியே இத்திட்டத்தின் வெற்றிக்கு வித்திட்டது எனலாம்.

முதற்கட்டமாக எம்மிடம் தோற்றம் பெற்ற இந்த சிந்தனை தொடர்பில் தெளிவூட்டி தாய் நிறுவனமான கோறளைப் பற்று பிரதேச சபையிடமிருந்தும், இப்பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரிட மிருந்தும் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து முதலாவது 'நிலா முற்ற' இலக்கிய ஒன்று கூடலுக்கான ஆலோசனைக் கலந்துரையாடலொன்று வாசகர்வட்ட உறுப்பினர்களிடையே நடாத்தப்பட்டது.

*Corresponding author: ம.பிரகாஷ், பேத்தாழை பொது நூலகம், கோறளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை, மட்டக்களப்பு, இலங்கை. Email: mpragash5@yahoo.com

அதன் தீர்மானத்திற்கமைய மறைந்த எழுத்தாளர்களான அமரர்.திருமதி பத்மா சோமகாந்தன், மற்றும் அமரர். டொமினிக் ஜீவா ஆகியோரின் படைப்புலகு தொடர்பான கலந்துரையாடலாக முதலாவது நிலா முற்றத்தினை நடாத்துவதாக தீர்மானித்து, அதற்கான அழைப்பினை ஒரு வாரத்திற்கு முன்பதாகவே பேத்தாழை பொது நூலகத்தின் உத்தியோகபூர்வ முகப்புத்தக பக்கத்தினூடாக பதிவிட்டதோடு, வாசகர்களின் கையடக்கத் தொலைபேசிகளுக்கும் குறுஞ்செய்திகளாக அனுப்பி வைக்கப்பட்டது.

பௌர்ணமி தினமான 28.03.2021 அன்று மாலை 6.30 மணிக்கு நூலக முற்றத்தில் தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த இலக்கிய ஆர்வலர்கள் பலரின் பங்குபற்றுதலுடன் முதலாவது நிலா முற்ற நிகழ்வானது வெற்றி கரமாக நடாத்தப்படடது. வட்ட வடிவிலே தரையிலே அமர்ந்துகொண்டு வடையுடன் இஞ்சி கலந்த தேநீரும் அருந்தியவாறு ஒவ்வொருவராக தமது கருத்துக்களைப் பரிமாறியபோது, இந் நூலகத்தினது நோக்கம் படிப்படியாக சாத்தியமாகும் என்கின்ற அசைக்கமுடியாத நம்பிக்கை விபுலானந்தர் வாசகர் வட்டத்தினரிடையே துளிர்விட ஆரம்பித்தது. குறித்த நிகழ்வினை காணொளியாக பதிவு செய்து நூலகத்தினுடைய https://www.facebook.com/PethalaiPublicLibrary என்கின்ற உத்தியோக பூர்வ முகப்புத்தக பக்கத்திலும் Pethalai Public Library-YouTube என்கின்ற Youtube பக்கத்தினூடாகவும் பகிரப்பட்டது. இதன் காரணமாக உள்நாட்டில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலும் எமது நிலா முற்றத்திற்கான ஆதரவு சமிக்ஞைகள் தென்பட ஆரம்பித்தது.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

படைப்பாளிகளை மாத்திரமின்றி, அவர்களது படைப்புக்கள் மீதான வாசிப்பு அனுபவங்களையும் இந்த நிலா முற்றத்தினூடாக பகிர்ந்து வருவதனால் வாசகர்களின் குறித்த படைப்புக்கள் மீதான வாசிப்பார்வம் அதிகரித்திருப்பதனை அவதானிக்க முடிகிறது. அத்தோடு இப்பிரதேசத்து எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களின் படைப்புக்கள் தொடர்பாகப் பேசும்போது அவர்கள் தமக்கான புதியதொரு அங்கீகாரம் கிடைப்பதாக உணர்கின்றனர். மேலும் பல புலம்பெயர் எழுத்தாளர்கள் தங்களது நூல்களையும் நிலாமுற்றத்தில் பகிருமாறு எங்கள் நூலகத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். இதுவரை நடாத்தப்பட்டுள்ள 40 நிலாமுற்றங்களிலும் அறுபதிற்கும் மேற்பட்ட எழுத்தாளர்களும், அவர்களது படைப்புக்களும் பகிரப்பட்டதோடு, பிரதேசத்தின் பழமையான வாழ்வியல் அம்சங்களும் இளைய தலைமுறையினருக்கு கடத்தப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, இதுவரை எமது நூலகத்தின் வாசகர்களாக மாத்திரம் இருந்த பல மாணவர்கள் இன்று இந்த நிலா முற்றத்தினூடாக உரையாளர்களாகவும், விமர்சகர்களாகவும் பரிணமித்திருப்பதோடு, புதிய நூல்களை படைக்கும் எழுத்தாளர்களாகவும் மாறியிருப்பது இந்நூலகத்திற்குக் கிடைத்த பெரும் வெற்றியாக கருதப்படுகிறது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

இலக்கிய செயற்பாட்டின் ஊடாக எமது பிரதேசத்திலுள்ள அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து மகிழ்ச்சியான ஒரு சமூகக் கட்டமைப்பினை உருவாக்கும் நோக்கோடு இந்நூலக வாசகர் வட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த 'நிலா முற்ற நிகழ்வு' அனைவரின் ஆதரவுடனும் மிகவும் சிறப்பாக வெற்றி நடை போட்டு வருகிறது. அது போலவே, வளர்ந்து வரும் புதிய படைப்பாளிகளுக்கும் கைகொடுத்து அவர்களது ஆக்கங்களையும் வெளியுலகுக்கு அறிமுகம்செய்து அதற்கான அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொடுக்கின்றது.

இத்தகைய செயற்பாடு கால ஓட்டத்திற்கு ஈடுகொடுத்து புதிய, பல மாற்றங்களுடன் வியாபித்து வளர்வதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் சீராக கிடைக்கும் என்கின்ற அசைக்கமுடியாத நம்பிக்கை இந்நூலகத்திற்கு இருக்கின்றது.

இனங்களிடையேயான நல்லுறவினை நோக்காகக் கொண்டு எம்மால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலாமுற்றம் எனும் இலக்கிய சங்கம நிகழ்வு இன்று அதன் நோக்கினை அடைந்து வருவதுடன் நூலகத்திற்காக அன்பளிப்புச் செய்யப்படும் நூல்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்றது. கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட கொவிற் தொற்று அதனூடாக ஏற்பட்ட பல சவால்களுக்கு முகங் கொடுத்தவாறு ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வானது தொடர்ச்சியாக ஒவ்வொரு பௌர்ணமியிலும் தவறாது நடைபெற்று வருகின்றது. குறிப்பாக கொவிற் மற்றும் மழை காலப்பகுதியில் zoom செயலியினூடாக இடையறாது இந்த நிலா முற்றம் இந் நூலகத்தினால் நடாத்தப்பட்டு கடந்த ஆனி மாத பௌர்ணமியுடன் 40 முற்றத்தினைக் கடந்திருக்கின்றது. பேத்தாழை பொது நூலகத்தின் உத்தியோகத்தர்களினதும், நூலகத்தினுடைய விபுலானந்தர் வாசகர் வட்டத்தினதும் நிதிப் பங்களிப்புடன் கூடிய முழு பங்குபற்றுதலினாலேயே இப்பொது நூலகத்தின் ஏனைய செயற்பாடுகளைப் போன்று இந்த நிலா முற்றமும் இடையறாது இடம்பெற்று வருகின்றது.

கோறளைப்பற்று பிரதேச மக்களின் ஆதரவுடன் இந்த நிலாமுற்ற நிகழ்வானது பேத்தாழை பொது நூலகத்தினால் தொடர்ச்சியாக நடாத்தப்படுவதன் மூலம் வளர்ந்துவரும் புதிய படைப்பாளிகளுக்கு கைகொடுத்து, அவர்களது ஆக்கங்களையும் வெளியுலகுக்கு அறிமுகம் செய்து, அதற்கான அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** வாசகர் வட்டம், பொதுசன நூலகசேவைகள், இலக்கியத்திறன்

# மாணவர்களின் எழுத்தறிவை விருத்தி செய்வதற்கான விசேட முகாம்

ரா.அச்சலா சுகந்தினி*

**அறிமுகம்**

ஆரம்ப காலங்களில் அறிவேடுகளைத் தேக்கி வைக்கும் பண்டகசாலைகளாக உருவெடுத்த நூலகங்கள் தற்காலத்தில் அறிவை தேடிவரும் அனைத்து வாசகர்களுக்கும் அறிவுத் தாகத்தைத் தீர்த்துவைக்கும் நிலையங்களாக உருவெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. நூலகங்களைக் காட்டிலும் விரைவாகவும், துல்லியமாகவும் தகவல்களை அள்ளித்தரும் சாதனங்களாக இணையத்தளங்கள் உருவெடுத்துள்ளபோதிலும் திருத்தமான, நம்பகத்தன்மையுள்ள தகவல்களை ஆதாரபூர்வமாக வழங்குகின்ற நிலையங்களாக நூலகங்கள் விளங்குவதால், இவை சமூகத்தோடு இணைந்த செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டியதோடு வருங்கால சமுதாயத்தின் கல்வியறிவினை விருத்தி செய்வதிலும் பங்கெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

அந்த வகையில் ஏறாவூர் நகர சபையினால் பரிபாலிக்கப்பட்டுவரும் அம்பாள் பொது நூலகமானது ஏறாவூர் பிரதேசத்திலுள்ள மட்/ ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவில் மெல்லக் கற்போராக அடையாளம் காணப்பட்ட மாணவர்களுக்கான விசேட வாசிப்பு முகாமினை நடாத்தி வருகின்றது. இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கங்களாக ஏறாவூர் நகரசபை ஆள்புல எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுததுதல், சிறந்த கல்விச்சமூகத்தை உருவாக்குதல், கல்வியறிவில் பின்தங்கியோர் சதவீதத்தைக் குறைத்தல், சிறுவர்களுக்கான அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் அக்கறை செலுத்துதல், நாட்டினது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் பங்களிப்புச் செய்தல் போன்றன இனங்காணப்பட்டுள்ளன.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

இவ்வாசிப்பு முகாமினை நடாத்துவதற்காக ஏறாவூர் நகர சபை பொது நூலகங்களில் கடமையாற்றும் நூலகர்கள், நூலக உத்தியோகத்தர்கள், பாடசாலைகளிலுள்ள ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கு சிறந்த வளவாளர்களைக் கொண்டு Literacy Boost சம்பந்தமான பயிற்சியாளர் பயிற்சிநெறி தொடராக நடாத்தப்பட்டு அதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் குழாமின் உதவியோடு நூலக உத்தியோகத்தர் களால் மட்/ ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு ஆரம்பகட்ட Flat Assessment நடாத்தப்பட்டது. இதன்போது உலக தரிசனத்தாரின் அனுசரணையுடன் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (Save the Children) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நியம முறையிலான கருவி பயன்படுத்தப்பட்டு, அடையப்பட வேண்டிய தேர்ச்சி மட்டத்திலிருந்தும் குறைந்த வெளிப்பாட்டினைக் காட்டிய 35 மாணவர்கள் மெல்லக் கற்போராக அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் வாசிப்பதிலும், வாசித்தவற்றைக் கிரகிப்பதிலும், அப்பகுதிகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பதிலும் பின்தங்கிய மாணவர்களாக இருந்தனர்.

* *Corresponding author*: ரா.அச்சலா சுகந்தினி, ஏறாவூர் நகரசபை நூலகம், ஏறாவூர். மட்டக்களப்பு, இலங்கை. Email: asugandini@gmail.com

இவர்களுள் 15% மானோர் சிறந்த கல்விப் பின்புலம் கொண்ட பெற்றோரின் பிள்ளைகளாக இருந்தமை இதன்போது அவதானிக்கப்பட்டது. இவர்களுள் சிலர் மிகவும் விரைவாக வாசிப்பை முன்னெடுத்த போதிலும் வினாக்களுக்கு விடையளிப்பதில் சிரமத்தை எதிர்நோக்கினர். இதுகுறித்து அம்மாணவர் களோடு நேரடித் தொடர்பிலுள்ள வகுப்பாசிரியர்களோடு கலந்துரையாடியபோது இவர்கள் கவனயீனம் காரணமாகவே அவ்வாறான தவறுகளை விடுவதாக அறியமுடிந்தது. முற்றிலும் வாசிப்பதற்கு சிரமப்பட்ட மாணவர்கள் குறித்து ஆராய்ந்தபோது அவர்களின் குடும்பச்சூழலில் காணப்படும் பிரச்சினைகள், போசாக்கற்ற உணவுகள், பெற்றோர் பிரிந்திருத்தல் போன்ற இன்னோரன்ன காரணங்களால் அவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இம்மாணவர்கள் பாடசாலைச் சூழலைவிட வெளிச்சூழலையே அதிகம் விரும்புபவர்களாகக் காணப்பட்டதால், அவர்களோடு சிறந்த நட்புறவு கொண்டு நீதிக்கதைகள், சித்திரக்கதைகள், பாடல்கள், விளையாட்டுக்கள், குறும்படங்கள், சித்திரங்கள் மூலம் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பத னூடாக இவர்களது வாசிப்புத்திறனை மேம்படுத்துவதற்காக அம்பாள் பொது நூலகத்தில் வாரத்தில் மூன்று நாட்கள் எனும் அடிப்படையில் தொடர்ச்சியாக இம்முகாமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாசிப்பு முகாமானது விளையாட்டு நேரம், பாடல் நேரம், கதை நேரம், செயற்பாட்டு நேரம், தயாரி யுங்கள் கொண்டு செல்லுங்கள், குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளுங்கள் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கியதாக முகாமொன்றிற்கு 90 நிமிடங்கள் என்ற அடிப்படையில் செயற்பாட்டுத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன. மாணவர்கள் விளையாட்டினூடாகக் கற்றுக்கொள்ளும் வகையிலும், எவ்வித அழுத்தமுமின்றி சுயமாக ஒரு விடயத்தைக் கற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் வகையிலுமே இம்முகாமின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

பயிற்சியாளர் பயிற்சிநெறியில் பயிற்றப்பட்ட நூலக உத்தியோகத்தர்கள் மூவர் இம்முகாமில் வளவாளர்களாக கலந்து கொண்டனர். முதலாம் கட்டமாக மெல்லக் கற்போராக அடையாளம் காணப்பட்ட மாணவர்களின் பெற்றோருடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. 29 பெற்றோர்கள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில் இவ்வாசிப்புமுகாமின் நோக்கங்களும், வடிவமைக்கப்பட்ட முகாமின் செயற்பாடுகளும் அவர்களுக்கு நன்கு தெளிவூட்டப்பட்டதன் பின்னர் முகாம்கள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டன. முகாமின் செயற்பாடுகள் மாணவர்களைக் கவரும் வண்ணமும், இலத்திரனியல் தொழில்நுட்பம் கலந்த வகையிலும் வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. இயற்கைச் சூழலிலும், அம்பாள் பொது நூலக முன்றலிலும் இம்முகாம்கள் தொழில்நுட்ப சாதனங்களின் உதவியோடும், வளவாளர்களின் தொழில்சார் நிபுணத்துவத்துடனும் திறம்பட நடாத்தப்பட்டு வருகின்றன.

**செயற்றிட்ட அடைவுகள், மற்றும் விதப்புரைகள்**

இருபது மாணவர்கள் தொடர்ச்சியாக இம்முகாமில் பயிற்சிபெற்று வருகின்றனர். ஏனையோர் பிரத்தியேக வகுப்புக்கள், கவனயீனம் காரணமாக இம்முகாமிற்குத் தொடர்ச்சியாக வருகை தராதிருந்தமை அவதானிக்கப்பட்டு சமூக நலன்விரும்பிகளினூடாக இம்மாணவர்களின் வருகையை அதிகரிப்பதற்கு இலவச கற்றல் சாதனங்களை வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான விசேடமுகாமின் மூலமாகப் பயிற்சி பெற்ற மாணவர்கள் சிறுகதைகள், சிறுவர் பாடல்களை சுயமாக ஆக்குவதற்கும், சித்திரங்கள் மூலமாகத் தமது சுய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குமான திறன்களைத் தமதாக்கிக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். தொடர்ச்சியாக வருகை தரும் 15 மாணவர்கள் தமது உள்ளக்கிடக்கைகளை சித்திரங்களாகவும், பாடல்களாகவும், கதைகளாகவும் வெளிப்படுத்துவதில் முனைப்புள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவர்களின் கற்றல் தேர்ச்சியை மேம்டுத்துவதற்கான ஒரு களமாக இவ்விசேட முகாம்கள் தொழிற்படுகின்றன. இம்முகாமினூடாக வாசிப்பு, கிரகித்தல், எழுத்துப் பயிற்சி ஆகிய திறன்களை மேம்படுத்தி, அதனூடாக மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதைக் குறைப்பதோடு, கல்வியறிவில் பின்தங்கியோர் வீதத்தைக் குறைத்து அறிவினால் உயர்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

குறித்த பாடசாலையின் அதிபர், ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள், இலக்குமு மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோருடனான நேர்காணலின் அடிப்படையில் பொது நூலகங்களால் முன்னெடுக்கப்படும் இத்தகைய விசேட முகாம்கள் மாணவர்களின் எழுத்தறிவை விருத்தி செய்வதற்கும், கல்வித்திறனை அதிகரிப்பதற்கும், தனிநபர் ஆளுமைகளை விருத்தி செய்வதற்கும், சமூக வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், மாணவர்களின் கற்றலை வளர்ப்பதற்கும், கல்வியறிவை ஊக்குவிப்பதற்கும் உதவி புரிகின்றன என்பது புலனாகின்றது.

இத்தகைய முகாம்கள் சிறந்த முறையில் திட்டமிடப்பட்டு, ஒவ்வொரு முகாமுக்கும் ஏற்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டு, வளவாளர்களுக்கு உரிய முறையில் பயிற்சி வழங்கப்பட்டு பயிற்சி பெற்ற வளவாளர்களைக் கொண்டு முறையான பயிற்சிகள் நூலக உத்தியோகத் தர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமெனப் பரிந்துரை செய்யப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** கல்வியறிவு, எழுத்தறிவு, நூலகங்கள், மெல்லக்கற்கும் மாணவர்கள், வாசிப்புப் பழக்கம்

# Enhancing Literacy and Uncovering Hidden Talents in Sri Lankan Prisoners: A Project in Welikada Prison

H.W.K.Sajeewani*

## Introduction

People are imprisoned for committing a criminal offense and punished after being convicted in front of the law. It is one of the responsibilities of the prison administration to rehabilitate and socialize the imprisoned people after transforming them into decent. Education, rehabilitation, and effective use of time can be used as a method for socialization. The optimum rehabilitation process can be done by developing literacy skills, spiritual harmony, and artistic skills of prison inmates. This can contribute to their reintegration into society and overall public safety. The objectives of the project were to improve literacy skills among inmates; to identify and develop their hidden personal skills that can lead to suitable employment opportunities after release; to develop the self-confidence of the inmates; to strengthen community and family relationships with the inmates by having positive attitudes towards them in the entire society.

## Project plan and Methods

In the discussions held with the Prison Commissioner and Control and Rehabilitation Officer at the Welikada Prison Headquarters, it was introduced that there are inmates with different talents. Among the inmates introduced in this way, an inmate who could write books and has written manuscripts for several books was identified. Interviews and conversations were conducted with him. On the approval of the Commissioner of Prisoners Administration/ Rehabilitation and Skills Development, five manuscripts were submitted to Nanila Publications Institution. They agreed to publish one manuscript first after submitting the manuscripts to a panel of writers at their publishing institute. Nanila Publications Institution published the manuscript of the novel as a book, titled "Anusaya Aasawa"(2019). The publishing institute organizes awards for the books published by them every year. This novel was also nominated for the same awards. The panel of judges recommended this prison inmate's novel as the best novel published by the publishing institute for that year. Accordingly, this book won the "Nanila Prakashana Award" for the best novel among the novels published that year. Plans for enhancing literacy skills to assess individual needs; Provide tailored education programs; Hire and train skilled educators; Incorporate technology; create a supportive learning environment; Engage inmates in program design and promote family and community involvement, are in progress.

**Corresponding author*: H.W.K.Sajeewani, Gampaha Wickramarachchi University of Indigenous Medicine, Gampaha, Sri Lanka. Email:kusala@gwu.ac.lk

**Findings and Discussion**

It was revealed that it is essential to direct prison inmates to a proper rehabilitation system. Thus, the hidden talents of prisoners were identified. It was realized that the development of the inmates' reading, writing, and literary arts skills was taking place and there was a remarkable growth in the interest and effort shown by the other inmates. By participating in the ceremony of receiving the best novel award, for his book, personal motivation, and self-confidence developed in him, and he was respected by society and his family.

**Conclusions and Suggestions**

By setting an example to other prisoners, it was possible to recognize that they too have talents, self-strength, and self-confidence. This made it clear that prison inmates also have many opportunities in society and that they too are valuable members of society. It was concluded that this writing work also helped to remove negative thoughts, frustration, unease about society, etc.

Projects like these, not only improve the inmates' reading, writing, literary, and artistic skills but also teach them essential life lessons. It is appropriate to implement such programs to convince that they are also indispensable people in society and can contribute to the social, cultural, and economic development of the country by introducing projects that can identify the talents of the inmates in all prisons, giving them proper guidance for that, and taking necessary steps to convince them that education can transform their lives.

**Keywords:** Hidden talents, Prisons, Literacy skills, Information Literacy, Sri Lanka

**References**

Lehmann V.L.&Lehmann, V. L. J. (2020). Guidelines for library services to prisoners. *IFLA Professional Reports*/translated Gamage Pramila, Walimuni, Sunil. National Library and Documentation Services Board.

Lehmann, V.& Locke, J. (2005). Guidelines for Library Services to Prisoners. *IFLA Professional Reports, No. 92*. International Federation of Library Associations and Institutions.

# யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் விழிப்புலனற்றோர் பிரிவு : ஒரு பார்வை

சி.அனுசியா[1*], வி.பிரபாகர்[2]

**அறிமுகம்**

உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிபர தரவுகளின்படி, உலகளவில் சுமார் 39 மில்லியன் பேர் பார்வையற்றவர்களாக காணப்படுகின்றனர். அவர்களில் 82%மானோர் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் பெரும்பாலானோர் குழந்தைப் பருவத்திலோ அல்லது அதன் பின்னரான வளரிளமைப் பருவத்திலோ சுவாச மற்றும் கண் தொற்று நோய்கள் அல்லது தவறான மருத்துவ சிகிச்சை போன்ற காரணங்களால் பார்வையை இழந்தவர்களாவர். இதனால், இவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக செயற்பாடுகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் மட்டுப் படுத்தப்பட்டிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. முன்னைய காலத்தில், பார்வையற்றவர்கள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும், தொழில் புரிவதும் மிகப்பெரும் சவாலாக காணப்பட்டது. எனினும், நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் சமூக மாற்றங்கள், பார்வையற்றவர்களின் வாழ்க்கையில் புதிய வழிகளைக் காட்டியுள்ளன. இதன் ஒரு அங்கமாக, யாழ் மாநகர சபையும், யாழ் விழிப்புலனற்றோர் சங்கமும் இணைந்து, யாழ்ப்பாண பொதுசன நூலகத்தில் பார்வையற்றோருக்கான பிரிவொன்றை 27.05.2015 அன்று திறந்து வைத்தனர். இப்பிரிவு, பார்வையற்றவர்களுக்கு கல்வி மற்றும் தகவல் அணுகல் வாய்ப்புகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கான சமூகமயமாக்கல் செயற்பாடுகளிலும் முக்கிய பங்கை வகிக்கின்றது.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

யாழ்ப்பாண பொதுசன நூலகத்திலுள்ள பார்வையற்றோருக்கான விழிப்புலனற்றோர் பிரிவானது யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் அநுசரணையில் உருவாக்கப்பட்டதாகும். யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் சார்பில், இப்பிரிவிற்கு ஒரு கணினி தொகுதி, CD Player, Cassette Player, ABACUS போன்ற உபகரணங்கள் 2015இல் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன், பார்வையற்றோருக்கான பிரெயில் நூல்களும் (தமிழில் 10 நூல்களும், ஆங்கிலத்தில் 30 நூல்களும்) யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தன. இந்த உபகரணங்களும் தகவல் வளங்களும் பார்வையற்றவர்களின் கற்றல் மற்றும் தகவல் தேடல் செயற்பாடுகளுக்கு பெரிதும் துணைபுரிகின்றன.

இவை தவிர, இணையம், NVDA மென்பொருள், NHM Writer போன்ற நவீன தொழில்நுட்ப வசதி களும் இந்தப் பிரிவில் காணப்படுகின்றன. இவை பார்வையற்றோரின் தகவல் தேடலை எளிதாக்குகின்றன.

யாழ்ப்பாண பொதுசன நூலக விழிப்புலனற்றோர் பிரிவில் பார்வையற்றவர்களுக்கு பிரெயில் எழுத் துக்களையும், கணினி செயற்பாடுகளையும் கற்பிப்பதற்காக திரு. க.சிவகுமார் என்ற உத்தியோகத்தர் 2016இல் பணிக்கு அமர்த்தப்பட்டார். இவரும் விழிப்புலன் இழந்தவர் ஆவார். இவர் வழங்கும் பயிற்சிகள் மூலம், பார்வையற்றோர் தகவல் தொழில்நுட்பத்தில் தமது திறமைகளை வளர்த்துக்கொண்டு, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு

[1*] *Corresponding author*: சி.அனுசியா, யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், யாழ்ப்பாணம், இலங்கை. Email: akskavi12@gmail.com

[2] நூலகம், சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி, இலங்கை.

மாதமும், 30 முதல் 40 வரையிலான பார்வையற்றோர் இப்பிரிவின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகை தருகின்றனர். இந்த பிரிவு தொடர்ந்து வெற்றிகரமாக செயல்படுவதற்கான அடிப்படையாக இது அமைவதுடன், யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்ளைச் சேர்ந்த பார்வையற்றோருக்கான இலகுவான அணுகலைக்கொண்ட பொதுவான மையமாகவும் காணப்படுகிறது.

**அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தில் இப்பிரிவானது ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பெருமளவான பார்வையற்றவர்கள் வருகை தந்து தன்னம்பிக்கையுடன் இந்த சேவைகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லைக்குள் மட்டுமல்லாது, வவுனியா, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களிலிருந்தும் பலர் இங்கு வருகை தந்து சேவைகளைப் பெறுகின்றனர். பல பார்வையற்றோர் இப்பிரிவின் வசதிகளைப் பயன்படுத்தி, உயர்கல்வியை முடித்து, சிறந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்காலத்தில், இப்பிரிவின் தொழில்நுட்ப வசதிகளை் மேம்படுத்தி, புதிய பல செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். பார்வையற்றோருக்கான உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குவதுடன், பல்வேறு கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகளையும் செயற்படுத்த வேண்டும். மேலும், கலைத் துறையில் ஆர்வமுள்ள பார்வையற்றோரின் திறமைகளை வெளிக் கொணரும் வகையில் தனியான பயிற்சி வகுப்புகளை ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

மேலும், பார்வையற்றோரின் பெற்றோர்கள் மற்றும் சமூக மட்டத்தில் இவ்விழிப்புலனற்றோர் பிரிவின் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கேற்ப, இப்பிரிவின் சேவைகளையும் மேம்படுத்துவது அவசியமாகும். மேலும், இப்பிரிவின் சேவைகளை ஏனைய கல்வி நிறுவனங்களுக்கும் விஸ்தரித்து, அங்கு கல்வி பயிலும் மாணவர்களும் பயன்பெற வழிசமைக்கவேண்டும்.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் விழிப்புலனற்றோர் பிரிவு, பார்வையற்றோரின் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவின் சேவைகள் மேம்படுத்தப்படுவதன் மூலம், பார்வை யற்றோர் சமூகத்தில் தன்னம்பிக்கையுடனும், சுயதேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் வாழ்வதற் கும் வழிகாட்டும் எனலாம். இப்பிரிவு ஆரம்பித்தகாலம் தொடக்கம் பார்வையற்றோரின் கல்வி, மற்றும் தொழில் தொடர்பில் அவர்களின் திறமைகளை மேம்படுத்தி, சமூகமயமாக்கல் செயற்பாடுகளையும் முன் னெடுத்து வருகிறது. யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் இவ்விழிப்புலனற்றோர் பிரிவின் சேவைகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு, எதிர்காலத்தில் மேலும் பல பார்வையற்றோரின் வாழ்க்கையை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படும் இச்செயற்றிட்டம் தொடர்பில் சில பரிந்துரைகள் முன் வைக்கப்படுகின்றன. இவ்விழிப்புலனற்றோர் பிரிவின் இடவசதியானது அதிகரிக்கப்படுவதுடன், பிரெயில் தட்டச்சு இயந்திரம், ஸ்கேனிங் இயந்திரம் போன்றவற்றின் உதவியுடன் தொழில்நுட்ப வசதிகளும் மேம்படுத்தப்படல் வேண்டும். கலையார்வம் கொண்டவர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடாத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். பெற்றோர்கள் மற்றும் சமூக மட்டத்தில் இவ் விழிப் புலனற்றோர் பிரிவின் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.

**திறவுச்சொற்கள்:** விழிப்புலனற்றோர், யாழ்ப்பாண பொதுசன நூலகம், பார்வையற்றோர்-நூலக சேவைகள்

# South Eastern Regional Library & Information Network (SERLIN) of Sri Lanka

M.M.Mashroofa[1*], M.M.Rifaudeen[2], M.C.M.Azwer[3], A.M. Nahfees[4], S.L.M.Sajeer[5] and M.J.A. Saajith[6]

## Introduction

South Eastern University of Sri Lanka (SEUSL) is located in the Ampara district in which the public, school, and college libraries function with poor infrastructure, human resources, and information sources. The libraries of SEUSL are fully fledged libraries with enriched collections of print and electronic resources, modern information services, space, professionally qualified library academics/ professionals, paraprofessionals, a digital library, an Online Public Access Catalogue (OPAC), and automated Library Management System. As a community outreach, SEUSL libraries extended their services to the libraries across the Ampara district by establishing a Library & Information Network under the umbrella of SEUSL libraries. This network has been named as "South Eastern Regional Library & Information Network (SERLIN) of Sri Lanka". According to Chatterjee (2016), "Information /Library Networks refer to collaborative systems developed by the cooperation of multiple libraries or information centers. These networks can be local (LAN) or wide area (WAN), connecting institutions within a small or large geographical area respectively, to pool resources and provide access to a wider range of information sources".

The main objective of this project is to bring all the libraries in Ampara district to a common platform to share the available resources, expertise and services among members of the network.

## Project plan and Methods

The special senior staff meeting of SEUSL libraries held on 29th September 2022 and decided to formulate this network. Formal approval was obtained from the University, before implementing the project.

Librarians of schools, colleges, public, and administrators such as Zonal Directors of Education, Secretaries of Predeshya Saba and Municipal Councils, and Principals of Colleges of the coastal belt of Ampara have been invited for a brainstorming session through which all stakeholders were given a clear picture about the network. Name of the network, objectives of the network, future activities were discussed and executive committee of the network was formed as the result of the brainstorming session.

---

[1*] *Corresponding author:* M.M. Mashroofa, Library, South Eastern University of Sri Lanka, Sri Lanka. Email: mashroof@seu.ac.lk

[2,3,4,5,6] Library, South Eastern University of Sri Lanka, Sri Lanka.

The web page for SERLIN was created and linked; Financial, economic, environmental, and social sustainability were discussed; Included strategies and activities in the SEUSL Libraries' strategic plan; Membership applications were circulated and recruited member libraries to SERLIN; SERLIN was officially launched at the 27th Founders Day celebration of the South Eastern University of Sri Lanka, held on 25th October 2022.

**Findings and Discussion**

On the establishment of the SERLIN network, the following activities were accomplished:

Two capacity-building programs were conducted by the SEUSL Library for the SERLIN member libraries; with the support of YM Trust Australia, 2,399 books were donated to 29 member libraries of this network; SERLIN members were invited to 'Book Talks' and an exhibition conducted by SEUSL Library.

Another book donation will be conducted in November 2024 and all necessary arrangements have been made. All member libraries are requested to collect materials to preserve the cultural heritage of the Ampara district. Consequently, preservation and conservation techniques will be implemented. Individual digital libraries will be established in the interested member libraries to preserve the rare materials.

SERLIN has proposed to promote the Oluvil Public Library and develop it as a 'Model Public Library' for the region as one of the activities for the year 2025/2026. Furthermore, initiatives have been taken to train staff of the member libraries on KOHA open-source library management system.

**Conclusion and Suggestions**

Libraries of the South Eastern University of Sri Lanka have a responsibility in developing the regional libraries across Ampara as the libraries located in this area are poorly equipped, with less facilities, poor infrastructure, and managed without qualified staff. Implementing a network among the libraries of Ampara district is well underway, at present. Considering the status of these libraries, SERLIN network has planned its activities and proceeding with great success.

Ampara district still has several rural villages that have less opportunity to enjoy and utilize the state-of-the-art facilities which exist in urban areas. So far, libraries in the coastal belt (Tamil-speaking area) have not been included in the project, and as the next step, this network should be extended to other areas, too.

**Keywords:** SERLIN network, SEUSL, Information services.

**References**

Chatterjee, A. (2016). Information Systems and Networks, *Elements of Information Organization and Dissemination,* 353-426. https://doi.org/10.1016/B978-0-08-102025-8.00022-3

Onwuchekw, E. (2015) Resource Sharing and Networking in Library and Information Centres in Africa, *Encyclopedia of Information Science and Technology,* Third Edition: (pp 3870 - 3881). Information Science Reference (an imprint of IGI Global)

Rifaudeen, M.M.(2006), Does the "Sri Lanka scientific-technical information network" (SLSTINET) stands to serve the expectations of its network Members: a critical evaluation, *Journal of Management*. IV, (1), 32-42.

Zhang, G., Wei, F. & Wang, P. (2023), "Opening the black box of Library Hi Tech: a social network and bibliometric analysis", *Library Hi Tech*. https://doi.org/10.1108/LHT-12-2022-0556

## Panel of Reviewers

1. Mr.M.M. Rifaudeen
   Librarian
   South Eastern University of Sri Lanka.

2. Dr.(Mrs).T.Sritharan
   Senior Assistant Librarian
   University of Colombo.

3. Dr. (Ms) C.N.K. Alahakoon
   Deputy Librarian
   University of Peradeniya.

4. Mrs. H.N.K. Dissanayake
   Senior Assistant Librarian
   University of Peradeniya.

5. Mr.S.Shanmugathasan
   Senior Assistant Librarian
   University of Vavuniya.

6. Mr.M.N.Ravikumar
   Senior Assistant Librarian
   Eastern University, Sri Lanka.

7. Mr. S. Santharooban
   Deputy Librarian
   Eastern University, Sri Lanka.

8. Mrs.T.Janen
   Senior Assistant Librarian
   University of Jaffna.

9. Mrs. G.Navirathan
   Senior Assistant Librarian
   Eastern University, Sri Lanka.

10. Dr.S. Ketheeswaren
    Deputy Librarian
    University of Jaffna.

11. Dr.(Mrs).M.Visakaruban
    Deputy Librarian
    University of Jaffna.

12. Mr.R.Kupeshan
    Senior Assistant Librarian
    University of Jaffna.

13. Mrs.L.Umashankar
    Senior Assistant Librarian
    University of Jaffna.

14. Mr.A.M.Nahfees
    Senior Assistant Librarian
    South Eastern University of Sri Lanka.

15. Dr. M.M.Mashroofa
    Senior Assistant Librarian
    South Eastern University of Sri Lanka.

16. Mr. B. Prashanthan
    Senior Assistant Librarian
    Eastern University, Sri Lanka.

17. Mrs.L. Jegatheesparan
    Senior Assistant Librarian
    Eastern University, Sri Lanka.

# SYMPOSIUM ORGANIZING COMMITTEE MEMBERS

## Web, Media & Publicity Committee

Dr.S.Ketheswaren
Mr.M.Kokulan
Mr.R Thananchayan
Mrs.Y.Mathushanthini
Mr.S.Jeyabalan
Mr.B. Dhileeban
Mr.N.Nirainthan

## Publication Committee

Dr.(Mrs).K.Chandrasekar
Mrs.K.Murugathas
Dr.(Mrs).M.Visakaruban
Mr.M.Kokulan
Mr.R Thananchayan
Dr.S.Ketheeswaran
Mrs.G.Mayuran
Mrs.T.Janen
Mrs.T.Premnath

## Technical Programme Committee

Mrs.T.Janen
Miss.T.Sithamparabarathy
Mr.T.Umashankar
Mr.S.Lingarajah
Mr.K.Srimeanon
Mrs.T.Premnath
Mrs.S.Thavaselvam
Miss.N.Patkunarajah
Mrs.M.Sivashankar
Mrs.K.Iynkaran
Mr.V.Nishanth
Mrs.S.Shakthivel
Mr.R. Parthasarathy
Mr.K.Jegatheeswaran
Mr.N.Kantharupan

## Logistic committee

Mrs.L.Umashankar
Mr.R.Kupeshan
Mr.S.Sivarakavan
Mrs.A.Srikaran
Mrs.V.Selvaveerasingam
Mrs.T.Thanatheepan
Mr.N.Thayaparan
Mr.S.Vinopavan
Mr.S.Mahiran
Mr.G.Pirasanth
Mr.M.Mathialagan
Miss.N.Raveendran
Mr.M.Sasikaran
Mr. S.Sanseevan
Mr. J.Mayavan
Miss.J.Samuthra
Mr.T.Liyasuthan
Mr.M.Piraisoodan
Mr.S.Sivasarman
Mrs.K.Priyanka
Mr.S.Arigaran
Mrs.T.Thayaruban
Mr. K.Kajanan
Mrs.T.Kanthan
Mr.T.Thinesh

## Finance committee

Mrs.T.Janen
Mr.A.Sivanadarajah
Mrs.S.Parthipan
Mr.S.Nagendran
Mr.S.Sivashankar
Ms.A.Niranjani
Mrs.T.Premnath

# Sponsors

turnitin™

DMS®
DMS ELECTRONICS (PVT) LTD

BANK OF CEYLON
BOC
Bankers to the Nation

TECORA
CONSTRUCTION PVT LTD

PEOPLE'S BANK
Pride of the Nation

metropolitan
*Powered by the best*

d2
d2 Technologies (Pvt) Ltd

**MAIN SPONSER**

turnitin™

9 786246 150372